புதிய பாடத்திட்டம் 2007

# தமிழ் மொழியும் இலக்கியமும்

## தரம் 6



1871

ஆக்கம் :

க[illegible]ங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

L105310

தரம் 6

# தமிழ் மொழியும் இலக்கியமும்

## செயல் நூல்

**இந்நூல்:**

- தேசிய கல்வி நிறுவகத்தினால் 2007 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்படும் புதிய பாடத்திட்டத்திற்கமைய, கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் வழிகாட்டுதலுக்கு ஏற்ப வெளியிடப்பெற்ற பாடநூலில் உள்ள 22 பாட அலகுகளையும் தழுவியதாக உருவாக்கப் பெற்றுள்ளது.
- மாணவர்களின் அறிவு, திறன், மனப்பாங்கு விருத்திக்கான பல்தேர்வு வினாக்கள், கட்டுரை வினாக்கள், பயிற்சிகள் கொண்டது.
- அடிப்படை இலக்கண விதிகள், மொழிவளம், கலைச்சொற்கள், ஒப்படைகள், ஆண்டிறுதிப் பரீட்சை மாதிரி வினாத்தாள், செயல்களுக்கான விடைகள் அனைத்தும் கொண்ட செயல்நூல்.
- பழமொழிகள், மரபுத்தொடர்கள், உவமைத் தொடர்கள், தமிழில் கலந்துள்ள பிறமொழிச் சொற்கள் யாவும் பின்னிணைப்பாகத் தரப்பட்டுள்ளன.
- பரீட்சைகளில் உச்சப் புள்ளிகள் பெற உதவும் வழிகாட்டி.

ஆக்கம்:
இலக்கிய வித்தகர்,
**கவிஞர். த. துரைசிங்கம்** B.A (Hons.), Dip-in-Ed., S.L.E.A.S
கல்விப் பணிப்பாளர் (ஓய்வு)

வெளியீடு:
**லங்கா புத்தகசாலை,**
F.L. 1-14, டயஸ் பிளேஸ்,
குணசிங்கபுர, கொழும்பு - 12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலை : 150/-

## பதிப்புரை

புதிய கல்விச் சீர்திருத்தத்தின் அடிப்படையில் 2007 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்படும் புதிய பாடத்திட்டத்திற்கு ஏற்பப் பாடநூலில் உள்ள 22 பாட அலகுகளையும் உள்ளடக்கியதாக இச்செயல்நூல் உருவாக்கப்பெற்றுள்ளது.

ஆறாம் வகுப்பு மாணவர்களின் அறிவு, திறன், மனப்பாங்கைக் கருத்திற் கொண்டு உருவாக்கப் பெற்ற இந்நூலில் மாணவர்களின் செயற்பாடுகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. பாடத்திட்டத்தில், ஆசிரியர் கைந்நூலில் வழங்கப்பட்டுள்ள அத்தனை விடயங்களையும் உள்ளடக்கியதான செயல்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

முதுபெரும் கல்வியாளரும், நூற்றுக்கு மேற்பட்ட பாட நூல்களை ஆக்கியவரும், ஓய்வு பெற்ற கல்விப் பணிப்பாளருமான இலக்கிய வித்தகர், கவிஞர் த. துரைசிங்கம் இந்நூலை எழுதியுள்ளார். மாணவர் உலகின் பெருமதிப்புக்குரிய அன்னாருக்கு எங்கள் உளமார்ந்த நன்றி.

மாணவர்களும் பெற்றோர்களும் ஆசிரியப் பெருந்தகைகளும் இந்நூலை உவந்தேற்றுப் பயன் கொள்வரென எதிர்பார்க்கிறோம். நன்றி.

- **பதிப்பாளர்**


## நூல் விவரக்குறிப்பு

| | | |
|---|---|---|
| நூல் | : | தமிழ் மொழியும் இலக்கியமும் (செயல்நூல் - தரம் 6) |
| ஆசிரியர் | : | கவிஞர் த. துரைசிங்கம் |
| முதற் பதிப்பு | : | ஜனவரி, 2007. |
| பதிப்புரிமை | : | நூலாசிரியருக்கு |
| வெளியீடு, விற்பனை. | : | லங்கா புத்தகசாலை<br>F.L. 1-14 டயஸ் பிளேஸ்,<br>குணசிங்கபுர, கொழும்பு - 12.<br>தொலைபேசி : 2341942 |

**ISBN : 955-1013-91-3**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1

# ஈருருளிப் பயணம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. பின்வருவனவற்றில் ஒருசொல் பொருத்தமற்றது. அதன் கீழ்க் கோடிடுங்கள்.

அ) 1. ஞாயிறு 2. சூரியன் 3. கதிரவன்
4. பகலவன் 5. திங்கள்

4 ஆ) 1. இரவு 2. இரத்தல் 3. இராத்திரி
4. இரவி 5. இரக்கம்

இ) 1. உலகம் 2. பூமி 3. உலகு
4. நிலப்பகுதி 5. திசை

ஈ) 1. காற்று 2. வாயு 3. வளி
4. துரிசு 5. மாருதம்

உ) 1. வயல் 2. கழனி 3. வெளி
4. மருதநிலம் 5. வயம்

ஊ) 1. இரத்தம் 2. உதிரம் 3. யாசித்தல்
4. சிவப்பு 5. பவளம்

2. பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுங்கள்.

அ) இரும்புக் கங்காரு எனக் குறிப்பிடப்படுவது,
1. முச்சக்கரவண்டி 2. ஈருருளி
3. உந்துருளி 4. மணி

ஆ) அலுமினிய முயலைப் போலத் தோன்றுவது,
1. டைனமோ விளக்கு 2. மணி
3. மிதிகட்டைகள் 4. கங்காரு

இ) ஈருருளியை நாம் நேசிக்கக் காரணம், அதுவும் நம்மைப் போல்
1. உண்கிறது 2. சுவாசிக்கிறது
3. மூச்சு விடுகிறது 4. படுத்து விடுகிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈ) காற்றில்லாத (சுவாசிக்காத) மனிதனின் பயணம்,

1. தொடரும் 2. நீளும் 3. முடியும் 4. பறக்கும்

உ) சமநிலையைப் பேண வேணும். - இதில் சமநிலை என்றால்,

1. ஏற்றத்தாழ்வற்ற நிலை 2. சமன் நிலை
3. நடுநிலை 4. சமம்

**3. அடிக்கோடிடப்பட்ட சொல்லுக்குப் பொருத்தமான எதிர்க் கருத்துச் சொல்லைத் தெரிவு செய்யுங்கள்.**

அ) நமக்குள் எந்தத் <u>தாழ்வு</u> மனப்பான்மையும் இல்லை.

1. கீழ்மை 2. உயர்வு 3. பள்ளம் 4. அடக்கம்

ஆ) ஒரு செங்கல் குவியல் மீது <u>விழுந்தேன்</u>.

1. கிடந்தேன் 2. இருந்தேன் 3. எழுந்தேன் 4. பார்த்தேன்

இ) பார்ப்பதற்கு மிகவும் <u>எளிமையாக</u> இருந்தது.

1. இலகுவாக 2. கடினமாக 3. சுலபமாக 4. தாழ்வாக

ஈ) என் ஈருருளி சரிதம் முழுமிதியை <u>வெற்றி</u> கொண்டது.

1. வாகை சூடுகை 2. வென்றி
3. தோல்வி 4. வெற்றிமை

உ) ஈருருளியில் எனக்குப் பிடித்தது அதற்கும் நமக்கும் உள்ள <u>தோழமை</u> ஆகும்.

1. நட்பு 2. பகை 3. உறவு 4. சிநேகம்

**4. பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து இடைவெளி நிரப்பி எழுதுங்கள்.**

அ) எங்கள் கிராமத்தில் ஒரேயொரு .................................... ஈருருளி நிலையம் தான் இருந்தது.

ஆ) சிறிய ஈருருளியின் தொழில் நுட்பம் என்னைப் பார்த்துச் சிரித்துக் ....................................................................

இ) பயமும் .............................. ஒன்று சேரக் கீழே விழுந்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈ) இராணுவ வீரர்களைப் போல ......வரிசையாக...... பனை மரங்கள் நின்றுகொண்டிருந்தன.

உ) ......முதல்...... ஈருருளிப் பயணத்தை என்றுமே மறக்க முடியாது.

| | | | | |
|---|---|---|---|---|
| பரவசமும் | வரிசையாக | வாடகை | முதல் | கொண்டிருந்தது |

5. விடை எழுதுங்கள்.

அ) ஈருருளி எதைப் போலத் தாவிச் செல்கிறது?

..........................................................................

ஆ) ஈருருளியுடன் கனவில் வரும் நபர்கள் சிலரை எழுதுங்கள்.

..........................................................................

இ) 'ஈருருளியும் நம்மைப் போலவே சுவாசிக்கிறது' எனக் கூறப்படுவது ஏன்?

..........................................................................

ஈ) சங்கரின் ஈருருளிக் கடையைப் பற்றி நான்கு வாக்கியங்கள் எழுதுங்கள்.

..........................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ) 'குருதட்சணை' என்றால் என்ன?

ஊ) கிராம வாழ்க்கையின் சிறப்புக்கள் குறித்துச் சுருக்கமாக எழுதுங்கள்.

6. பொருத்தமான தொடரின் கீழ்க் கோடிடுங்கள்.

அ) வாழையடி வாழையாக என்றால்,

1. பரம்பரை பரம்பரையாக
2. வாழையின் அடியைப் போன்று
3. பிடிவாதமாக இருத்தல்
4. வாழை வேர் போலிருத்தல்

ஆ) தெளிவுறுத்தல் என்றால்,

1. அறிவுறுத்தல் 2. விளங்கப்படுத்தல்
3. துலக்குதல் 4. மினுக்குதல்

இ) தலையாயது என்றால்,

1. தலையைப் பேணல் 2. தலையிடுதல்
3. முக்கியமானது 4. முக்கியமில்லாதது

ஈ) இன்றியமையாதது என்றால்,

1. தேவையற்றது 2. அவசியமானது
3. இன்று தேவைப்படுவது 4. இன்று தேவையற்றது

உ) எழுத்து வழக்கு என்பது,

1. பேச்சு வழக்கு 2. செந்தமிழ் வழக்கு
3. திருந்திய மொழி வழக்கு 4. கிராமிய வழக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. பின்வருவன சரியாயின் சரி என்றும் பிழையாயின் பிழை என்றும் எழுதுங்கள்.

அ) ஈருருளிக்கும் நமக்குமான உறவு குழந்தைப் பருவத்திலேயே தொடங்கி விடுகிறது. (..✓..)

ஆ) ஈருருளியில் இருக்கும் மணி நம்மை ஓர் இசைக் கலைஞனாக்குகிறது. (..✓..)

இ) ஈருருளி காற்றில்லாவிட்டாலும் ஓடும். (..✗..)

ஈ) ஈருருளியை ஓட்டுவதற்குச் சமநிலை வேண்டும். (..✗..)

உ) முதல் ஈருருளிப் பயணத்தை என்றுமே மறக்க முடியாது. (..✓..)

8. பொருத்தமாகச் சேர்த்தெழுதப்பட்ட சொல்லின் கீழ்க் கோடிடுங்கள்.

அ) விளக்கு + ஏற்றிடுவோம்:

1. விளக்கு ஏற்றிடுவோம்
2. விளக்கேற்றிடுவோம்
3. விளக்கை ஏற்றிடுவோம்
4. விளக்கையேற்றிடுவோம்

ஆ) அறிவு + உடைமை:

1. அறிவுடைமை
2. அறிவுடமை
3. அறிவின் உடைமை
4. அறிவோடுடமை

இ) தொழில் + நுட்பம்:

1. தொழில் நுட்பம்
2. தொழின்நுட்பம்
3. தொழினுட்பம்
4. தொழிலுட்பம்

ஈ) கள்ளம் + கபடம்:

1. கள்ளம்கபடம்
2. கள்ளங்கபடம்
3. கள்ளம்கபடங்
4. கள்ளகபடம்

உ) குளம் + கரையில்:

1. குளம்கரையில்
2. குளங்கரையில்
3. குளக்கரையில்
4. குளகரையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. பின்வரும் சொற்களுக்குரிய பல பொருள்களை எழுதுங்கள்.

1. புலமை : ................................................................................

2. இசை : ................................................................................

3. தொண்டு : ................................................................................

4. அணை : ................................................................................

5. வள்ளல் : ................................................................................

10. பின்வருவனவற்றிற்குப் பொருத்தமான எதிர்க்கருத்துச் சொல்லின் கீழ்க் கோடிடுங்கள்.

| | | | |
|---|---|---|---|
| அ) | வற்றுதல் : | 1. ஊறுதல் | 2. குறைதல் |
| | | 3. மிகுதல் | 4. இடுதல் |
| ஆ) | வறுமை : | 1. மிடி | 2. ஏழை |
| | | 3. செல்வம் | 4. செலவு |
| இ) | தண்ணீர் : | 1. குடிநீர் | 2. வெந்நீர் |
| | | 3. சுடுதண்ணீர் | 4. குளிர்ந்த நீர் |
| ஈ) | செருக்கு : | 1. கோபம் | 2. இரக்கம் |
| | | 3. பணிவு | 4. கர்வம் |
| உ) | தூக்கம் : | 1. விழிப்பு | 2. நித்திரை |
| | | 3. உறக்கம் | 4. சோம்பல் |

11. 'எனது ஈருருளி' என்னும் தலைப்பில் உங்கள் கட்டுரைக் கொப்பியில் பத்து வாக்கியங்கள் எழுதுங்கள்.

- ஒப்படை:

1. இப்பாடத்தில் வரும் உவமைகளை இனங்கண்டு அவற்றைப் பட்டியற்படுத்துங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. ஈருருளிப் பயணம் போன்று உங்கள் வாழ்வில் நிகழ்ந்த மறக்க முடியாத சம்பவம் ஒன்றை வகுப்பில் கூறுங்கள்.

3. பின்வரும் சொற்களுக்குப் பொருத்தமான ஒத்த கருத்துச் சொற்களை தேடி அறிந்து எழுதுங்கள்

அ) நகரம் : ..............................

ஆ) நெரிசல் : ..............................

இ) வதனம் : ..............................

ஈ) மர்மம் : ..............................

உ) உலகம் ..............................

தெரிந்து கொள்வோம் :

'பாடு' என்னும் சொல்லுக்கு எண்ணற்ற பொருள்கள் உண்டு. 'படு' என்னும் வினைச்சொல் 'செய்', 'வருந்து', 'துன்புறு' என்னும் பொருள்களைக் குறிக்கும். 'தவறு செய்தாய். அதனால் தண்டனை பெற்றாய், நன்றாய்ப் படு' என்று சொல்வதுண்டு. இந்தப் 'படு' என்னும் சொல்லின் பெயர்ச்சொல்லே 'பாடு' என்பது. 'பாடு' என்னும் இச்சொல் சில தொடர்களில் வருமொழியாக வந்து பல பொருள்களைக் குறிக்கின்றது. அவற்றிற் சிலவற்றைக் காண்போம்.


| | | | |
|---|---|---|---|
| 1. பண்பாடு | 2. முரண்பாடு | 3. உடன்பாடு | 4. கடப்பாடு |
| 5. இடர்ப்பாடு | 6. சமன்பாடு | 7. பெரும்பாடு | 8. அரும்பாடு |
| 9. தட்டுப்பாடு | 10. குறைபாடு | 11. இடிபாடு | 12. கட்டுப்பாடு |
| 13. புறப்பாடு | 14. முட்டுப்பாடு | 15. வாய்ப்பாடு | 16. மாறுபாடு |
| 17. ஊறுபாடு | 18. கூறுபாடு | 19. வேறுபாடு | 20. வழிபாடு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2

# கவிதை இலக்கியம்



கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுங்கள்.

அ) கவிதை இலக்கியம் என்னும் தலைப்பிலான கவிதைகளை இயற்றியவர்,

1. சுப்பிரமணிய பாரதியார்
2. பாரதிதாசன்
3. கண்ணதாசன்
4. கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை

ஆ) பறக்கும் குருவியோடு பறந்து திரிவது,

1. கவிஞரது பாடல் 2. கவிஞரது உள்ளம்
3. வண்டிமாடு 4. பசுக்கன்று

இ) கவிஞர் இருகாது குளிரக் கேட்பவை,

1. கல்லின் கதைகள் 2. புல்லின் பேச்சு
3. புராணம் 4. கவிதை

ஈ) அலகில் சோதியானவன்,

1. சூரியன் 2. ஈசன்
3. பொருள்கள் 4. உண்மை

உ) கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை எழுதிய கவிதை நூல்,

1. பாப்பாப் பாட்டு
2. கவிமணியின் கட்டுரைகள்
3. மலரும் மாலையும்
4. பாஞ்சாலி சபதம்

2. ஒத்த கருத்துடைய இரு சொற்களின் கீழ்க் கோடிடுங்கள்.

அ) வடம், வடபுலம், கயிறு, வடதளம்

ஆ) மாடு, பெருமை, எருது, பொன்

இ) எறும்பி, என்பு, எளிமை, எறும்பு

ஈ) நஞ்சன், நண்பன், தோழன், பகைவன்

உ) உழவன், உறுதி, மெய்ம்மை, உண்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. **சரியாயின் சரி என்றும் பிழையாயின் பிழை என்றும் எழுதுங்கள்.**

அ) வண்டி, மாடு, கயிறு அனைத்தும் கவிஞருக்கு அற்புதப் பொருளாம். (..........)

ஆ) ஈ, எறும்பு, நாய், நரி யாவும் கவிஞருக்கு நண்பர்கள் அல்ல. (..........)

இ) புல்லின் பேச்சை புராணமாக விரிப்பேன் என்கிறார் கவிஞர். (..........)

ஈ) உலகில் உள்ள எப்பொருளும் கவிக்கு உரியன அல்ல. (..........)

உ) தெள்ளத் தெளிந்த தமிழில் உண்மை தெரிந்து உரைப்பது கவிதை ஆகும். (..........)

3. **பொருத்தமான எழுத்துக்களைக் கூட்டினுள் எழுதுங்கள்.**

அ) நாயும் நரியும் எனக்கு

ஆ) கவிஞரது உள்ளம் வான வெளியில் குருவியோடு பறந்து

இ) உலகில் எந்தப் பொருளும் கவிக்கு உரிய

ஈ) கவிதை உள்ளத்தில்

உ) கல்லின் கதைகள் எல்லாம் இரு காது குளிரக்

| | | | |
|---|---|---|---|
| ந | ___ | ___ | ன் |
| ___ | ரி | ___ | ம் |
| பொ | ___ | ளா | ___ |
| ___ | ள் | ___ | து |
| கே | ___ | ___ | ன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. பின்வரும் சொற்களுக்கு எதிர்க்கருத்துள்ள சொல் எழுதுங்கள்.

1. செல்வம் : .................... 2. அகம் : ................................
3. பகைவன் : .................... 4. மண் : ................................
5. பூட்டு : ........................ 6. உண்மை : ........................
7. குளிர் : ........................ 8. விரிப்பேன் : ........................

5. பின்வரும் சொற்களுக்கு எதிர்ப்பாற் சொற்கள் எழுதுங்கள்.

1. தோழி : ........................ 2. நண்பன் : ...........................
3. கவிஞன் : ...................... 4. மந்தி : ................................
5. காளை : ........................ 6. உழத்தி : ...........................
7. ஈசுவரி : ........................ 8. பிரான் : ...............................

6. பின்வரும் உயிரினங்களின் குரல் மரபினை எழுதுங்கள்.

1. அணில் ......................... 2. நாய் : ................................
3. நரி : ............................. 4. குதிரை : ............................
5. வண்டு : ....................... 6. வானம்பாடி : .......................
7. பல்லி : ......................... 8. புறா : .................................

7. கீழே தரப்படும் சொற்களுக்கு ஒத்த பொருள் தரும் மூன்று சொற்கள் எழுதுங்கள்.

1. இன்பம் :...................... ....................... .........................
2. இகழ்தல்: ..................... ....................... .........................
3. அன்பு : ....................... ....................... .........................
4. குற்றம் :...................... ....................... .........................
5. சிரிப்பு : ...................... ....................... .........................


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. விடை எழுதுங்கள்.

அ) கவிஞர் கருதும் அற்புதப் பொருள்கள் எவை?

.................................................................................................

.................................................................................................

ஆ) கறக்கும் பசுவைச் சுற்றி அதன் கன்று போல் துள்ளுவது எது?

.................................................................................................

இ) கவிஞர் எவற்றைத் தமது நண்பர்கள் என்கிறார்?

.................................................................................................

ஈ) கவிஞர் எவற்றைக் காது குளிரக் கேட்பார்?

.................................................................................................

உ) கவிஞர் எதனைப் புராணமாக விரிப்பேன் என்கிறார்?

.................................................................................................

ஊ) கவிதைக்குரிய பொருள்கள் எவை எனக் கவிஞர் கூறுகிறார்?

.................................................................................................

எ) இப்பாடத்தின் மையப் பொருளாக அமைவது யாது?

.................................................................................................

ஏ) கவிதை என்றால் என்ன?

.................................................................................................

9. பின்வரும் சொற்களைப் பொருள் விளங்கும் வகையில் வாக்கியத்தில் அமைத்து எழுதுங்கள்.

அ) தலை : ..........................................................................

ஆ) தளை : ..........................................................................

இ) தழை : ..........................................................................

ஈ) குலை : ..........................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ) குளை ..........................................................................

ஊ) குழை : ..........................................................................

எ) அலை : ..........................................................................

ஏ) அளை : ..........................................................................

ஐ) அழை : ..........................................................................

ஒ) கழை : ..........................................................................

ஓ) ஆளி : ..........................................................................

ஔ) ஆழி : ..........................................................................

10. பின்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்யுங்கள்.

| தரப்பட்ட வினைச்சொல் | ஒத்த கருத்துள்ள சொல் 1 | ஒத்த கருத்துள்ள சொல் 2 |
|---|---|---|
| 1. கூறினான் | சொன்னான் | பகர்ந்தான் |
| 2. கற்றுத்தருகின்றன | ............................ | ............................ |
| 3. பயப்படக்கூடாது | ............................ | ............................ |
| 4. சிந்தியது | ............................ | ............................ |
| 5. முடிவடைந்தது | ............................ | ............................ |
| 6. சுகமானது | ............................ | ............................ |

11. பின்வரும் சொற்றொடர்களைப் பிரித்து எழுதுங்கள்:

அ) அற்புதப்பொருளாம் : ..........................................................

ஆ) அருளினாலேயமையும் : ..........................................................

இ) உள்ளத்துள்ளது : ..........................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈ) தெரிந்துரைப்பது : ..........................................................

உ) உருவெடுப்பது : ..........................................................

சேர்த்தெழுதுங்கள்:

அ) பறக்கும் + குருவி : ..........................................................

ஆ) கன்றுபோல + துள்ளும் : ..........................................................

இ) காதுகுளிர + கேட்பேன் : ..........................................................

ஈ) கவிக்கு + உரிய : ..........................................................

உ) தெள்ள + தெளிந்த : ..........................................................

12. பின்வரும் வாக்கியங்களில் உள்ள எழுவாய், செயப்படுபொருள், பயனிலை என்பவற்றை இனங்கண்டு கீழுள்ள அட்டவணையில் எழுதுங்கள்.

அ) அன்னம்மா ஆத்திசூடி படித்தாள்.

ஆ) கம்பர் இராமயணத்தை இயற்றினார்.

இ) நாம் நன்மை செய்தால் நன்மை விளையும்.

ஈ) உதயன் கிரிக்கெட் விளையாடினான்.

உ) நீங்கள் எழுதிய விடைகளைப் பன்முறை படித்துப் பாருங்கள்.

| எழுவாய் | பயனிலை | செயப்படுபொருள் |
|---|---|---|
| .............................. | .............................. | .............................. |
| .............................. | .............................. | .............................. |
| .............................. | .............................. | .............................. |
| .............................. | .............................. | .............................. |
| .............................. | .............................. | .............................. |
| .............................. | .............................. | .............................. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஒப்படை

1. பின்வரும் சொற்களை அகராதியின் உதவியோடு அகரவரிசைப் படுத்துங்கள்.

பெயர் வகை : மரை, அரவு, கிளி, ஈருருளி, முரசு, சூள்

வினைவகை : குடி, செல், ஓடு, களி, பிடி, ஓடி

..............................................................................................................

..............................................................................................................

2. மேலே கொடுக்கப்பட்ட சொற்களைப் பயன்படுத்தி வாக்கியங்களைப் பூர்த்தி செய்யுங்கள்.

அ) மானும் ...................... ஆற்றில் நீர் ...................... (குடி).

ஆ) ................... கண்டு மக்கள் கிலி கொண்டு .............. (ஓடு).

இ) ................. பேசுவது கேட்டு கண்ணன் ....................... (களி).

ஈ) ................. செம்மண் வீதியில் தனிமையாக .............. (செல்).

உ) கடலில் ...................... கொண்டு மீன் ....................... பலரைக் காணவில்லை. (பிடி).

தெரிந்து கொள்வோம் :

'மாறு' என்னும் சொல் வேறு சொற்களோடு சேர்ந்து முன்னும் பின்னுமாக மாறி வரும் போது வெவ்வேறு பொருள்களைத் தருவதைக் காணலாம். 'மாறு' என்றால் சொல் மாறுதல், இடம்பெயர்தல் என்று பொதுவாகப் பொருள் தரும். அவற்றிற் சில வருமாறு.

| | | | |
|---|---|---|---|
| 1. தாறுமாறு | 2. தடுமாறு | 3. பரிமாறு | 4. உருமாறு |
| 5. வருமாறு | 6. மடைமாறு | 7. உடைமாறு | 8. தருமாறு |
| 9. கால்மாறு | 10. நிலைமாறு | 11. கைம்மாறு | 12. இடம் மாறு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3
# சத்தி முற்றப் புலவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன்கீழ்க் கோடிடுங்கள்.

அ) சத்திமுற்றம் என்பது ஒரு,
1. மாவட்டம் 2. நகரம் 3. சிற்றூர் 4. வீடு

ஆ) பழையாறையைத் தலைநகரமாகக் கொண்டிருந்தோர்,
1. பாண்டியர் 2. சேரர் 3. பல்லவர் 4. சோழர்

இ) புலவரை ஆதரிக்கும் வள்ளல் யாரும் இல்லை. வள்ளல் என்றால்,
1. உலோபி 2. செல்வந்தர் 3. கொடையாளி 4. இரப்போர்

ஈ) மதுரை செல்ல இசைவு பெற்றார். இசைவு என்பதன் பொருள்,
1. அனுமதி 2. சம்மதம் 3. பொருத்தம் 4. வேறுபாடு

உ) அவனுடைய உள்ளத்திலும் ஒரு வருத்தம் இருந்தது. வருத்தம் என்னும் கருத்துடைய சொல் அல்லாதது,
1. துன்பம் 2. மகிழ்ச்சி 3. கவலை 4. களைப்பு

2. பின்வருவனவற்றில் ஒரு சொல் ஒத்த கருத்தற்றது. அதன் கீழ்க் கோடிடுங்கள்.

அ) 1. மன்று 2. சபை 3. மண்டபம்
4. நீதி மன்றம் 5. சந்தி

ஆ) 1. வாவி 2. நீர்நிலை 3. கடல்
4. ஆற்றோடை 5. தடாகம்

இ) 1. தூது 2. தூதுமொழி 3. புறா வகை
4. செய்தி 5. ஒரு பிரபந்த வகை

ஈ) 1. உருக்குதல் 2. வருத்துதல் 3. வாட்டுதல்
4. தோன்றுதல் 5. மனம் நெகிழச் செய்தல்

உ) 1. குறுகு 2. பெருத்தல் 3. குறைதல்
4. சிறுத்தல் 5. குறைந்து சிறிதாகுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. பின்வரும் சொற்களுக்குப் பொருள் எழுதுங்கள்.

அ) உவப்பு : ........................................................................................

ஆ) செவிமடுத்தல் : ..............................................................................

இ) கவிச்சுவை : ..................................................................................

ஈ) புலமைக் காய்ச்சல் : ........................................................................

உ) கட்டளை : ......................................................................................

ஊ) புலவர்கள் நாயகம் : ........................................................................

4. விடை எழுதுங்கள்.

அ) ஜில்லா என்னும் சொல்லின் தூய தமிழ்ச் சொல் யாது?

..........................................................................................................

ஆ) சத்திமுற்றம் என்பது யாது?

..........................................................................................................

இ) புலவர் பாண்டி நாட்டுக்குச் சென்றது ஏன்?

..........................................................................................................

..........................................................................................................

ஈ) பாண்டி நாடு சென்ற புலவரின் கோலம் எத்தகையதாக இருந்தது?

..........................................................................................................

..........................................................................................................

உ) பாண்டிய மன்னன் வாவிக் கரையோரம் கண்ட காட்சி யாது?

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊ) பாண்டிய மன்னன் அவைப் புலவர்களிடம் கேட்டது என்ன?

.................................................................................................

எ) சத்திமுற்றப் புலவர் தமது மனைவிக்கு எதன் மூலம் தூது விடுத்தார்?

.................................................................................................

ஏ) அவர் அனுப்பிய செய்தி யாது?

.................................................................................................

.................................................................................................

ஐ) செங்கால் நாரையின் வாய்க்குப் புலவர் கூறிய உவமை யாது?

.................................................................................................

.................................................................................................

.................................................................................................

.................................................................................................

.................................................................................................

5. பொருத்தமான சொல்லைத் தெரிந்து இடைவெளியில் எழுதுங்கள்.

அ) நீண்ட தூரம் நடந்தமையால் புலவர் ............................... (கழைப்புற்றார் / களைப்புற்றார்)

ஆ) கலைமகள் வித்தியாலயத்தில் நேற்றுக் ......................... விழா நடைபெற்றது. (கலை / களை)

இ) கடற்கரையோரம் .............................. பார்த்த இருவரைக் காவலர் கைது செய்தனர். (உளவு / உழவு)

ஈ) மாடியில்.......................... எனது பொழுது போக்காகும். (உலவுதல் / உளவுதல்)

உ) பால் போல் காட்சியளித்த மண்டபங்கள் பல இன்று ................................ பட்டுக் கிடக்கின்றன. (பாழ் / பாள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊ) தலைமுறை தோறும் தழைத்த குடும்பம் இன்று ...................... பட்டு அவதியுறுகிறது. (தளை / தழை)

6. பின்வரும் வாக்கியங்களுக்குப் பொருத்தமான நிறுத்தக் குறியீடுகளை இடுங்கள்.

அ) எங்கு சென்றாய் இவ்வேளை

ஆ) ஐயகோ என்னால் பார்க்க முடியவில்லையே

இ) அறம் செய விரும்பு

ஈ) நீ நன்றாகப் படி

உ) இளமையிற் கல்வி சிலையில் எழுத்து

7. ஆறாம் வகுப்பு மாணவர்கள் அறிந்திருக்க வேண்டிய நிறுத்தக் குறியீடுகள் எவையென எழுதுங்கள்.

........................................................................................................

........................................................................................................

........................................................................................................

8. பின்வரும் சொற்களுக்குரிய எதிர்க்கருத்துச் சொற்களைத் தெரிவு செய்யுங்கள்.

| | | |
|---|---|---|
| அ) உறவு : | 1. பந்தம் | 2. பகை |
| | 3. நட்பு | 4. பாசம் |
| ஆ) ஈறு : | 1. முடிவு | 2. இறப்பு |
| | 3. எல்லை | 4. ஆரம்பம் |
| இ) உறுதி : | 1. நிச்சயம் | 2. காரியம் |
| | 3. வாக்குறுதி | 4. உறுதியின்மை |
| ஈ) அடக்கம் : | 1. அடங்காமை | 2. பொறை |
| | 3. பொறுமை | 4. பணிவு |
| உ) கடி : | 1. திருமணம் | 2. மணம் |
| | 3. வாசனை | 4. துர்நாற்றம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. பின்வருவனவற்றில் சரியாக எழுத்துக் கூட்டப்பட்ட சொல்லின் கீழ்க் கோடிடுங்கள்.

அ) 1. அக்கரையில்லை  2. அக்கறையில்லை
3. அற்கரையில்லை  4. அற்கறையில்லை

ஆ) 1. கர்மயோகம்  2. கறுமயோகம்
3. கருமயோகம்  4. கர்ம்மயோகம்

இ) 1. திகழ்கின்றது  2. திகள்கின்றது
3. திகல்கின்றது  4. திகில்கின்றது.

ஈ) 1. மொளிபெயர்த்த  2. மொழிபெயர்த்த
3. மொழிபேர்த்த  4. மொளிபேர்த்த

உ) 1. பல்களைக்களகம்  2. பல்கழைக்கழகம்
3. பல்கலைக்கழகம்  4. பல்கலைக்களகம்

10. பின்வருவனவற்றிற்குச் சந்தர்ப்பம் கூறுக.

அ) ''புலவர்களே இன்று காலையில் வாவிக் கரையில் சில நாரைகளைக் கண்டேன்''

யார் : ..................................................................

யாருக்கு : ..................................................................

எச்சந்தர்ப்பத்தில் : ..................................................................

ஆ) ''அந்த நாரையின் அலகுக்குப் பொருத்தமான ஓர் உவமையைச் சொல்லுங்கள்''

யார் : ..................................................................

யாருக்கு : ..................................................................

எச்சந்தர்ப்பத்தில் : ..................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ) ''அப்படிச் செல்லும்போது எங்கள் ஊராகிய சத்தி முற்றத்துக்குச் செல்''

யார் : ....................................................................

யாருக்கு : ....................................................................

எச்சந்தர்ப்பத்தில் : ....................................................................

ஈ) ''புலவரே, நேற்றிரவு பொது மன்றத்தில் 'செங்கால் நாராய்' என்று நீர் பாடிய பாடலை இப்பொழுது பாடும்''

யார் : ....................................................................

யாருக்கு : ....................................................................

எச்சந்தர்ப்பத்தில் : ....................................................................

உ) ''இதை நேற்றிரவு நான் தனிமையில் நகர் சோதனை வந்து கொண்டிருந்தபோது இவர் பாடிக்கொண்டிருந்ததைக் கேட்டு மகிழ்ந்தேன்''

யார் : ....................................................................

யாருக்கு : ....................................................................

எச்சந்தர்ப்பத்தில் : ....................................................................

**11.** **சரியான விடையின் கீழ்க் கோடிடுங்கள்.**

அ) ''ஆகா! சிகிரியா ஓவியங்கள் எவ்வளவு அழகாக உள்ளன'' என்பது,

1. கூற்று வாக்கியம் 2. ஏவல் வாக்கியம்
3. வினா வாக்கியம் 4. மெய்ப்பாட்டு வாக்கியம்

ஆ) நேற்று உமது வீட்டிற்கு வந்தவர் யார்? என்பது

1. ஏவல் வாக்கியம் 2. மெய்ப்பாட்டு வாக்கியம்
3. வினா வாக்கியம் 4. கூற்று வாக்கியம்

இ) அந்தப் புத்தகத்தை எடுத்துக் கொடு. - இவ்வாக்கியம்,

1. மெய்ப்பாட்டு வாக்கியம் 2. ஏவல் வாக்கியம்
3. கூற்று வாக்கியம் 4. வினா வாக்கியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈ) நான் பாடம் படிக்கப் போகிறேன். - இவ்வாக்கியம்

1. கூற்று வாக்கியம் 2. மெய்ப்பாட்டு வாக்கியம்
3. வினா வாக்கியம் 4. ஏவல் வாக்கியம்

உ) 'காலையும் மாலையும் கடவுளைத் தொழு' என்பது,

1. வினா வாக்கியம் 2. ஏவல் வாக்கியம்
3. கூற்று வாக்கியம் 4. மெய்ப்பாட்டு வாக்கியம்

12. பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுங்கள்.

அ) பின்வருவனவற்றுள் பயனிலை மறைந்து வந்த வாக்கியம்,

1. செய்வன திருந்தச் செய்.
2. இன்று மழை விடாது.
3. கமலாவுக்குக் கடிதம் கிடைத்தது.
4. ஆனியை அடுத்து ஆடி வரும்.

ஆ) பின்வருவனவற்றுள் எழுவாய் மறைந்து வந்த வாக்கியம்,

1. தீதும் நன்றும் பிறர் தர வாரா.
2. பணி புரி: பலனை எதிர்பாராதே.
3. அநுஜன் படித்தான்.
4. மாலா மலர் பறித்தாள்.

இ) பின்வருவனவற்றுள் செயப்படுபொருள் மறைந்து வந்த வாக்கியம்,

1. கண்ணன் பேச்சுப் போட்டியிற் பரிசு பெற்றான்.
2. கமலா அழகிய நூல்களை வாங்கினாள்.
3. கருமேகம் சூழ்ந்த வானம் மழையை அள்ளிப் பொழிந்தது.
4. தம்பி வாங்கி வந்தான்.

ஈ) பின்வருவனவற்றில் பயனிலை அடைமொழி கொண்ட வாக்கியம்,

1. தங்கைக்கு ஓர் துன்பமுறாமல் நான் காப்பேன்.
2. பவித்திரா மல்லிகை மலர் பறித்தாள்.
3. வெள்ளைப் பூனை பாற் குடத்தை உருட்டியது.
4. ஓதுவது ஒழியேல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ) வெள்ளைப் பூனை துள்ளிப் பாய்ந்து ஓடியது. இவ்வாக்கியத்தின் எழுவாய் அடைமொழி,

1. பாய்ந்து 2. துள்ளி 3. ஓடியது 4. வெள்ளை

- ஒப்படை:

1. சத்திமுற்றப் புலவரின் பாடல் கீழே தரப்பட்டுள்ளது. இப்பாடலை மனனம் செய்து வகுப்பில் பாடிக் காட்டுக.
2. இப்பாடலின் பொழிப்புரையை நன்கு படித்த பின் வகுப்பில் படித்துக் காட்டுக.

''நாராய்! நாராய்! செங்கால் நாராய்...
பழம்படு பனையின் கிழங்கு பிளந்தன்ன
பவழக் கூர்வாய்ச் செங்கால் நாராய்
நீயும் நின் மனைவியும் தென்திசைக் குமரியாடி
வடதிசைக்கு ஏகுவீராயின் எம்மூர்ச்
சத்திமுற்ற வாவியுள் தங்கி
நனைசுவர்க் கூரை கனை குரல் பல்லி
பாடு பார்த்திருக்கும் என் மனைவியைக் கண்டு
எங்கோன் மாறன் வழுதி கூடலில்
ஆடையின்றி வாடையில் மெலிந்து
கையது கொண்டு மெய்யது பொத்தி
காலது கொண்டு மேலது தழீஇ
பேழையுள் இருக்கும் பாம்பு என உயிர்க்கும்
ஏழையாளனைக் கண்டனம் எனுமே''.

- சத்திமுற்றப்புலவர்

பொழிப்புரை:

நாரையே! நாரையே! சிவந்த கால்களை உடைய நாரையே! பழங்கள் பொருந்திய பனை மரத்தின் கிழங்கைப் பிழந்தால் போன்ற பவளம் போன்ற செந்நிறம் வாய்ந்த கூர்மையான அலகினையுடைய சிவந்த கால்களைக் கொண்ட நாரையே! நீயும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் பெடையும் தெற்குத் திசையில் உள்ள கன்னியாகுமரி கடல் துறையில் நீராடி வட திசைக்குச் செல்வீரானால் வழியில் எம்மூர் ஆகிய சத்திமுற்றக் குளத்தில் தங்குவீர்களாக! அவ்வூரில் நனைந்த சுவர்களையுடைய வீட்டின்மேல் அமைந்த கூரையில் ஒலிக்கும் பல்லியின் ஒலியைக் கேட்டு என் வரவில் நம்பிக்கை கொண்டு எதிர்பார்த்திருக்கும் என் மனைவியைப் பாருங்கள். அவளிடம் மாறன், வழுதி என்னும் பெயர்களையுடைய பாண்டியனது மதுரை மாநகரில், கட்டத் துணியும் இல்லாமல் வாடைக் காற்றில் நடுங்கி, கைகளால் உடலை மறைத்துக் கொண்டும், கால்களால் உடலை அணைத்துக் கொண்டும் பெட்டிக்குள் அடைபட்ட பாம்பைப் போலப் பெருமூச்சு விட்டு வருந்திக் கிடக்கின்ற ஏழையாகிய உன் கணவனைப் பார்த்தோம் என்று கூறுங்கள்.

தெரிந்து கொள்வோம் :

ஓலை, இலை இரண்டும் வெவ்வேறு நிலைகளை உணர்த்துகின்றன.

ஓலை : நீண்டு கிளைகள் இல்லாமல் வளர்ந்திருக்கும் மரத்தில் உள்ளவற்றை ஓலை என்பர்.

எடுத்துக்காட்டு : தென்னை ஓலை, பனை ஓலை, ஈச்சமோலை

இலை : கிளைகளையுடைய மரங்களில் உள்ளவை இலை.

எடுத்துக்காட்டு : மாவிலை, பூவரசு இலை, ஆலிலை, அரசமர இலை முதலியன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4
# விபுலாநந்த அடிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. சரியான விடையின் கீழ்க் கோடிடுங்கள்.

அ) விபுலாநந்த அடிகள் பிறந்த ஊர்,

1. காரைநகர்
2. காரைதீவு
3. காக்கைதீவு
4. மட்டக்களப்பு

ஆ) விபுலாநந்த அடிகளாரின் தந்தையாரின் பெயர்,

1. சின்னத்தம்பி
2. பெரியதம்பி
3. சாமித்தம்பி
4. குட்டித்தம்பி

இ) விபுலாநந்த அடிகளாரின் இயற்பெயர்,

1. கயிலைவாகனன்
2. மயில்வாகனன்
3. மணிவாசகன்
4. சிவானந்தன்

ஈ) விபுலாநந்த அடிகளார் எழுதிய இசை ஆராய்ச்சி நூல்,

1. மதங்க சூளாமணி
3. யாழ்நூல்
2. நாச்சியார் நான்மணிக்கோவை
4. விபுலாநந்த அமுதம்

உ) இயற்பெயர் என்பது,

1. புனைபெயர்
2. பட்டப்பெயர்
3. தாய் தந்தையர் இட்ட பெயர்
4. மரபுப் பெயர்

2. பொருத்தமான எழுத்துக்களைக் கூட்டினுள் எழுதுங்கள்.

அ) விபுலாநந்த அடிகளாரின் தாயார் பெயர்

ஆ) அடிகளார் மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் பெற்ற பட்டம்

இ) மதுரைத் தமிழ்ச் சங்கம் வெளியிட்ட இதழின் பெயர்

ஈ) குரு வழங்கும் தீட்சை

உ) மட்டக்களப்பு வாவியில்

| | | | | |
|---|---|---|---|---|
| க | ___ | ண | ___ | மை |
| ப | ண் | ___ | த | ___ |
| ___ | ந் | ___ | மி | ___ |
| கு | ___ | தீ | ___ | சை |
| மீ | ___ | பா | ___ | ம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. சரியாயின் சரி என்றும் பிழையாயின் பிழை என்றும் எழுதுங்கள்.

அ) மீன்பாடும் தேன்நாடு என அழைக்கப்படுவது மட்டக்களப்பு ஆகும். (..................)

ஆ) விபுலாநந்த அடிகளார் பன்மொழிப்புலமை பெற்றவரல்லர். (..................)

இ) இராமகிருஷ்ண சங்க இதழின் பெயர் ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம். (..................)

ஈ) கார்டனர் என்னும் நூலை எழுதியவர் ரவீந்திரநாத் தாகூர் ஆவார். (..................)

உ) விபுலாநந்த அடிகளார் ஆக்கிய நாடகத் தமிழ் நூல் மதங்க சூளாமணியாகும். (..................)

4. பொருத்தமான சொல்லைத் தெரிந்து இடைவெளியில் எழுதுங்கள்.

அ) விபுலாநந்த அடிகளார் விஞ்ஞானப் .................................. ஆவார்.

ஆ) அடிகளார் எழுதிய நூல்களுள் ........................................ ஒப்பற்றது எனலாம்.

இ) சுவாமி விவேகாநந்தரின் நூல்கள் பலவற்றை அடிகளார் ............................................

ஈ) ................................ பல்கலைக்கழகத்தின் முதற் தமிழ்ப் பேராசிரியராக விளங்கிய பெருமை அடிகளாரையே சாரும்.

உ) விபுலாநந்த அடிகளார் ......................................... வித்தகர் எனப் போற்றப்படுகிறார்.

| | | | | |
|---|---|---|---|---|
| யாழ்நூல் | மொழிபெயர்த்துள்ளார் | அண்ணாமலை | முத்தமிழ் | பட்டதாரி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. விடை எழுதுங்கள்.

அ) விபுலாநந்த அடிகளார் மொழிபெயர்த்த நூல்கள் நான்கின் பெயர் எழுதுங்கள்.

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

ஆ) விபுலாநந்த அடிகளார் பெற்ற பட்டங்கள் எவை?

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

இ) அடிகளார் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றிய பல்கலைக்கழகங்கள் எவை?

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

ஈ) யாழ்நூல் எதனைப் பற்றிக் கூறுகிறது?

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

உ) விபுலாநந்த அடிகளாரின் கட்டுரைகள் பல வெளியான சஞ்சிகைகள் எவை?

..........................................................................................

..........................................................................................

..........................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. பின்வருவனவற்றில் ஒருசொல் பொருத்தமற்றது. அதன் கீழ்க் கோடிடுங்கள்.

அ) 1. சமர் 2. போர் 3. யுத்தம்
4. அரங்கம் 5. சண்டை

ஆ) 1 அழகு 2. சிறப்பு 3. ஒப்பனை
4. ஒழுங்குமுறை 5. அழல்

இ) 1. புலமை 2. மெய்யறிவு 3. வயல்
4. மொழியில் வல்லமை 5. கற்றறிவு

ஈ) 1. ஆறு 2. நதி 3. ஓடை
4. கடல் 5. வழி

உ) 1. அரி 2. சிங்கம் 3. இந்திரன்
4. திருமால் 5. பகைவர்

7. பின்வரும் னகர, ணகரச் சொற்களை வைத்து பொருள் விளங்க வாக்கியம் அமையுங்கள்.

அ) கனி :........................................................................

கணி :........................................................................

ஆ) கன்னி :........................................................................

கண்ணி :........................................................................

இ) துனி :........................................................................

துணி :........................................................................

ஈ) பனி :........................................................................

பணி :........................................................................

உ) வன்மை :........................................................................

வண்மை :........................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுங்கள்.

அ) ஒரு சொற்றொடரில் பொருள் முடிவு பெற்றதை உணர்த்துவதற்காக இடப்படும் குறி,

1. காற்புள்ளி 2. முற்றுப்புள்ளி
3. முக்காற்புள்ளி 4. அரைப்புள்ளி

ஆ) வினாப் பொருளைத் தரும் சொற்றொடரின் இறுதியில் இடப்படும் குறி,

1. வியப்புக்குறி 2. ஒற்றை மேற்கோள் குறி
3. இரட்டை மேற்கோள் குறி 4. வினாக்குறி

இ) வியப்புப் பொருளை உணர்த்தும் சொல்லை அடுத்து இடப்படும் குறி,

1. வினாக்குறி 2. வியப்புக்குறி
3. காற்புள்ளி 4. இரட்டை மேற்கோள்குறி

ஈ) ஒருவர் கூறிய கருத்தினை அப்படியே பயன்படுத்தும்போது இடப்படவேண்டிய குறி,

1. வினாக்குறி 2. வியப்புக்குறி
3. ஒற்றை மேற்கோள்குறி 4. இரட்டை மேற்கோள்குறி

உ) ஆகா! என்னே அழகு! - இங்கு இடப்படவேண்டிய குறி,

1. வினாக்குறி 2. வியப்புக்குறி
3. காற்புள்ளி 4. முற்றுப்புள்ளி

9. கீழே தரப்பட்டுள்ள பந்தியில் பொருத்தமான நிறுத்தக் குறிகளை இடுக.

இயற்கை நமக்கு அளித்திடும் செல்வங்களில் ஒன்று ஆறு ஆறில்லா ஊருக்கு அழகு பாழ் என்பது ஆன்றோர் வாக்கு ஊருக்கு அழகு தருவதில் வளம் சேர்ப்பதில் ஆறு முக்கிய இடத்தைப் பெறுகிறது ஆற்றின் மூலம் நாம் அநேக நன்மைகளைப் பெறுகிறோம் மனித வாழ்வில் ஆறுகள் முக்கியத்துவம் பெறுகின்றன விவசாயம் செழிப்பதற்கும் நீர் மின் சக்தியைப் பெறுவதற்கும் நீர்வழிப் போக்குவரத்துக்கும் அவை பெரிதும் பயன்படுகின்றன ஆற்றின் அழகில் மனதைப் பறிகொடுப்போர் பலர் ஆகா அவற்றின் அழகே அழகு என்று அவர்கள் கூறுவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. சரியான விடையின் கீழ்க் கோடிடுங்கள்.

அ) பேசுபவரின் விருப்பத்தை வெளிப்படுத்தும் வகையில் அமைவது,

1. கூற்று வாக்கியம் 2. மெய்ப்பாட்டு வாக்கியம்
3. விருப்பு வாக்கியம் 4. வினா வாக்கியம்

ஆ) இதைச் செய், அதைச் செய்யாதே என ஒருவரை விளித்துப் பணிப்பது,

1. விருப்பு வாக்கியம் 2. கூற்று வாக்கியம்
3. ஏவல் வாக்கியம் 4. வினா வாக்கியம்

இ) என்ன கொடுமை! அப்பாவிச் சிறுவனை அடித்து விட்டீர்களே! - இவ்வாக்கியம்

1. வினா வாக்கியம் 2. கூற்று வாக்கியம்
3. மெய்ப்பாட்டு வாக்கியம் 4. ஏவல் வாக்கியம்

ஈ) நீங்கள் ஊக்கத்தோடு படியுங்கள். - இவ்வாக்கியம்

1. வினா வாக்கியம் 2. விருப்பு வாக்கியம்
3. கூற்று வாக்கியம் 4. ஏவல் வாக்கியம்

உ) என் அவலத்தை யார் அறிவார்? - இவ்வாக்கியம்

1. கூற்று வாக்கியம் 2. வினா வாக்கியம்
3. மெய்ப்பாட்டு வாக்கியம் 4. ஏவல் வாக்கியம்

11. பின்வரும் கூற்று வாக்கியங்களை வினா வாக்கியங்களாக மாற்றி எழுதுங்கள்.

அ) புலவர்கள் அவையில் வந்து கூடினர்.

..........................................................................................

ஆ) உப்பிட்டவரை உள்ளளவும் நினை.

..........................................................................................

இ) சிறுவர்கள் ஓடி விளையாடுகிறார்கள்.

..........................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈ) தம் வறுமையைப் போக்கும் நோக்குடன் புலவர் மன்னனை நாடி வந்தார்.

........................................................................................................

........................................................................................................

உ) விபுலாநந்த அடிகளாரின் பணிகளை மறத்தல் ஆகாது.

........................................................................................................

- ஒப்படை:

பின்வரும் சொற்களை வைத்துப் பொருள் வேறுபாடு விளங்கும் வகையில் தனித்தனி வாக்கியங்கள் எழுதுங்கள்.

அ) இரந்து : ..................................................................................

இறந்து : ..................................................................................

ஆ) அளகு : ..................................................................................

அலகு : ..................................................................................

இ) இலை : ..................................................................................

இளை : ..................................................................................

ஈ) குலம் : ..................................................................................

குளம் : ..................................................................................

உ) இரை : ..................................................................................

இறை : ..................................................................................

ஊ) கோலம் : ..................................................................................


கோளம் : ..................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5

# அறிவியல் மேதை அப்துல் கலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. பின்வருவனவற்றில் ஒருசொல் வேறு கருத்துடையது. அதன் கீழ்க் கோடிடுங்கள்.

அ) 1. பொழுது 2. வேளை 3. நேரம்
4. காலம் 5. பொழிப்புரை

ஆ) 1. எழில் 2. அழகு 3. எழல்
4. இளமை 5. தோற்றப்பொலிவு

இ) 1. விசை 2. வேகம்
3. நீண்டு சுருங்கும் தன்மை 4. வீசுதல்
5. பலம்

ஈ) 1. பிரார்த்தனை 2. துதி 3. வேண்டுகோள்
4. நேர்த்திக்கடன் 5. பிரசாதம்

உ) 1. மோகம் 2. வேட்கை 3. ஆசை
4. மோகனம் 5. விருப்பம்

2. தொகுதி ஒன்றிலுள்ள சொற்களைத் தொகுதி இரண்டிலுள்ள வெற்றிடங்களில் அமைத்து வாக்கியங்களை எழுதுங்கள்.

தொகுதி 1:

அ) அழகு ஆ) முறுவல் இ) அறிவியல்
ஈ) உரைத்தார் உ) புனிதம்

தொகுதி 2

அ) மைந்தனின் ........................................ கண்டு தந்தை உள்ளம் மகிழ்ந்தார்.

ஆ) அகத்தின் ........................................ முகத்தில் தெரியும் என்பது முதுமொழி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ) அப்துல் கலாம் தலைசிறந்த ........................................ மேதையாவார்.

ஈ) இராமேஸ்வரம் இந்துக்களின் ........................................ மிக்க தலமாகும்.

உ) அதிபர் பல விடயங்களை மாணவர்களுக்கு எடுத்து ................

3. **பின்வரும் சொற்களுக்குரிய எதிர்க்கருத்துச் சொற்களை எழுதுங்கள்.**

அ) விரித்தது ........................ ஆ) விண்ணில் : ........................

இ) பெருமை : ..................... ஈ) விருப்பு : ...............................

உ) போற்றுவர் : .................. ஊ) வாங்கினார்கள் : ..............

4. **விடை எழுதுங்கள்.**

அ) இந்தியாவின் தற்போதைய ஜனாதிபதி யார்?

.....................................................................................................

ஆ) அவர் முதலில் விண்ணில் செலுத்திய செயற்கைக் கோளின் பெயர் என்ன?

.....................................................................................................

இ) அப்துல் கலாம் பிறந்த இடம் எது?

.....................................................................................................

ஈ) அதன் பெருமைக்குக் காரணம் என்ன?

.....................................................................................................

.....................................................................................................

உ) பிரார்த்தனை செய்வதால் ஏற்படும் பயன்கள் எவை என அப்துல் கலாமின் தந்தை கூறினார்?

.....................................................................................................

.....................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊ) அப்துல் கலாம் இளமையில் தமது குடும்பத்திற்கு எவ்வகையில் உதவினார்?

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

எ) இந்திய சுதந்திரப் போராட்ட காலத்தில் செல்வாக்குப் பெற்றிருந்த நாளேடு எது?

.......................................................................................................

ஏ) இப்பாடத்தைக் கற்றதன் மூலம் உமது மனதில் எழும் எண்ணங்கள் எவை?

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

5. பின்வரும் எதிர்ச் சொற்களை வாக்கியங்களில் அமைத்து எழுதுங்கள்.

அ) உயர்வு - தாழ்வு :

.......................................................................................................

ஆ) ஒற்றுமை - வேற்றுமை :

.......................................................................................................

இ) ஆதி - அந்தம் :

.......................................................................................................

ஈ) இன்பம் - துன்பம் :

.......................................................................................................

ஊ) சோம்பல் - முயற்சி :

.......................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. பின்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்யுங்கள்.

| வாக்கியம் | திணை | பால் | எண் | இடம் |
|---|---|---|---|---|
| 1. கமலா வந்தாள் | உயர் | பெண் | ஒருமை | படர்க்கை |
| 2. அவன் வந்தான். | ............ | ............ | ............ | ............ |
| 3. மாமா வந்தார். | ............ | ............ | ............ | ............ |
| 4. அவர் வந்தார். | ............ | ............ | ............ | ............ |
| 5. அது வந்தது. | ............ | ............ | ............ | ............ |
| 6. அவர்கள் வந்தார்கள். | ............ | ............ | ............ | ............ |
| 7. பறவைகள் பறந்தன. | ............ | ............ | ............ | ............ |
| 8. நாங்கள் வந்தோம். | ............ | ............ | ............ | ............ |
| 9. நீ வந்தாய். | ............ | ............ | ............ | ............ |
| 10. நீங்கள் வந்தீர்கள். | ............ | ............ | ............ | ............ |

7. வகுப்பறைக்கு வெளியே நிற்கும் மாணவன் ஒருவனுடன் அதிபர் உரையாடும் வகையில் ஐந்து வாக்கியங்கள் எழுதுங்கள்.

அதிபர் : ஏன் தம்பி வகுப்பறைக்குச் செல்லவில்லை?

மாணவர் : ....................................

..............................................................................................

..............................................................................................

..............................................................................................

..............................................................................................

..............................................................................................

..............................................................................................

..............................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. பின்வரும் வாக்கியங்களில் தடித்த எழுத்துச் சொற்கள் பெயர்ச் சொற்களா வினைச் சொற்களா எனக் கண்டறிந்து அட்டவணைப் படுத்துங்கள்.

அ) கடற்கரையில் **அலை** மோதுகிறது.

ஆ) கறையான் புற்றுள் பாம்பு **புகுந்தது.**

இ) பறவைகளின் **அலகுகள்** உறுதியானவை.

ஈ) **வாழையிலையில்** உணவு உண்டேன்.

உ) பெண் மயிலுக்குத் **தோகை** இல்லை.

9. பின்வரும் வாக்கியங்களைப் பொருத்தமான முறையில் நிறுத்தக் குறிகளைப் பயன்படுத்தி உருப்பமைய எழுதுங்கள்.

அ) முற்காலத்தில் மக்கள் குகைகளில் வாழ்ந்தனர்

..........................................................................................................

ஆ) இப்பொழுது பொருட்களின் விலை ஏறியிருக்கிறதா

..........................................................................................................

இ) ஐயோ அவர் இறந்துவிட்டாரா

..........................................................................................................

ஈ) அப்துல் கலாம் சிறந்த விஞ்ஞானி கவிஞர் மட்டுமன்றி இந்தியக் குடியரசின் தலைவரும் ஆவார்

..........................................................................................................

..........................................................................................................

உ) ஆகா நீர் வீழ்ச்சியின் அழகே அழகு

..........................................................................................................

ஊ) கண்டி மாத்தளை நுவரெலியா ஹட்டன் ஆகிய பகுதிகளில் பலத்த மழை பெய்துள்ளது

..........................................................................................................

..........................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எ) இந்தியக் குடியரசின் பதினோராவது ஜனாதிபதி யார்

.....................................................................................................

ஏ) ஆறில்லா ஊருக்கு அழகு பாழ் என்பர்

.....................................................................................................

**10. பின்வரும் சொற்கள் இருபொருள் தருமாறு வாக்கியம் அமையுங்கள்.**

அ) பிடி : 1. ..............................................................................

2. ..............................................................................

ஆ) அணி : 1. ..............................................................................

2. ..............................................................................

இ) கரை : 1. ..............................................................................

2. ..............................................................................

ஈ) மலை : 1. ..............................................................................

2. ..............................................................................

உ) படி : 1. ..............................................................................

2. ..............................................................................

**11. பொருத்தமாகச் சேர்த்தெழுதப்பட்ட சொல்லின் கீழ்க் கோடிடுங்கள்.**

1. தமிழ் + சோலை
   1. தமிழ்சோலை 2. தமிழ்ச்சோலை
   3. தமிட்சோலை 4. தமிற்சோலை
2. கடல் + ஓரம்
   1. கடல்ஓரம் 2. கடல்ஓ்ரம்
   3. கடலோரம் 4. கடலின்ஓரம்
3. தூரத்தில் + இருந்து
   1. தூரமாயிருந்து 2. தூரத்திலிருந்து
   3. தூரத்தில்இருந்து 4. தூரதிலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 4. | தெரிவது + இல்லை | 1. தெரிவதுஇல்லை | 2. தெரியவில்லை |
| | | 3. தெரியாவில்லை | 4. தெரிவதில்லை |
| 5. | பெறுதற்கு + அரிய | 1. பெறுதற்குரிய | 2. பெறுதற்குஅரிய |
| | | 3. பெறுதர்க்குரிய | 4. பெறுதற்கரிய |

**12. பின்வரும் சொற்களைப் பால்வகைக்கேற்ப அட்டவணையில் எழுதுங்கள்.**

1. அப்துல்கலாம் 2. மரக்கலம் 3. பேருந்து 4. ஆசிரியை 5. உழத்தி 6. புலவர்கள் 7. மாணவர்கள் 8. வீராங்கனை 9. பாடகி 10. மருத்துவன் 11. தம்பி 12. சிறுமிகள் 13. பறவைகள் 14. சேவகன் 15. கவிதாயினி

| ஆண்பால் | பெண்பால் | பலர்பால் | ஒன்றன்பால் | பலவின்பால் |
|---|---|---|---|---|
| ................ | ................ | ................ | ................ | ................ |
| ................ | ................ | ................ | ................ | ................ |
| ................ | ................ | ................ | ................ | ................ |
| ................ | ................ | ................ | ................ | ................ |
| ................ | ................ | ................ | ................ | ................ |

**13. பின்வரும் இரு வாக்கியங்களையும் இணைத்து ஒரு பயனிலை கொண்ட வாக்கியமாக எழுதுங்கள்.**

அன்பு மிக உயர்ந்த குணமாகும்.

அன்பு எல்லா நற்குணங்களுக்கும் அடிப்படையாக விளங்குகிறது.

..............................................................................................................

..............................................................................................................

**14. நான் விரும்பும் பெரியார் என்னும் தலைப்பில் 15 வாக்கியங்கள் (உங்கள் கொப்பியில்) எழுதுங்கள்.**

- **ஒப்படை:**

அறிவியல் மேதை அப்துல் கலாம் தொடர்பான தகவல்களைச் சேகரித்து உங்கள் வகுப்பில் காட்சிப்படுத்துங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6

# நான் யார் தெரியுமா?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. பொருத்தமான எதிர்க் கருத்துச் சொல்லின் கீழ்க் கோடிடுங்கள்.

அ) பள்ளம் : 1. மலை 2. கடல் 3. மேடு 4. ஆறு

ஆ) ஞாபகம் : 1. நினைவு 2. மறதி 3. கோபம் 4. எண்ணம்

இ) கலக்கம் : 1. சண்டை 2. சமாதானம் 3. அமைதி 4. தெளிவு

ஈ) கூர்மை : 1. நுண்மை 2. சிறப்பு 3. ஆயுதங்களின் கூர் 4. மழுக்கம்

உ) எரிதல் : 1. புகைத்தல் 2. மடிதல் 3. எழுதல் 4. அணைதல்

2. இடைவெளியில் பொருத்தமான சொல் வைத்து நிரப்புங்கள்.

அ) துணைவனுக்குத் துணைவி போலக் கணவனுக்கு, .........

ஆ) கிழவனுக்குக் கிழவி போல உழவனுக்கு ........................

இ) யானைக்குப் பாகன் போலக் கப்பலுக்கு, ........................

ஈ) உயர்வுக்குத் தாழ்வு போல ஒருமைக்கு, ........................

உ) தோழனுக்குத் தோழி போல சகோதரனுக்கு, ..................

3. தடித்த எழுத்திலுள்ள சொற்களுக்குரிய ஒத்த கருத்துச் சொல்லைத் தெரிவு செய்யுங்கள்.

அ) தேவன் மிகவும் **சாதுரியமாகப்** பேசினான்.

1. இனிமை 2. திறமை 3. அறியாமை 4. கோபம்

ஆ) தமிழிற் பலபல சிறுகதைத் **தொகுதிகள்** வெளிவந்துள்ளன.

1. நூல்கள் 2. கூட்டம் 3. பிரிவு 4. பாகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ) மகனின் புத்திக் கூர்மையைக் கண்டு தந்தை பெருமிதம் அடைந்தார்.

1. மகிழ்ச்சி 2. சாந்தம் 3. வியப்பு 4. பெருமை

ஈ) பொய்ச் சான்று கூறுதல் மிகப் பெரிய பாவம்.

1. பொய் பேசல் 2. சாட்சி 3. வாசகம் 4. விடை

உ) எங்கள் வகுப்பு மாணவர்களுள் உதயனே சிறந்த விவேகி.

1. அவிவேகி 2. புத்திசாலி 3. மூடன் 4. அப்பாவி

4. பின்வரும் சொற்களில் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்து இடைவெளி நிரப்பி எழுதுங்கள்.

அ) முகுந்தன் படுக்கையில் .................................. படுத்தான்.

ஆ) முருகேசு ................................ உழைத்துக் குடும்பத்தைக் காப்பாற்றினார்.

இ) .................................. முத்தம்மா வீட்டுக்குச் சென்றாள்.

ஈ) மலையடிவாரத்தில் ......................... தேயிலைச் செடிகள் காட்சியளித்தன.

உ) மலை உச்சி .................. எனக் குளிர்ச்சியாக இருந்தது.

| | | |
|---|---|---|
| ஓட்டமும் நடையுமாக | குளுகுளு | புரண்டு புரண்டு |
| அல்லும் பகலும் | பச்சைப் பசேலென | |

5. பின்வரும் வாக்கியங்களில் அமைந்துள்ள தடித்த எழுத்துச் சொற்களுக்கு எதிர்க்கருத்துள்ள சொற்களை வாக்கியங்களில் அமைத்து எழுதுங்கள்.

அ) **நன்மை** செய்பவர் **உயர்வு** அடைவர்.

..........................................................................................

ஆ) **செல்வம்** எல்லோரிடத்தும் **நிலைத்து** நிற்காது.

..........................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ) உண்மை பேசி வாழ்ந்தால் மகிழ்ச்சியாக வாழலாம்.

..............................................................................................

ஈ) வீரன் போர்க்களத்தில் முன் நிற்பான்.

..............................................................................................

உ) இலங்கைக்கு மிக அண்மையில் உள்ள நாடு எது?

..............................................................................................

6. பின்வரும் சொற்களுக்குரிய எதிர்ப்பாற் சொற்களை எழுதுங்கள்.

1. பிரான் : ........................ 2. நிபுணன் : ............................

3. பண்டிதை :.................... 4. உழவன் : ...........................

5. மருத்துவன் :................ 6. வித்தகி : .............................

7. அடியாள் :..................... 8. சீமாட்டி : .............................

7. இடைவெளி நிரப்பத்தக்க பொருத்தமான சொல்லைத் தெரிக.

அ) கேள்வியைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்படும் குறி ........

1. வியப்புக்குறி 2. வினாக்குறி
3. உணர்ச்சிக்குறி 4. மேற்கோட்குறி

ஆ) அனுவாதக் குறி என அழைக்கப்படுவது, ........................

1. வினாக்குறி 2. வியப்புக்குறி
3. மேற்கோட்குறி 4. ஒற்றை மேற்கோட்குறி

இ) ஒருவர் கூறிய சொற்களை அப்படியே எடுத்தாளும் போது ........................................ இடப்படும்.

1. ஒற்றை மேற்கோட்குறி 2. இரட்டை மேற்கோட்குறி
3. கேள்விக்குறி 4. வியங்கோள் குறி

ஈ) வகுப்பில்.................................... அநேகம் காணப்பட்டன

1. சித்தரங்கள் 2. சித்திரங்கள்
3. சிற்சிதங்கள் 4. சிக்கனங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ) வகுப்பில் ஒழுங்கு ............................................ வேண்டும்

1. நிளவ　2. நிலவ　3. நிலவு　4. நிலாவு

**8. கீழே தரப்பட்டுள்ள பலசொற்கள் குறிக்கும் ஒரு பொருளின் பெயரை அட்டவணையில் எழுதுங்கள்.**

| பன்மொழி | ஒருமொழி |
|---|---|
| 1. தலைவன், நாயகன், பதி, கொழுநன் | ..................... |
| 2. இடுக்கண், சஞ்சலம், அல்லல், துன்பம் | ..................... |
| 3. களிப்பு, சந்தோசம், ஆனந்தம், உவகை | ..................... |
| 4. பாட்டு, கவிதை, செய்யுள், பா | ..................... |
| 5. தென்றல், பவனம், மாருதம், வளி | ..................... |
| 6. புத்தி, விவேகம், அறிவு, ஆற்றல் | ..................... |

**9. விடை எழுதுங்கள்.**

அ) நிறத்தை அறியும் சக்தி மிக்கவை எவை?

..........................................................................................

ஆ) மனிதக் கண்களை விடக் கூர்மையானவை எவை?

..........................................................................................

இ) விழித்திரை எனப்படுவது யாது?

..........................................................................................

..........................................................................................

ஈ) கண்ணீர்ச் சுரப்பிகளின் பயன்பாடு யாது?

..........................................................................................

..........................................................................................

..........................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ) கண்களைப் பாதுகாக்க நாம் உணவில் சேர்க்க வேண்டிய பொருட்கள் சில தருக

.................................................................................................

.................................................................................................

ஊ) கண்களைப் பாதுகாக்க மேற்கொள்ள வேண்டியன யாவை?

.................................................................................................

.................................................................................................

.................................................................................................

.................................................................................................

.................................................................................................

.................................................................................................

.................................................................................................

.................................................................................................

10. பின்வரும் எதிர்ப்பாற் சொற்களை வாக்கியங்களில் அமைத்து எழுதுங்கள்.

1. நடிகன் - நடிகை : ..........................................................
2. குறவன் - குறத்தி : ..........................................................
3. வலைஞன் - வலைச்சி : ..........................................................
4. புத்திரன் - புத்திரி : ..........................................................
5. தோழன் - தோழி : ..........................................................

11. பின்வருவனவற்றுக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்யுங்கள்

அ) இருபத்தைந்தாவது ஆண்டிற் கொண்டாடப்படுவது,

1. மணிவிழா 2. பொன்விழா
3. வெள்ளிவிழா 4. வைரவிழா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ) நூறாவது ஆண்டு நிறைவிற் கொண்டாடப்படும் விழா,

1. பவளவிழா
2. பொன்விழா
3. நூற்றாண்டுவிழா
4. அமுதவிழா

இ) ஐம்பதாம் ஆண்டிற் கொண்டாடப்படும் விழா,

1. வெள்ளிவிழா
2. முத்துவிழா
3. வைரவிழா
4. பொன்விழா

ஈ) எழுபத்தைந்தாவது ஆண்டிற் கொண்டாடப்படும் விழா,

1. திருவிழா
2. வெள்ளிவிழா
3. பவளவிழா
4. மணிவிழா

உ) அறுபதாவது ஆண்டிற் கொண்டாடப்படும் விழா,

1. பொன்விழா
2. பவளவிழா
3. மணிவிழா
4. வெற்றிவிழா

12. பின்வருவனவற்றைத் தொடர் வாக்கியமாக மாற்றி எழுதுங்கள்.

அ) மல்லிகா நன்றாகப் பாடினாள். பரிசும் பெற்றாள்.

.......................................................................................

ஆ) இருள் பரவத் தொடங்கியது. தாமரைகள் கூம்பின.

.......................................................................................

.......................................................................................

இ) கதிரவன் கிழக்கில் தோன்றினான். கதிர்களைப் பரப்பினான்.

.......................................................................................

.......................................................................................

ஈ) பறவைகள் வான் ஒளியைக் கண்டன. பாட்டுப்பாடி மகிழ்ந்தன.

.......................................................................................

உ) உதயன் பேனையை எடுத்தான். எழுதத் தொடங்கினான்.

.......................................................................................

.......................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. பின்வரும் வாக்கியங்களில் உள்ள சொற்களில் காணப்படும் எழுத்துப் பிழைகளைத் திருத்தி எழுதுங்கள்.

அ) புத்தகங்களை மேலுரையிட்டு நாம் பாதுக்காக்க வேண்டும்.

..........................................................................................

ஆ) ஆசிறியப் பெருமகன் ஒருவர் விளை கொடுத்து வாங்கினார்.

..........................................................................................

இ) எஜமானி ஓடி வந்து என்னை அழ்ழி அனைத்தாள்.

..........................................................................................

ஈ) எனது சேவையைத் தொடர்ந்து வளங்கும் வாய்ப்புக் கிடைக்கும்.

..........................................................................................

உ) ஆதறிப்போர் இல்லாமல் புலவர் வருமையில் வாடினார்.

..........................................................................................

ஊ) ஒரு வாய்க்கியத்தின் இறுதியில் முற்றுப்புல்லி இட வேண்டும்.

..........................................................................................

14. 'அ' தொகுதியில் உள்ள சொற்களை 'ஆ' தொகுதியில் உள்ள சொற்களுடன் பொருத்தமுறப் பொருத்திக் காட்டுங்கள்.

| 'அ' தொகுதி | 'ஆ' தொகுதி |
|---|---|
| அ) நான் | படர்க்கைப் பெண்பால் |
| ஆ) நீங்கள் | படர்க்கை ஒருமை ஆண்பால் |
| இ) அவன் | முன்னிலைப் பன்மை |
| ஈ) நாங்கள் | தன்மை ஒருமை |
| உ) நீ | தன்மை பன்மை |
| ஊ) மாணவி | முன்னிலை ஒருமை |


- **ஒப்படை:**


**கண்களைப் பாதுகாப்போம் என்னும் தலைப்பில் 10 வாக்கியங்கள் எழுதுங்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7
# எலியும் பூனையும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. பின்வரும் ஆண்பாற் சொற்களுக்குப் பெண்பாற் சொற்களும் பெண்பாற் சொற்களுக்கு ஆண்பாற் சொற்களும் தருக.

எடுத்துக்காட்டு : சகோதரன் - சகோதரி , நங்கை - நம்பி

அ) தகப்பன் : ....................... ஆ) மாணவி : ...........................

இ) நாயகன் : ....................... ஈ) அழகி : ...............................

உ) கூனி : ........................... ஊ) மருகி : ..............................

எ) செவிடன் : ..................... ஏ) குணவதி : ..........................

ஐ) பாட்டி : .......................... ஒ) செல்வி : ..............................

2. பின்வரும் ஒன்றன்பாற் சொற்களை பலவின் பாற் சொற்களாகவும் பலவின்பாற் சொற்களை ஒன்றன்பாற் சொற்களாகவும் எழுதுங்கள்.

எடுத்துக்காட்டு: மரம், மாடு, மேசை - ஒன்றன்பால்
மரங்கள், மாடுகள், மேசைகள் - பலவின்பால்

1. பூ : ............................. 2. செடி : ................................

3. பறவை : ......................... 4. மான்கள் : ...........................

5. கடிகாரங்கள் : ............. 6. கனி : ...................................

7. கதிரைகள் : ................. 8. இலைகள் : .........................

9. கண்கள் : ...................... 10. நூல் : ..................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. பின்வருவன சரியாயின் சரி என்றும் பிழையாயின் பிழை என்றும் எழுதுங்கள்.

அ) உயர்திணையில் ஆண்பால், பெண்பால் ஆகிய இரு பால்களும் ஒருமையில் வரும். (..........)

ஆ) அஃறிணையில் ஒன்றன்பால் பன்மையில் வரும். (..........)

இ) உயர்திணையில் பலர்பாலும், அஃறிணையில் பலவின்பாலும் பன்மையில் வரும். (..........)

ஈ) பேசுபவனையும் அவனைச் சார்ந்தவர்களையும் குறிப்பது தன்மை எனப்படும். (..........)

உ) பேசுபவனையும் கேட்பவனையும் அல்லாமல் வேறு ஒருவரைக் குறித்தால் அது படர்க்கை எனப்படும். (..........)

ஊ) பேசுபவனது கூற்றைக் கேட்பவனையும் அவனைச் சேர்ந்தவர்களையும் குறிப்பது படர்க்கை எனப்படும். (..........)

4. பின்வரும் வாக்கியங்களில் தடித்த எழுத்துச் சொற்கள் சுட்டும் இடத்தை அடைப்புக் குறிக்குள் எழுதுங்கள்.

அ) **நாங்கள்** கிணற்றை இறைத்துத் துப்புரவு செய்தோம்.

(..........................)

ஆ) **அவர்கள்** நாளை கொழும்பு வருவர்.

(..........................)

இ) **நீங்கள்** எந்நாளும் நலமுடன் வாழ வாழ்த்துகிறோம்.

(..........................)

ஈ) **சிறுவர்கள்** ஒழுக்கம் உள்ளவர்களாக வாழ வேண்டும்.

(..........................)

உ) **தேவன்** பாடம் படித்தான்.

(..........................)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. பின்வரும் பெயர்ச்சொற்கள் எவ்விடத்திற்கு உரியவை என அட்டவணையில் எழுதுங்கள்.

அவர்கள், நீங்கள், நாங்கள், மாணவர்கள், ஆசிரியர்கள், கணவன், அவன், நான், அவை, புலவர்கள், எங்கள், நிஷாம், அருண்

| தன்மை | முன்னிலை | படர்க்கை |
|---|---|---|
| ............................ | ............................ | ............................ |
| ............................ | ............................ | ............................ |
| ............................ | ............................ | ............................ |
| ............................ | ............................ | ............................ |
| ............................ | ............................ | ............................ |

6. விடை எழுதுங்கள்.

அ) பூனை எலியை அழைத்தது ஏன்?

..........................................................................................

ஆ) பூனை தன்னிடம் இருப்பதாகக் கூறிய பண்டங்கள் எவை?

..........................................................................................

இ) பொந்தின் வழியாய் இனிப்புப் பண்டம் தன்னைப் போடாமைக்குப் பூனை கூறிய காரணம் யாது?

..........................................................................................

..........................................................................................

ஈ) பூனை பண்டத்தை வளையில் போடாமைக்குக் கூறிய காரணம் யாது?

..........................................................................................

..........................................................................................

..........................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ) பூனைக்கு எலி கூறிய பதில் என்ன?

.................................................................................................

ஊ) இவ்வுரையாடலைப் படித்ததன் மூலம் நீங்கள் உணர்ந்துகொள்ளும் படிப்பினை என்ன?

.................................................................................................

.................................................................................................

.................................................................................................

.................................................................................................

7. பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுங்கள்.

அ) ஆடு கத்தும் என்பது போலக் குதிரை,

1. உறுமும் 2. பிளிறும்
3. கனைக்கும் 4. கீச்சிடும்

ஆ) பூனை சீறும் என்பது போலப் புலி,

1. கர்ச்சிக்கும் 2. உறுமும்
3. அலறும் 4. ஊளையிடும்

இ) ஆந்தை அலறும் என்பது போல மயில்,

1. அகவும் 2. கத்தும் 3. கீச்சிடும் 4. பேசும்

ஈ) பல்லி சொல்லும் என்பதுபோலக் கிளி,

1. கூறும் 2. அகவும் 3. பேசும் 4. கீச்சிடும்

உ) தவளை கத்தும் என்பது போலக் கோழி,

1. கூவும் 2. கொக்கரிக்கும்
3. கரையும் 4. உறுமும்

ஊ) வண்டு இரையும் என்பது போலத் தேனீ,

1. ரீங்காரம் செய்யும் 2. சொல்லும்
3. குறுகுறுக்கும் 4. அகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. சரியான விடையின் கீழ்க் கோடிடுங்கள்.

அ) ஆடு, குரங்கு என்பவற்றின் இளையது குட்டி போல, கிளி, கீரி என்பவற்றின் இளையது,

1. பிள்ளை 2. பறள் 3. குருளை 4. கன்று

ஆ) மீனின் இளையது குஞ்சு என்பது போலத் தவளையின் இளையது,

1. குட்டி 2. பறள் 3. பிள்ளை 4. பேத்தை

இ) ஆண்குரங்கு கடுவன் என்பது போலப் பெண்குரங்கு,

1. அலவன் 2. பேடு 3. மந்தி 4. பெட்டை

ஈ) பெண் குதிரையை வடவை என்பது போல ஆண் குதிரை,

1. குண்டு 2. களிறு 3. கடா 4. கடுவன்

உ) களிறுக்குப் பிடி என்பது போல கடாவுக்கு,

1. காளை 2. பெட்டை 3. மறி 4. பசு

9. பின்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்யுங்கள்.

| பிராணி | ஆண் | பெண் |
|---|---|---|
| 1. மாடு | ............................ | ............................ |
| 2. கோழி | ............................ | ............................ |
| 3. ஆடு | ............................ | ............................ |
| 4. பன்றி | ............................ | ............................ |
| 5. மயில் | ............................ | ............................ |
| 6. எருமை | ............................ | ............................ |
| 7. புலி | ............................ | ............................ |
| 8. நண்டு | ............................ | ............................ |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. பின்வரும் வாக்கியங்களில் அடிக்கோடிட்ட சொற்கள் குறிக்கும் பாலினை இடைவெளியில் எழுதுங்கள்.

அ) நவராத்திரி விழாவில் பெருந்தொகையான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

......................................

ஆ) கப்பல் கடலில் விரைந்து சென்றது.

......................................

இ) கமலா கனடாவுக்கு நேற்றுப் பயணமானாள்.

......................................

ஈ) நூலகத்தில் அநேக மாணவர்கள் காணப்பட்டனர்.

......................................

உ) பசுக்கள் வீடு நோக்கிச் சென்ற வண்ணம் இருந்தன.

......................................

ஊ) சிவகாமி விளக்கு ஏற்றினாள்.

......................................

11. பின்வருவனவற்றிற்குச் சந்தர்ப்பம் கூறுங்கள்.

அ) ''எலியம்மா, எலியம்மா எட்டிப் பாரம்மா''

யார் : ..................................................................

யாருக்கு : ..................................................................

எச்சந்தர்ப்பத்தில் : ..................................................................

ஆ) ''பூனையாரே, பூனையாரே என்ன பண்டமோ?''

யார் : ..................................................................

யாருக்கு : ..................................................................

எச்சந்தர்ப்பத்தில் : ..................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ) ''வளையைவிட்டு வெளியே வந்தால் தெரிந்து கொள்ளலாம்''

யார் : ..................................................

யாருக்கு : ..................................................

எச்சந்தர்ப்பத்தில் : ..................................................

ஈ) ''வளையின் வாயிலே இனிப்புப் பண்டம் அதனைப் போட்டு செல்வீர் நண்பரே''

யார் : ..................................................

யாருக்கு : ..................................................

எச்சந்தர்ப்பத்தில் : ..................................................

உ) ''வட்டமிட்டுத் திரியும் காகம் விட்டு வைக்குமோ?''

யார் : ..................................................

யாருக்கு : ..................................................

எச்சந்தர்ப்பத்தில் : ..................................................

ஊ) ''அசடு நானும் அல்ல, அல்ல அறிந்து கொள்வாய்!''

யார் : ..................................................

யாருக்கு : ..................................................

எச்சந்தர்ப்பத்தில் : ..................................................

எ) ''அடடா, இது போல் நீயும் என்னை நினைக்கலாகுமோ?''

யார் : ..................................................

யாருக்கு : ..................................................

எச்சந்தர்ப்பத்தில் : ..................................................

- **ஒப்படை:**

நான் ஒரு பறவையானால்.... என்னும் தலைப்பில் 15 வாக்கியங்கள் (கொப்பியில்) எழுதுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8

# மனமாற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. பின்வருவனவற்றில் மூன்று சொற்கள் ஒத்த கருத்துடையன. ஒருசொல் வித்தியாசமானது. அச்சொல்லின் கீழ்க் கோடிடுங்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| அ) | 1. மனம் | 2. உள்ளம் | 3. அகம் | 4. புறம் |
| ஆ) | 1. கர்வம் | 2. செருக்கு | 3. பணிவு | 4. ஆணவம் |
| இ) | 1. கேள்விகள் | 2. விடைகள் | 3. வினாக்கள் | 4. உசாவுதல்கள் |
| ஈ) | 1. வேதனை | 2. வருத்தம் | 3. உணர்ச்சி | 4. வேதம் |
| உ) | 1. உறுதி | 2. திடவாக்கு | 3. நிச்சயம் | 4. நினைத்தல் |

2. பின்வரும் பன்மைச் சொற்களுக்கு ஒருமைச் சொற்களும், ஒருமைச் சொற்களுக்குப் பன்மைச் சொற்களும் எழுதுங்கள்.

அ) மிருகம் :.....................................................

ஆ) சகோதரர்கள் :.....................................................

இ) சிறுமிகள் :.....................................................

ஈ) ஏழை :.....................................................

உ) மாணவி :.....................................................

ஊ) மலர்கள் :.....................................................

எ) வாகனங்கள் :.....................................................

ஏ) மனிதன் :.....................................................

ஐ) ஆசிரியர்கள் :.....................................................

ஒ) தினம் :.....................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. பொருத்தமான சொற்களைத் தெரிந்து கோடிட்ட இடங்களை நிரப்புங்கள்.

அ) பரீட்சையில் தவிர்க்க வேண்டிய ...................................... பிழைகளைக் குறிப்பிட்டார்.

ஆ) சங்கரனின் கையெழுத்து ................................................ திருத்தமாக இருக்கும்.

இ) ......................................... மனம் தளர்ந்து விடவில்லை.

ஈ) அகந்தை அறிவைக் ........................................................

உ) தற்பெருமை உடையோர் தம்மைப் பற்றிப் ......................

| | | | | |
|---|---|---|---|---|
| கெடுக்கும் | சாதாரண | புகழ்வர் | தெளிவாக | வாகீசன் |

4. பொருத்தமான தொடர்களை இடைவெளியில் எழுதுங்கள்.

அ) நான் வறுமையில் வாடியபோது கண்ணன், ......................

ஆ) கதிரேசர் தமது அறுபதாவது வயதில் ............................

இ) தந்தை சொன்ன புத்திமதியை மகன் ...............................

ஈ) குழந்தை ஓடி வருவதைக் கண்ட தாய் ..........................

உ) தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர் பணத்தை ...............

ஊ) கையும் மெய்யுமாகப் பிடிபட்ட கள்வர்கள் காவலர் தம் ....................................

எ) தொழில் எதுவுமற்ற குபேரன் பெரிய நிறுவனம் ஒன்றில் உயர் பதவி வகிப்பதாக ....................................................

ஏ) சில அரச ஊழியர்கள் தமது கடமைகளைச் சீராகச் செய்யாது ...................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐ) பரீட்சை முடிவை அறிந்ததும் விமலன் வீடு நோக்கி ..........................................

ஒ) கடையில் பணத்தைக் கையாடிய கமலன் ஊருக்கு .....................................

| | |
|---|---|
| கம்பி நீட்டினான். | அள்ளியிறைத்தார். |
| கைகொடுத்தான். | செவிமடுத்தான். |
| கண் மூடினார். | காலில் விழுந்தனர். |
| கடன் கழிக்கிறார்கள். | உச்சி குளிர்ந்தாள். |
| காற்றாய்ப் பறந்தான். | கயிறு திரித்தான். |

5. இடைவெளியில் பொருத்தமான சொல்லை எழுதுங்கள்.

அ) அரசனுக்கு அரசி போல உழவனுக்கு, ............................

ஆ) குணவானுக்குக் குணவாட்டி போல சீமானுக்கு ..............

இ) சிறுமைக்குப் பெருமை போல வறுமைக்கு .....................

ஈ) இம்மைக்கு மறுமை போல விண்ணுக்கு .........................

உ) கடுவனுக்கு மந்தி போல களிறுக்கு ................................

6. ஒவ்வொரு வாக்கியத்திலும் தடித்த எழுத்திலுள்ள பகுதிகள் ஒவ்வொன்றுக்கும் விளக்கம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. பொருத்தமான விளக்கத்தைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுங்கள்.

அ) அருண் தான் பிடித்த **முயலுக்கு மூன்றுகால்** என நிற்கிறான்.

1. பிழையாய் விளங்கிப் பிடிவாதம் பிடிக்கிறான்.
2. அருண் முயல் எதனையும் கண்டதில்லை.
3. அருண் கண்ட முயலுக்கு மூன்று கால் இருந்தது.
4. அருணுக்கு முயலைப் பிடிக்காது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ) விமலா அன்று அணிந்த சீருடையை அழுக்காக்கிவிட்டு வந்தாள். அதைக் கண்ட தாயார் **நெருப்பெடுத்தார்.**

1. சீருடையை நெருப்பு வைத்துக் கொளுத்தினார்.
2. நெருப்புக்கொள்ளியால் சுட்டுத் தண்டனை கொடுத்தார்.
3. மிகுந்த கோபம் கொண்டு பேசினார்.
4. நெருப்பு மூட்ட மறுத்து விட்டார்.

இ) '**ஓட்டைக் கையனாய்** இருக்கிறாயே, எப்போ நாலு காசு சேர்க்கப் போகிறாய்?' என்று அண்ணன் தம்பியைப் பேசினான்.

1. வீண் செலவு செய்பவன்
2. சிக்கனமாகச் செலவு செய்பவன்
3. வீண் பொழுது போக்குபவன்.
4. கையில் ஓட்டை உள்ளவன்

ஈ) அவன் நினைத்த காரியம் **கைகூடிற்று.**

1. நிறைவேறுதல்
2. கையில் சேர்தல்
3. உண்மையாதல்
4. உருவமாதல்

உ) அரசியல் எதிரியின் மரணம் கேட்டு அமைச்சர் **முதலைக் கண்ணீர்** விட்டார்.

1. கழிவிரக்கம்
2. பொய்யிரக்கம்
3. கற்பனை செய்தல்
4. முதலையின் கண்ணீர்

**7. பின்வரும் தொடர் மொழிகளுக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்யுங்கள்.**

அ) எதையும் மேற் போக்காக ஆழ, அகலமின்றிச் செய்தல் என்னும் பொருள் தரும் மரபுத் தொடர்,

1. தலையைத் தடவல்
2. நுனிப்புல் மேய்தல்.
3. முகஞ்சுழித்தல்
4. வெட்டிவிழுத்தல்

ஆ) எதனையும் முறையின்றி ஒழுங்கின்றிச் செய்தல் என்னும் பொருளைப் புலப்படுத்தும் மரபுத் தொடர்,

1. குத்துக்கரணம்
2. தப்புத்தாளம்
3. அண்டப் புரட்டு
4. கழுத்தை முறித்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ) சிட்டாய்ப் பறத்தல் என்னும் மரபுத் தொடரின் பொருள்,

1. பறவை போலப் பறத்தல்.
2. சிட்டுக்குருவி போலப் பறத்தல்
3. மிகவிரைவாகச் செல்லுதல்
4. ஓடி ஒளித்தல்.

ஈ) புளிப்புத் தட்டல் என்னும் மரபுத் தொடரின் பொருள்,

1. விரும்புதல்
2. வெறுத்தல்
3. சுவைத்தல்
4. அருவருத்தல்

உ) நட்டாற்றில் விடுதல் என்னும் மரபுத் தொடரின் பொருள்,

1. முற்றாக அழித்தல்
2. நடு ஆற்றில் விடுதல்
3. நடு ஆற்றில் குதித்தல்
4. ஆபத்தில் கைவிடுதல்

8. பின்வரும் மரபுத் தொடரின் கருத்தினை எழுதுங்கள்.

அ) அல்லும் பகலும் : ..........................................................

ஆ) ஆறப்போடுதல் : ..........................................................

இ) இரண்டுபடுதல் : ..........................................................

ஈ) ஏட்டுச்சுரைக்காய் : ..........................................................

உ) ஒத்துப் பாடுதல் : ..........................................................

ஊ) கிள்ளுக்கீரை : ..........................................................

எ) காதுகுத்துதல் : ..........................................................

ஏ) கை கழுவுதல் : ..........................................................

ஐ) சூறையாடுதல் : ..........................................................

ஒ) பூசி மெழுகுதல் : ..........................................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. விடை எழுதுங்கள்.

அ) மனமாற்றம் என்னும் கதையில் வரும் தமிழாசிரியரின் பெயர் என்ன?

..............................................................................................

ஆ) மாணவர்களிடம் பொதுவாகக் காணப்பட்ட குறைகள் எவை?

..............................................................................................

..............................................................................................

..............................................................................................

இ) தமிழில் கூடிய புள்ளிகள் பெற்றவன் யார்? அவனுக்கு அதிபர் பரிசாகக் கொடுத்த நூலின் பெயர் என்ன?

..............................................................................................

..............................................................................................

ஈ) வாகீசனிடம் காணப்பட்ட சிறப்பு இயல்புகள் எவை?

..............................................................................................

..............................................................................................

உ) விடைத்தாள்களைத் திருத்தும் போது ஆசிரியர் எதற்காக வேதனைப்பட்டார்?

..............................................................................................

..............................................................................................

ஊ) வாகீசன் காலாண்டுப் பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெறாமைக்குக் காரணம் என்ன?

..............................................................................................

..............................................................................................

எ) அரையாண்டுப் பரீட்சையில் சங்கரன் அதிக புள்ளிகளைப் பெறத் தவறியமைக்குக் காரணம் என்ன?

..............................................................................................

..............................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏ) இக்கதையின் மூலம் நீங்கள் அறிந்துகொள்ளும் உண்மைகள் இரண்டு எழுதுங்கள்.

.......................................................................................

.......................................................................................

.......................................................................................

10. பின்வரும் சொற்கள் பெயராகவும் வினையாகவும் வரத்தக்க வகையில் வாக்கியங்கள் அமையுங்கள்.

அ) முடி (பெயர்) :..........................................................

(வினை) :..........................................................

ஆ) அரை (பெயர்) :..........................................................

(வினை) :..........................................................

இ) இரை (பெயர்) :..........................................................

(வினை) :..........................................................

ஈ) இறை (பெயர்) :..........................................................

(வினை) :..........................................................

உ) குடி (பெயர்) :..........................................................

(வினை) :..........................................................

ஊ) படி (பெயர்) :..........................................................

(வினை) :..........................................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. பின்வரும் பாடல்களைப் படித்த பின் கீழுள்ள வினாக்களுக்குரிய விடைகளைத் தெரிவு செய்யுங்கள்.

காற்றில் புகையைக் கலக்கலாமா?
கலந்தே உயிரைப் பறிக்கலாமா?
ஆற்றில் கழிவைச் சேர்க்கலாமா?
சேர்த்தே நீரைக் கெடுக்கலாமா?

தெருவில் குப்பை குவிக்கலாமா?
குவித்தே தூய்மை அழிக்கலாமா?
உருவில் சிறிய விலங்குகள் கூட
நமக்கே உதவும் மறக்கலாமா?

மரத்தை வெட்டி அழிக்கலாமா?
அழித்தே மழையைத் தடுக்கலாமா?
மரத்தால் உயிர்வளி கிடைப்பதனை
மண்ணில் என்றும் மறக்கலாமா?

அ) இப்பாடல்களுக்குப் பொருத்தமான தலையங்கம்,
1. தூய்மை அழிக்கலாமா? 2. கெடுக்கலாமா?
3. மறக்கலாமா?

ஆ) காற்றில் எதைக் கலக்கக் கூடாது?
1. கழிவை 2. புகையை 3. குப்பையை

இ) ஆற்றில் எதைச் சேர்க்கக் கூடாது?
1. மரத்தை 2. புகையை 3. கழிவை

ஈ) எதைக் குவித்தால் தூய்மை அழியும்?
1. காற்றை 2. புகையை 3. குப்பையை

உ) மழையைத் தடுக்க என்ன செய்ய வேண்டும்?
1. மரம் வளர்க்க வேண்டும்
2. மரத்தை அழிக்க வேண்டும்
3. குடை பிடிக்க வேண்டும்

ஊ) உயிர்வளி என்றால் என்ன?
1. காற்று 2. வீதி 3. பிராணவாயு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து 15 வாக்கியங்களுக்குக் குறையாமல் (கொப்பியில்) எழுதுங்கள்.

அ) நான் ஒரு உடைந்த பேனா. (சுயசரிதை)

ஆ) சூழல் மாசடைதலைத் தடுப்போம். (உரையாடல்)

இ) பாடசாலைப் பரிசளிப்பு விழாவில் நீர் நிகழ்த்தும் நன்றியுரை.

- ஒப்படை:

1. ஒரு நல்ல மாணவனிடம் இருக்க வேண்டிய நற்பண்புகளைப் பட்டியலிடுங்கள்.
2. உங்களுக்குத் தெரிந்த மரபுச் சொற்றொடர்களைப் பட்டியற்படுத்தி அவற்றின் கருத்தினையும் எழுதுங்கள்.
3. நீங்கள் படித்துச் சுவைத்த கதை ஒன்றினைச் சுருக்கமாக (கொப்பியில்) எழுதுங்கள். அதனை வகுப்பில் வாசித்துக் காட்டுங்கள்.

## தெரிந்து கொள்ளுங்கள்

### விலங்குகளின் ஒலிமரபுச் சொற்கள்

| | |
|---|---|
| நாய் குரைக்கும் | குதிரை கனைக்கும். |
| நரி ஊளையிடும். | பன்றி உறுமும். |
| யானை பிளிறும். | சிங்கம் முழங்கும் (கர்ச்சிக்கும்) |
| புலி உறுமும். | ஆடு கத்தும். |
| எலி கீச்சிடும். | குரங்கு அலப்பும். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9

# உணவின் இரகசியங்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. பின்வரும் சொற்களுள் ஒருசொல் பொருத்தமற்றது. அதன் கீழ்க் கோடிடுங்கள்.

அ) 1. நோய் 2. பிணி 3. மூப்பு
4. துன்பம் 5. வருத்தம்

ஆ) 1. உணவு 2. ஆகாரம் 3. மழை
4. உணவுப்பொருள் 4. உணர்வு

இ) 1. அரிசி 2. கோதுமை 3. சோளம்
4. கிழங்கு 5. கேழ்வரகு

ஈ) 1. உளுத்தம்பருப்பு 2. துவரம்பருப்பு 3. முட்டை
4. கடலைப்பருப்பு 5. வாதுமைப்பருப்பு

உ) 1. அகத்தி 2. சிறுகீரை 3. முள்ளங்கி
4. பொன்னாங்கண்ணி 5. முளைக்கீரை

2. பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் அடிக்கோடிட்ட சொற்களின் எதிர்க்கருத்துச் சொற்களை இடைவெளியில் வைத்து வாக்கியத்தை நிறைவு செய்யுங்கள்.

அ) தாயைக் கண்ட சேய் <u>முகவாட்டம்</u> நீங்கி முக ........................ பெற்றது.

ஆ) பீடபூமியில் <u>விரைவாகச்</u> சென்ற மகாவலி கங்கை சமதரையில் ............................ சென்றது.

இ) <u>முயற்சி</u> உடையார் <u>இகழ்ச்சி</u> அடையார். ஆனால் .................. உடையார் ............................ அடையார்.

ஈ) <u>குற்றவாளிகளுக்கு</u> நீதிபதி <u>தண்டனை</u> வழங்கினார். ஆனால் ............................ நீதிபதி .................... அளித்தார்.

உ) மன <u>அமைதி</u> உடையோர் <u>இன்பம்</u> அடைவர். ஆனால் மன ........................ உடையோர் ...................... அடைவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. பின்வரும் நிகழ்வுகளுக்குப் பொருத்தமான தொடர்களைத் தெரிவு செய்யுங்கள்.

அ) ''எனக்குப் பந்து வாங்கக் காசு தந்தால்தான் பாடசாலைக்குப் போவேன்'' என்று கண்ணன் பிடிவாதமாய் நின்றான்.

1. ஆறப் போடுதல் 2. ஒற்றைக் காலில் நிற்றல்
3. குட்டிக்கரணம் போடுதல் 4. வாய் காட்டினான்

ஆ) அருணன் ஆசிரியர் கொடுத்த வீட்டு வேலையை நாளைக்குச் செய்யலாம் என்று வைத்து விட்டுப் படம் பார்க்கச் சென்றான்.

1. கண்மூடித்தனம் 2. கைநழுவவிடல்
3. ஆறப்போடுதல் 4. கள்ளேடு போடல்

இ) வறுமையால் கஷ்டப்பட்டு வருந்திய நண்பனுக்கு முகுந்தன் ............

1. நட்டாற்றில் விட்டான் 2. கை கொடுத்தான்
3. ஏளனம் செய்தான் 4. கைகழுவி விட்டான்

ஈ) முரளி தன் தமையனைச் சிறிதும் மதியாமல் எதிர்த்துப் பேசினான்.

1. நாக்கு வளைத்தான். 2. மனம் திறந்து பேசினான்.
3. நாக்குப் புரண்டு பேசினான். 4. எடுத்தெறிந்து பேசினான்.

உ) பொய், களவு, மது அருந்துதல் முதலிய பாவங்களைச் செய்யும் குமாரசாமி சிவபக்தன் போல நடித்து மக்களை ஏமாற்றினான்.

1. கயிறு திரித்தல் 2. உருத்திராக்கப் பூனை
3. கிணற்றுத்தவளை 4. கூலிக்கு மாரடித்தல்

4. விடை எழுதுங்கள்.

அ) நோய்கள் உண்டாவதற்குரிய காரணம் யாது?

.......................................................................................................

ஆ) உணவு விடயத்தில் மனிதனுக்கும் பிராணிகளுக்கும் உள்ள வேறுபாடு யாது?

.......................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ) நாம் உண்ணும் உணவில் இடம்பெற வேண்டிய சத்துப் பொருள்கள் எவை?

.......................................................................................................

.......................................................................................................

ஈ) மாச்சத்து அதிகம் உள்ள தானியவகைகள் நான்கு எழுதுங்கள்.

.......................................................................................................

.......................................................................................................

உ) நமது நாட்டு மக்களின் முக்கிய உணவு எது?

.......................................................................................................

ஊ) தசைகளுக்குப் பலம் தரும் பருப்பு வகைகள் சில எழுதுங்கள்.

.......................................................................................................

எ) உடல் நலத்திற்கு இன்றியமையாத கீரை வகைகள் ஆறு எழுதுங்கள்.

.......................................................................................................

.......................................................................................................

ஏ) உடல் நலத்தைப் பேண உதவும் பழவகைகளின் பெயர்கள் தருக.

.......................................................................................................

ஐ) அரிசியைப் பல தடவைகள் கழுவுவதால் ஏற்படும் விளைவு யாது?

.......................................................................................................

.......................................................................................................

ஒ) உயிர்ச்சத்து 'ஏ' அதிகம் காணப்படும் உணவுப் பொருள்கள் சில எழுதுங்கள்.

.......................................................................................................

.......................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுங்கள்.

அ) சிங்கத்தின் குட்டி குருளை போல குரங்கின் குட்டி,
1. பார்ப்பு 2. பறழ் 3. பிள்ளை 4. குஞ்சு

ஆ) யானையின் கன்று களபம் என்பது போலக் கரடியின் குட்டி,
1. பார்ப்பு 2. பிள்ளை 3. குடாவடி 4. பறழ்

இ) மாவின் பிஞ்சு வடு என்பது போலப் பலாவின் பிஞ்சு,
1. கச்சல் 2. குரும்பை 3. மூசு 4. வடு

ஈ) பனையின் இளையது வடலி என்பது போலத் தென்னையின் இளையது,
1. பிள்ளை 2. குட்டி 3. நாற்று 4. கீற்று

உ) தவளையின் குஞ்சு பேத்தை என்பது போல அணிலின் இளையது,
1. குட்டி 2. பிள்ளை 3. பறழ் 4. கன்று

6. பின்வருவனவற்றின் இளமைப் பெயர்களை எழுதுங்கள்.

அ) காகம் : ........................ ஆ) கிளி : ................................
இ) நெல் : .......................... ஈ) வாழை : ............................
உ) வேம்பு : ........................ ஊ) எருமை : ..........................
எ) சிங்கம் : ........................ ஏ) பாம்பு : ................................
ஐ) பயிர்கள் : .................... ஒ) மா : ....................................

7. பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து இடைவெளி நிரப்புங்கள்.

அ) ஆனைகள் கட்டும் இடம் ............................... எனப்படும்.

ஆ) சந்தையில் பெரும் .................................. காணப்பட்டது.

இ) ........................ அணிவகுப்பில் முன்னணியில் சென்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈ) கண்ணன் .......................... யைத் தொலைத்து விட்டான்.

உ) தென்னைகள் அதிகம் உள்ள இடத்தைத் ...................... என்று அழைப்பார்கள்.

ஊ) மாலா .................... கொடுத்து மந்திரியை வரவேற்றாள்.

எ) ......................... கிராம மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர்.

ஏ) கண்ணன் ............................... இரண்டு வாங்கி வந்தான்.

ஐ) காலி முகத் திடலில் பார்க்கும் இடம் எங்கும் ......................... காணப்பட்டது.

ஒ) மழை பொழியத் தொடங்கியதும் .................................... வீடு நோக்கிச் சென்றது.

| | | | |
|---|---|---|---|
| சனக்கும்பல் | நூற்பந்து | ஆநிரை | மாஞ்சோலை |
| மலர்ச்செண்டு | ஆனைப்பந்தி | சேனைத்திரள் | |
| தென்னந்தோப்பு | திறப்புக்கோர்வை | காலாட்படை | |

8. கடிதம் ஒன்றில் இடம்பெறும் முக்கிய பகுதிகள் எவை?

..........................................................................................

..........................................................................................

9. **சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழை எனவும் எழுதுங்கள்.**

அ) சொற்கள் பொருள்படத் தொடர்ந்து நின்று ஒரே கருத்தை முழுமையாக வெளிப்படுத்துவது வாக்கியம் ஆகும். (..............)

ஆ) பொருள் முற்றுப் பெறாத தொடர் வாக்கியம் ஆகும். (.................)

இ) பொருள் முற்றுப் பெற்ற வாக்கியமாக அமைவதற்கு எழுவாய், பயனிலைத் தொடர்பு அவசியம். (.................)

ஈ) எழுவாய், பயனிலை செயப்படுபொருள் மூன்றும் வாக்கியத்தின் பிரதான உறுப்புக்கள் ஆகா. (.................)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ) கருத்து முற்றுப் பெறாத தொடர்மொழி எச்சத் தொடர்மொழி எனப்படும். (..................)

**10.** **பின்வரும் நிகழ்வுகள் ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான தொடர்களைத் தெரிவு செய்யுங்கள்.**

அ) மக்களைக் காப்பது காவல் துறையினரின் பணி. சில இடங்களில் அவர்கள் மக்களுக்குக் கொடுமை செய்கின்றனர்.

1. கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டது போல.
2. வேலியே பயிரை மேய்ந்தது போல.
3. கிளியை வளர்த்துப் பூனை கையில் கொடுத்தது போல.

ஆ) எனது அருமை நண்பன் சுகந்தன் மாதக்கணக்காக எங்கள் வீட்டுக்கு வரவில்லை. சென்ற புதன்கிழமை எதிர்பாராமல் வந்தான்.

1. கார்த்திகைப் பிறை கண்டது போல.
2. காகம் இருக்கப் பனம்பழம் விழுந்தது போல.
3. காற்றிலே அகப்பட்ட துரும்பு போல.

இ) அடியார்கள் கொடுத்த காணிக்கையைக் கொண்டு பெரும் பொருட்செலவில் சித்திரத்தேர் செய்யப்பட்டது.

1. சிறுகக் கட்டி பெருக வாழ்.
2. சிறுதுளி பெருவெள்ளம்.
3. சிறு துரும்பும் பல் குத்த உதவும்.

ஈ) கண்ணனும் காந்தனும் காட்டுக்குச் சென்றார்கள். எதிரே கரடி வந்தது. கண்ணன் மரத்தில் ஏறிக்கொண்டான். பாவம்! காந்தன் சமயோசித புத்தியால் தப்பிக்கொண்டான்.

1. ஆழமறியாமல் காலை விடாதே.
2. ஆபத்துக்குப் பாவம் இல்லை.
3. அன்பான சிநேகிதனை ஆபத்தில் அறியலாம்.

உ) விமலா பெரியவளாக வளர்ந்த போதிலும் பள்ளிப் பருவத்திலே தனக்கு உதவி செய்த மேகலாவை மறக்கவில்லை.

1. அழுத பிள்ளை பால் குடிக்கும்.
2. உப்பிட்டவரை உள்ளளவும் நினை.
3. திக்கற்றவனுக்குத் தெய்வம் துணை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. உணவு உண்ணும் போது கடைப் பிடிக்க வேண்டிய நடைமுறைகள் ஐந்து எழுதுங்கள்.

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

12. பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து 15 வாக்கியங்களுக்குக் குறையாமல் எழுதுங்கள்.

அ) சூழல் பாதுகாப்பின் அவசியம்.

ஆ) நாங்கள் பழங்கள் பேசுகிறோம் (பழங்கள் பேசும் முறையில் கற்பனையாக எழுதுங்கள்.)

இ) மாணவர் கடமை (மேடைப்பேச்சு)

ஈ) புகழ்ச்சிக்கு மயங்காதே (சிறுகதை).

- ஒப்படை

1. நிறையுணவு என்னும் தலைப்பில் பத்து வாக்கியங்கள் எழுதுங்கள்.
2. தற்போது நிலவும் போக்குவரத்து நெருக்கடி குறித்து வெளிநாட்டிலுள்ள உமது நண்பனுக்கு ஒரு கடிதம் எழுதுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10

# கடலுக்கென்ன கோபம்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. பின்வருவனவற்றுள் ஒரு சொல் ஒத்த கருத்தற்றது. அதன் கீழ்க் கோடிடுங்கள்.

அ) 1. ஆழி 2. கடல் 3. மோதிரம்
4. கடற்கரை 5. பவளம்

ஆ) 1. ஆழிப்பேரலை 2. சுனாமி 3. அழிவு அலை
4. பூகம்பம் 5. கடல்கோள்

இ) 1. சலனம் 2. கலக்கம் 3. தெளிவு
4. அசைவு 5. சஞ்சலம்

ஈ) 1. விசை 2. வேகம் 3. பக்கம்
4. வெற்றி 5. வித்தை

உ) 1. பாதிப்பு 2. கேடு 3. துன்பம்
4. வருத்தம் 5. இடையூறு

2. பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுங்கள்.

அ) உள்ளதைக் கொண்டு திருப்தியடைவதே நல்லது. இக்கருத்தமைந்த பழமொழி,
1. சிறுகக்கட்டி பெருக வாழ்.
2. துள்ளுகிற மாடு பொதி சுமக்கும்.
3. போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து.
4. வெளிவேடம் கூடாது.

ஆ) ஒற்றுமையே வெற்றியும் பலமும் தரும் என்னும் பொருளை விளக்கும் பழமொழி,
1. கீரைக் கடைக்கும் எதிர்க்கடை வேண்டும்.
2. அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு.
3. முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்.
4. அழுத பிள்ளை பால் குடிக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ) அளவுக்கு அதிகமான ஆசை துன்பத்தையே தரும். இக்கருத்தை விளக்கும் பழமொழி,

1. பேராசை கோடி தரித்திரம்.
2. அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு.
3. அடிக்குமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்.
4. சிறுகக் கட்டி பெருக வாழ்.

ஈ) செய்ய வேண்டிய காலத்தில் ஒரு தொழிலைச் செய்யாது தாமதித்தல் நன்றன்று. - இக்கருத்தை விளக்கும் பழமொழி,

1. ஆங்காலம் ஆகும்: போங்காலம் போகும்.
2. ஆறின கஞ்சி பழங்கஞ்சி.
3. ஆக்கப் பொறுத்தவன் ஆறப் பொறானா?
4. ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்.

உ) ஆனைக்கும் அடி சறுக்கும் என்னும் பழமொழி உணர்த்தும் பொருள்,

1. ஆனையும் அடி சறுக்கி விழுவது இயற்கை.
2. ஆனைக்கொரு காலம் பூனைக்கொரு காலம்.
3. திறமை மிக்கோரும் தவறு விடுதல் உண்டு.
4. பெருவலி படைத்தோரும் சிலசமயம் விழுவதுண்டு.

ஊ) இயற்கைக் குணத்தை மாற்றியமைத்தல் அரிதினுமரிது. என்னும் பொருளை விளக்கும் பழமொழி,

1. உயரவுயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா?
2. சுட்ட மண்ணும் பச்சை மண்ணும் ஒட்டா.
3. கழுதை அறியுமா கற்பூர வாசனை?
4. ஆடத் தெரியாதவள் கூடம் கோணல் என்றாளாம்.

**3. தடித்த எழுத்திலுள்ள சொற்களின் எதிர்க்கருத்துச் சொல்லைத் தெரிவு செய்யுங்கள்.**

அ) **சின்னஞ்சிறிய** நூல் ஒன்றை நேற்று வாங்கினேன்.

1. மிகப் பெரிய
2. பென்னம் பெரு
3. பென்னம் பெரிய
4. அழகான


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ) வாகனங்கள் இடது கைப்பக்கமாகச் செல்லும்.

1. குறுக்காக 2. வலது 3. எதிர்ப்புறமாக 4. முன்

இ) வீதி ஒழுங்கைக் கடைப்பிடித்தல் வேண்டும்.

1. கட்டளை
2. விதிகளை
3. திரள்
4. ஒழுங்கீனத்தை

ஈ) காந்தியைப் போலொரு சாந்த சொரூபனைக் காண்பதும் எளிதாகுமோ?

1. உருவன் 2. வடிவம் 3. அரூபனை 4. அழகான

உ) குறித்த நேரத்தில் விழா தொடங்கியது.

1. ஆரம்பித்தது
2. நடைபெற்றது
3. குழம்பியது
4. முடிவடைந்தது.

**4. விடை எழுதுக.**

அ) சுனாமி என்ற வார்த்தையை முதன்முதலில் பயன்படுத்திய நாடு எது?

.................................................................................................

ஆ) சுனாமியைக் குறிக்கும் வேறு பெயர்கள் எவை?

.................................................................................................

.................................................................................................

இ) சுனாமி அலை பற்றி மூன்று வாக்கியங்கள் எழுதுங்கள்

.................................................................................................

.................................................................................................

.................................................................................................

ஈ) உலகில் சுனாமியினால் பெரிதும் பாதிக்கப்படும் கடற்பகுதி எது?

.................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ) சுனாமியினால் பெரிதும் பாதிக்கப்படும் நாடுகள் எவை?

..........................................................................................

ஊ) 26.12.2004 இல் நிகழ்ந்த சுனாமியின் பாதிப்புக்குள்ளான நாடுகள் எவை?

..........................................................................................

எ) இலங்கையில் சுனாமியால் பாதிப்புக்குள்ளான பகுதிகள் எவை?

..........................................................................................

ஏ) ஊடகங்கள் எவற்றிற்கு முன்னுரிமை வழங்க வேண்டும்?

..........................................................................................

ஐ) உலகில் சுனாமியால் பெரிதும் பாதிக்கப்படும் நாடு எது? அங்கு இதுவரை ஏற்பட்டுள்ள சுனாமிகளின் தொகை என்ன?

..........................................................................................

ஒ) இக்கட்டுரையை வாசித்த பின்னர் உமது உள்ளத்தில் எழும் எண்ணங்களை எழுதுக.

..........................................................................................

..........................................................................................

5. பின்வரும் செய்யுளைப் படித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு உரிய விடையைத் தெரிக.

'வெள்ளிய அன்னக் கூட்டம் விளையாடி வீழ்வதைப் போல்
துள்ளியே அலைகள் மேன்மேல் கரையினிற் சுழன்று வீசும்
வெள்ளலை கரையைத் தொட்டு மீண்டபின் சிறுகால் நண்டுப்
பிள்ளைகள் ஓடியாடிப் பெரியதோர் வியப்பைச் செய்யும்'.

அ) இப்பாடலில் ஆசிரியர் புலப்படுத்த விரும்பும் மையப் பொருள்,

1. கடலின் எழிற் காட்சி.
2. அன்னக் கூட்டம் விளையாடும் காட்சி.
3. கடல் அலையையும் கடற் கரையையும்.
4. நண்டுப் பிள்ளைகளின் வியத்தகு செயல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ) 'வெள்ளிய அன்னக் கூட்டம் விளையாடி வீழ்வது' எனும் கூற்று இப்பாடலிலே,

1. மையப் பொருளாய் அமைகிறது.
2. உதாரணமாய் அமைகிறது.
3. சார்புப் பொருளாய் அமைகிறது.
4. உவமையாய் அமைகிறது.

இ) நண்டுப் பிள்ளைகள் செய்த வியப்பு எதுவாயிருக்கலாம்?

1. கூட்டமாய் அங்குமிங்கும் ஓடுவது.
2. வெள்ளலை மீண்டபின் புற்றுக்குள் (அளைக்கு) இருந்து ஒவ்வொன்றாகப் புறப்படுவது.
3. வெள்ளலை சுத்தம் செய்த நிலத்தில் எட்டுக்கால் பதித்துக் கோலம் போடுவது.
4. வெள்ளலை கரையைத் தொட வரும்போது புற்றுக்குள் மறைவது.

ஈ) இப்பாடலைப் படித்து இரசித்த பின் எச்சுவை உமது மனதில் விஞ்சி நிற்கிறது?

1. நகை 2. உவகை 3. இழிவரல் 4. பெருமிதம்

உ) எட்டுக்கால் ஊன்றி இரு கால் படமெடுத்து வட்டக் குடை பிடித்து வாறாராம் வன்னியனார். அவர் யார்?

1. வன்னியனார் 2. குடை 3. நண்டு 4. பாம்பு

**6. தொடர்புபடுத்துங்கள்.**

| | |
|---|---|
| சுனாமி | அமுதமும் நஞ்சு |
| பெரும் பாதிப்பு ஏற்படுத்திய சுனாமிகளின் தொகை | சலனம் எதையும் காட்டாது |
| சுனாமியால் பெரிதும் பாதிக்கப்படும் நாடு | துறைமுகஅலை |
| அளவுக்கு மிஞ்சினால் | பதினேழு |
| சுனாமி கடலின் மேல் மட்டத்தில் | ஜப்பான் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுங்கள்.

அ) கூலிக்கு மாரடித்தல் என்னும் மரபுத் தொடரின் பொருள்,
1. கூலி பெற்றுக் கொண்டு மார்பில் அடித்தல்.
2. கூலிக்கு வேலை செய்தல்.
3. வேண்டா வெறுப்பாக வேலை செய்தல்.
4. கூலிக்கு ஏற்ற வேலை செய்தல்.

ஆ) இராமன் எடுப்பார் கைப்பிள்ளை ஆகிவிட்டான். எடுப்பார் கைப்பிள்ளை என்பதன் பொருள்,
1. எடுப்பவர் கைக்குள் அடங்கிவிட்டான்.
2. யாருக்கும் வசமாகமாட்டான்.
3. யாவருக்கும் எளிதில் வசப்படுவான்.
4. எவரது கைக்கும் அடங்கான்

இ) முகம் ஒரு கண்ணாடி என்னும் கருத்தமைந்த பழமொழி,
1. அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு.
2. அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.
3. அகத்தி ஆயிரம் காய் காய்த்தாலும் புறத்தியே புறத்தி.
4. அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி.

ஈ) தூய்மை மாசற்றது என்னும் கருத்துடைய பழமொழி,
1. வெளுத்ததெல்லாம் பாலல்ல.
2. வெள்ளைக்கில்லைக் கள்ளச் சிந்தை.
3. மின்னுவதெல்லாம் பொன்னல்ல.
4. மனம் கொண்டது மாளிகை

உ) கப்பல் செலுத்துபவன் மீகாமன் என்பது போல வான ஊர்தி செலுத்துபவன்,
1. சாரதி 2. பாகன் 3. ஆயன் 4. வலவன்

8. பின்வரும் முற்பகுதிக்கேற்ற பிற்பகுதியைத் தெரிவு செய்யுங்கள்.

அ) அவன் பாடிய பாடல்கள்,
1. இன்பமூட்டுவதாய் இருந்தது.
2. இன்பமூட்டுவனவாயிருந்தன.
3. இன்பமூட்டுவதாய் இருந்தன.
4. இன்பமூட்டுவனவாக உள்ளன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ) கல்வி எனப்படுவது கற்றற்குரிய நூல்களை,

1. கற்பது கல்வி.
2. கற்பது கல்வியாம்.
3. கற்றல்
4. கல்வி எனப்படும்.

இ) தாய் சொற் கேளாது நடப்பது?

1. நல்ல பழக்கங்கள் அல்ல.
2. நல்ல பழக்கங்கள் அன்று.
3. நல்ல பழக்கம் அன்று.
4. நல்ல பழக்கம் அல்ல.

ஈ) நாங்கள் எல்லாத் திக்குகளிலும் சிதறி,

1. ஓடினான் 2. ஓடியது 3. ஓடினோம் 4. ஓடினார்கள்

உ) நெருப்பில் விழுந்த புழுவைப்போல உடம்பு ..............

1. பதைத்து நிற்கும்
2. பதைத்து நின்றது
3. பதைத்தன
4. பதைத்திருந்தார்கள்.

**9. பின்வரும் சொற்களைப் பெயராகவும் வினையாகவும் வரவாக்கியங்களில் அமைத்து எழுதுங்கள்.**

அ) ஒளி (பெயர்) :...........................................................

(வினை) :...........................................................

ஆ) உடை (பெயர்) :...........................................................

(வினை) :...........................................................

இ) வளை (பெயர்) :...........................................................

(வினை) :...........................................................

ஈ) தளை (பெயர்) :...........................................................

(வினை) :...........................................................


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ) மலை (பெயர்) : ..........................................................................

(வினை) : ..........................................................................

10. பின்வரும் அட்டவணையில் கோடிட்ட இடங்களில் பொருத்தமான காலம் காட்டும் வினைச்சொற்களை எழுதுங்கள்.

| | இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
|---|---|---|---|
| அ) | கூவியது | ............................ | ............................ |
| ஆ) | ............................ | ............................ | பாடுவோம் |
| இ) | ............................ | செய்கின்றான் | ............................ |
| ஈ) | ............................ | ............................ | உண்பான் |
| உ) | பேசினான் | ............................ | ............................ |
| ஊ) | ............................ | ஆடிக்கொண்டிருக்கிறாள் | ............................ |
| எ) | பாய்ந்தான் | ............................ | ............................ |
| ஏ) | ............................ | ............................ | ஓடுவான் |
| ஐ) | எழுதினாள் | ............................ | ............................ |
| ஒ) | ............................ | வருகின்றன | ............................ |

11. பொருத்தமான சொல்லை இடைவெளியில் வைத்து எழுதுங்கள்.

அ) குமரன் நன்றாய் ................................................. (பாடு)

ஆ) தேவி மாலை ................................................. (தொடு)

இ) வெள்ளம் பெருகி ................................................. (ஓடு)

ஈ) கமலா நடனம் நன்கு ................................................. (ஆடு)

உ) நாங்கள் நாளை பரிசு ................................................. (பெறு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. பின்வரும் தனி வாக்கியங்கைளத் தொடர் வாக்கியங்களாக்கி எழுதுங்கள்.

அ) அப்துல் கலாம் பாரத நாட்டின் சிறந்த விஞ்ஞானி. சனாதிபதியும் ஆவார்.

.......................................................................................................

ஆ) நான் இளமையில் படிப்பதை அசட்டை செய்தேன். இப்பொழுது பிறரின் இகழ்ச்சிக்கு உள்ளாகிறேன்.

.......................................................................................................

.......................................................................................................

இ) நுளம்புகள் எங்கும் பெருகின. டெங்கு நோய் வாட்டுகிறது.

.......................................................................................................

ஈ) மாலா மல்லிகை மலர் பறித்தாள். கூந்தலில் சூடினாள்.

.......................................................................................................

உ) கல்வி என்பது சிறந்த மருந்து. அது மனமயக்கத்தைப் போக்கும்.

.......................................................................................................

.......................................................................................................

13. பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுங்கள்.

அ) மதிமயங்குதல் என்றால்,

1. சந்திரன் மயங்குதல். 2. அறிவு கலங்குதல்.
3. பரவசமாதல். 4. நெருங்குதல்

ஆ) அணைகடந்து விட்டது என்றால்,

1. கரைகடந்து விட்டது.
2. தலையணை மாறிவிட்டது.
3. எல்லை தெரியாமல்.
4. அணை உடைந்து விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ) பஞ்சாய்ப் பறந்து விட்டன என்றால்,

1. பஞ்சாகி விட்டன.
2. இருந்த இடம் தெரியாது சென்று விட்டன.
3. காற்றிலடிபட்டுச் சென்றன.
4. பாரம் இல்லாது போயின.

ஈ) கண்ட துண்டமாக்கினான் என்றால்,

1. கழுத்தை வெட்டினான்.
2. பெரும் நிலப் பரப்பாக்கினான்.
3. கூறுகூறாக்கினான்
4. கூறாக்கினான்.

உ) அண்டங்கள் யாவிலும் என்றால்,

1. கண்டங்கள் அனைத்திலும்
2. உலகமெங்கிலும்
3. ஆகாயமெங்கும்
4. ஆழ்கடல்களில்

13. பின்வருவனவற்றுள் ஒன்றைப் பற்றிக் கட்டுரை எழுதுக.

அ) சுனாமி விளைத்த சேதங்கள்.

ஆ) நான் கண்ட வெள்ளப் பெருக்கு.

இ) பாடம் புகட்டும் பழமொழிகள்.

- **ஒப்படை:**

1. சுனாமி விளைத்த சேதங்கள் தொடர்பான செய்திகளையும் புகைப்படங்களையும் சேகரித்து வகுப்பில் காட்சிப்படுத்துக.
2. உங்கள் பகுதியில் பயன்படுத்தப்படும் பழமொழிகளைச் சேகரித்து சிறு நூலாகக் தொகுக்குக.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11

# பிறந்தநாள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. பின்வருவனவற்றுள் ஒருசொல் ஒத்த கருத்தற்றது. அதன் கீழ்க் கோடிடுங்கள்.

அ) 1. கொண்டாட்டம் 2. விழா 3. மகிழ்ச்சி
4. குடும்ப, சமூக, மத சிறப்பு நிகழ்ச்சி 5. போற்றுதல்
6. உறவின்மை

ஆ) 1. கட்டாயம் 2. வற்புறுத்தல் 3. அவசியம்
4. நிர்ப்பந்தம் 5. காத்திருப்பு
6. தவிர்க்க முடியாத நிலை

இ) 1. விருப்பம் 2. ஆசை 3. நாட்டம்
4. விருப்பு 5. நேசம் 6. வெறுப்பு

ஈ) 1. பாராட்டினார் 2. போற்றினார் 3. தூற்றினார்
4. புகழ்ந்தார் 5. மெச்சினார்
6. உரிமை கொண்டாடினார்

உ) 1. பெருமை 2. சிறுமை 3. உயர்ந்த நிலை
4. தகுதி 5. மேன்மை 6. கீர்த்தி

2. சரியான விடையின் கீழ்க் கோடிடுங்கள்.

அ) பாட்டு, செய்யுள், புலவர் என்னும் பல பொருளுடைய ஒரு சொல்,

1. கவி 2. இசை 3. கவிதை 4. நூல்

ஆ) வடிவம், நிறம், அழகு, குணம் என்னும் பல பொருளை உணர்த்தும் ஒருசொல்,

1. வர்ணம் 2. வருணம் 3. வண்ணம் 4. பாட்டு

இ) பக்கம், செல்வம், இடம், பொன் என்பவற்றைக் குறிக்கும் ஒருசொல்,

1. மாடு 2. பணம் 3. சிறப்பு 4. அழகு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈ) பாத்திரம், மரக்கலம், ஆபரணம் என்னும் பல பொருளை உணர்த்தும் ஒருசொல்,

1. தலம் 2. கலம் 3. நிலம் 4. களம்

உ) இசை, ஒலி, வேதம், மந்திரம், சுதி என்னும் பல பொருள் தரும் ஒருசொல்,

1. பாட்டு 2. ஓசை 3. சுருதி 4. மறை

## 3. பொருத்தமான சொல்லைத் தெரிந்து இடைவெளி நிரப்புங்கள்.

அ) பாலன் .......................................... சொற் பலனை அறிய பஞ்சாங்கத்தைத் தேடினான்.

1. பள்ளி 2. பன்னி 3. பல்லி 4. பழ்லி

ஆ) கழுகுக்கு நீண்ட .................................................. உண்டு.

1. அளகு 2. அலகு 3. அளவு 4. அழகு

இ) திருவள்ளுவர் இயற்றிய திருக்குறளில் ஆயிரத்து முந்நூற்று முப்பத்து மூன்று .................................. பாக்கள் உள்ளன.

1. குரல் 2. குறழ் 3. குறள் 4. குரள்

ஈ) ஒரு கருத்தைக் கூறும் பல சொற்களைத் தமிழில் ஒருபொருள் ............................................ என அழைப்பர்.

1. பலமொளி 2. பன்மொழி 3. பண்மொழி 4. பன்மொலி

உ) குழந்தைகள் கள்ளம் கபடம் ............................................

1. உள்ளவர்கள் 2. அற்றவர்கள்
3. அறிந்தவர்கள் 4. புரிந்தவர்கள்

## 4. பின்வரும் வாக்கிய வெற்றிடங்களை எழுவாய் பயனிலை இயைபுக்கு அமைவாகப் பூர்த்தி செய்யுங்கள்.

அ) கண்ணனும் கமலனும் வேகமாக (ஓடு ............................)

ஆ) கமலா, விமலா, மாலா மூவரும் (வரு ...........................)

இ) ஆ நிரைகள் வீடு நோக்கி (விரை ..................................)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈ) பொருள் வளம் பெருகின் நாடு (வளம் ..........................)

உ) குடும்பம் சமுதாயத்தின் சிறு (அங்க ..............................)

5. விடை எழுதுங்கள்.

அ) 'பிறந்த நாள்' என்னும் நாடகத்தில் இடம்பெறும் பாத்திரங்கள் யாவர்?

..........................................................................................

ஆ) பிறந்தநாள் கொண்டாட்டத்துக்கு அழைப்பு விடுத்தவர் யார்?

..........................................................................................

இ) பிறந்தநாளைக் கொண்டாடுவது வீண் செலவு எனக் கருதுகிறீரா? ஏன்?

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

ஈ) சாந்தியின் பிறந்தநாள் கொண்டாட்டத்துக்குப் போக வாணி மறுத்தமைக்குக் காரணம் என்ன?

..........................................................................................

..........................................................................................

உ) தீபா தனது பிறந்தநாளை எவ்வாறு கொண்டாட விரும்பவில்லை?

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

ஊ) தீபாவின் மனதைச் சிந்திக்க வைத்த சம்பவம் யாது?

..........................................................................................

..........................................................................................

..........................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எ) தீபா தனது பிறந்தநாளை எவ்விதம் கொண்டாட விரும்புவதாகத் தாய்க்குக் கூறினாள்?

.................................................................................................

.................................................................................................

.................................................................................................

.................................................................................................

.................................................................................................

ஏ) தீபாவின் அம்மா, அப்பாவிடம் கூறிய செய்தி யாது?

.................................................................................................

.................................................................................................

.................................................................................................

.................................................................................................

.................................................................................................

ஐ) தீபாவின் அப்பா மகிழ்ச்சியுடன் கூறிய வார்த்தைகள் எவை?

.................................................................................................

.................................................................................................

.................................................................................................

.................................................................................................

ஒ) இந்நாடகத்தைப் படித்த பின் உமது மனதில் எழும் எண்ணங்கள் எவை?

.................................................................................................

.................................................................................................

.................................................................................................

.................................................................................................

.................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. பின்வரும் பேச்சு வழக்குச் சொற்களுக்கு ஏற்ற எழுத்து வழக்குச் சொற்களை எழுதுங்கள்.

| பேச்சு வழக்கு | எழுத்து வழக்கு |
| --- | --- |
| அ) இண்டைக்கு | ............................................ |
| ஆ) பிள்ளையின்ர | ............................................ |
| இ) சொல்லுறது ஒண்டும் | ............................................ |
| ஈ) போறியா? | ............................................ |
| உ) போகயில்லையா? | ............................................ |
| ஊ) அண்டைக்கு | ............................................ |
| எ) வைச்சிருக்குது | ............................................ |
| ஏ) நினைக்கேல்ல | ............................................ |
| ஐ) இருக்கிது | ............................................ |
| ஒ) கொண்டாடுறன் | ............................................ |

7. பின்வரும் நிகழ்வுகளுக்குப் பொருத்தமான பழமொழிகளைத் தெரிவு செய்து அவற்றின் கீழ்க் கோடிடுங்கள்.

அ) தந்தை கூறிய புத்திமதிகளைத் தேவி நொடிப்பொழுதில் மறந்தாள்.

1. கன்மேல் எழுத்துப் போல.
2. நீர் மேல் எழுத்துப் போல.
3. ஆனைவாயிற் கரும்பு போல.
4. தான் பிடித்த முயலுக்கு மூன்று கால் போல.

ஆ) உலக நிலையை அறியாதவர்கள் வாழ்வில் முன்னேறுவது இயலாது.

1. குப்பையில் கிடந்தாலும் குன்றிமணி மங்காது.
2. கைப்புண்ணுக்குக் கண்ணாடி வேண்டாம்
3. கிணற்றுத் தவளைக்கு நாட்டு வளப்பம் தெரியாது.
4. குந்தித் தின்றாற் குன்றும் மாளும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ) ஒருவருடைய வீட்டுக்கு அடிக்கடி போய் வருவதால் வீட்டுக் காரர் வெறுப்படைவர்.

1. உப்பிட்டவரை உள்ளவும் நினை.
2. நித்தம் போனால் முற்றம் சலிக்கும்.
3. அடித்த கை தான் அணைக்கும்.
4. அருமையற்ற வீட்டில் எருமையும் குடியிருக்காது.

ஈ) ஒருமுறை பட்ட பொல்லாத அனுபவம் பின்னும் எச்சரிக்கையாய் இருக்கும்.

1. பட்டகாலிலே படும் கெட்ட குடியே கெடும்.
2. அடாது செய்தவர் படாது படுவர்.
3. சூடு கண்ட பூனை அடுப்பங்கரை நாடாது.
4. அழுதும் பிள்ளை அவளே பெற வேண்டும்.

உ) மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்.

1. விளையும் பயிரை முளையிலே தெரியும்.
2. காக்கைக்கும் தன்குஞ்சு பொன் குஞ்சு.
3. அனுபவம் முதிர்ந்தவர்கள் கூறும் புத்திமதிகள் எப்போதும் நல்லனவாகவே அமையும்.
4. பெரியோர் சொல் பெறுமதி மிக்கவை.

8. சரியான விடையின் கீழ்க் கோடிடுங்கள்.

அ) சொற்கள் பொருள் படத் தொடர்ந்து கருத்து முற்றுப் பெற்று நிற்கும் தொடர் மொழி,

1. பெயரெச்சத் தொடர் 2. வாக்கியம்
3. வினையெச்சத் தொடர் 4. எச்சத் தொடர் மொழி

ஆ) கருத்து முற்றுப் பெறாத தொடர்மொழி,

1. வாக்கியம் 2. வினையெச்சத் தொடர்
3. எச்சத் தொடர்மொழி 4. பெயரெச்ச சொற்றொடர்

இ) வாக்கிய உறுப்புக்களில் மிக முக்கியமானது,

1. அடைமொழி 2. பயனிலை
3. செயப்படுபொருள் 4. இணைமொழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈ) மாலா அழகான சட்டை தைத்தாள். இவ்வாக்கியத்தின் எழுவாய்,

1. சட்டை 2. மாலா 3. தைத்தாள் 4. அழகான

உ) பரதன் குளிர்ச்சி நிறைந்த சோலையுட் புகுந்தான். இவ்வாக்கியத்தின் பயனிலை,

1. சோலை 2. குளிர்ச்சி 3. நிறைந்த 4. புகுந்தான்

ஊ) சிவந்த மலர்கள் மொட்டவிழ்ந்து தேனைச் சிந்துகின்றன. இவ்வாக்கியத்தில் வந்துள்ள செயப்படுபொருள்,

1. மலர்கள் 2. சிந்துகின்றன
3. தேனை 4. மொட்டவிழ்ந்து

**9.** **பின்வரும் வாக்கியங்களை நன்கு அவதானித்துக் கீழுள்ள அட்டவணையைப் பூர்த்தி செய்க.**

அ) அம்மா அப்பம் சுட்டார்.

ஆ) நாங்கள் நாளை கொழும்பு செல்வோம்.

இ) ஆசிரியர் கணிதம் கற்பித்தார்.

ஈ) திரளான மக்கள் கலை நிகழ்ச்சிகளைக் கண்டு களித்தனர்.

உ) சாந்தியின் பிறந்தநாள் கொண்டாட்டத்துக்கு வாணி செல்லவில்லை.

ஊ) அருணன் பாட்டுப் பாடினான்.

| எழுவாய் | பயனிலை | செயப்படுபொருள் |
|---|---|---|
| ............................ | ............................ | ............................ |
| ............................ | ............................ | ............................ |
| ............................ | ............................ | ............................ |
| ............................ | ............................ | ............................ |
| ............................ | ............................ | ............................ |
| ............................ | ............................ | ............................ |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. பின்வரும் கருத்துக்களுக்குப் பொருத்தமான பழமொழிகளை எழுதுங்கள்.

அ) முகம் ஒரு கண்ணாடி.

..............................................................................................

ஆ) ஒற்றுமையே பலம்.

..............................................................................................

இ) முதலைக் கண்ணீர்.

..............................................................................................

ஈ) வறுமையிற் செம்மை.

..............................................................................................

உ) நன்றி மறவேல்.

..............................................................................................

ஊ) இளமையில் செய்

..............................................................................................

எ) சிறியதிலும் சிறப்புண்டு.

..............................................................................................

ஏ) தன்னுடையது பெரிது.

..............................................................................................

ஐ) பயிற்சியின் பயன்.

..............................................................................................

ஒ) சிறிதென்று இகழாதே.

..............................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. சந்தர்ப்பம் கூறுக.

அ) ''உனக்கென்ன நீ பணக்கார வீட்டுப் பிள்ளை. நீ பெரிசாப் பிறந்தநாளைக் கொண்டாடுவாய்''

யார் : ..............................................................

யாருக்கு : ..............................................................

எச்சந்தர்ப்பத்தில் : ..............................................................

ஆ) ''உனக்குப் பிறந்த நாளைக் கொண்டாட விருப்பமில்லையா?''

யார் : ..............................................................

யாருக்கு : ..............................................................

எச்சந்தர்ப்பத்தில் : ..............................................................

இ) ''வருசத்துக்கு ஒருமுறை தான் கொண்டாடுறது. அதைப் பெரிசாய்க் கொண்டாடத்தானே வேணும்.''

யார் : ..............................................................

யாருக்கு : ..............................................................

எச்சந்தர்ப்பத்தில் : ..............................................................

ஈ) ''நீ சாந்தியின்ர பிறந்தநாள் கொண்டாட்டத்துக்கு வரமாட்டியா?''

யார் : ..............................................................

யாருக்கு : ..............................................................

எச்சந்தர்ப்பத்தில் : ..............................................................

உ) ''பிறந்தநாள் கொண்டாட்டத்துக்குப் போறதெண்டால் நல்ல உடுப்புகள் வேணும். நல்ல உடுப்புகள் என்னிடம் இல்லையே''

யார் : ..............................................................

யாருக்கு : ..............................................................

எச்சந்தர்ப்பத்தில் : ..............................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊ) ''என்ர செல்ல மகளுக்கு என்ன விருப்பமோ அதைச் செய்யிறன். என்ன வேணுமெண்டு சொல்லு பிள்ளை''

யார் : ....................................................

யாருக்கு : ....................................................

எச்சந்தர்ப்பத்தில் : ....................................................

எ) ''என்ர பிள்ளை இந்த வயதில் இப்படிச் சிந்திப்பாளெண்டு நான் கனவிலும் நினைக்கேல்ல.''

யார் : ....................................................

யாருக்கு : ....................................................

எச்சந்தர்ப்பத்தில் : ....................................................

12. பின்வரும் முற்பகுதிக்குப் பொருத்தமான பிற்பகுதியைத் தெரிவு செய்யுங்கள்.

அ) தமிழில் அறிவியலைச் சொல்ல பல புதிய சொற்களை

1. உருவாக்கிப் பயன்படுத்த வேண்டும்.
2. உருவாக்க வேண்டியதில்லை.
3. உருவாக்குதல் அவசியம்.
4. உருவாகியுள்ளது.

ஆ) 'பாக்ஸ்' என்று அழைக்கப்படுவது,

1. இ-மடல் 2. மின்னஞ்சல்
3. தொலைநகல் 4. கணினி

இ) வாணியும் தீபாவும் நேற்றுப் படம் பார்க்கச்

1. செல்கிறார்கள் 2. சென்றீனம்
3. சென்றனர் 4. செல்வார்கள்

ஈ) பறவைக் கூட்டம் குளக்கரையில்

1. இருந்தனர் 2. இருந்தது 3. இருந்தன 4. இருக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ) தங்கத் தாம்பாளம் போல மாலைச் சூரியன்,

1. தோன்றியது.
2. பொன்நிறமாகத் தோன்றியது.
3. வெண்முகிலாய்த் தெரிந்தது.
4. கண்ணைப் பறித்தது.

13. உமது பிறந்தநாள் கொண்டாட்டத்துக்கு வருமாறு நண்பனுக்கு/ நண்பிக்கு ஒரு கடிதம் எழுதுக.

- ஒப்படை:

அ) பின்வரும் பழமொழிகளுக்கான கருத்தினை எழுதுக.

1. அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்.

.....................................................................................................

2. அற்ப ஆசை கோடி தரித்திரம்.

.....................................................................................................

3. ஆனைக்கும் அடி சறுக்கும்.

.....................................................................................................

4. ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது.

.....................................................................................................

5. நிறைகுடம் தழும்பாது.

.....................................................................................................

ஆ) பின்வரும் பேச்சு வழக்குச் சொற்களை எழுத்து வழக்குச் சொற்களாக மாற்றி எழுதுக.

1. எழுதினையா?
2. சொல்லுறபடி
3. வரமாட்டியா?
4. கண்டனான்
5. நிண்டதால
6. போறியா?
7. என்ன நினைப்பினம்?
8. வரயில்லை
9. மாசத்துக்கு
10. நடந்திருச்சு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12

# குருவிப் பாட்டு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. பின்வருவன ஒவ்வொன்றிலும் ஐந்து சொற்கள் உள்ளன. அவற்றுள் இரண்டு ஒத்த கருத்துடையவை. இரண்டு எதிர்க் கருத்துடையவை. ஒன்று வித்தியாசமானது. அதன் கீழ்க் கோடிடுங்கள்.

அ) 1. மானிடர் 2. மேலோர் 3. கீழோர்
4. மனிதர் 5. வேந்தர்

ஆ) 1. கவலை 2. இன்பம் 3. துக்கம்
4. இல்லை 5. துன்பம்

இ) 1. ஆகாயம் 2. வானம் 3. சிறிது
4. பெரிது 5. உணவு

ஈ) 1. ஏழை 2. வறியவன் 3. தாழ்வு
4. எல்லை 5. உயர்வு

உ) 1. கபடம் 2. கபடதாரி 3. வஞ்சகம்
4. இளையோர் 5. மூத்தோர்

2. பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுங்கள்.

அ) குருவிகளிடையே ............................ என்ற பேதமில்லை.
1. உயர்வு தாழ்வு 2. கீழோர் மேலோர்
3. மீளா அடிமை 4. பணமும் காசும்

ஆ) எல்லோரும் வேந்தரெனத் திரிவன,
1. விலங்குகள் 2. மனிதர்கள்
3. குருவிகள் 4. மரங்கள்

இ) எள்ளற்குரிய குணம் எதுவும் எம்மிடம் இல்லை. இங்கு எள்ளல் என்பதன் பொருள் அல்லாதது,
1. கேலி 2. பரிகாசம்
3. நகையாடத்தக்க 4. எழுதுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈ) குருவிகள் விளையாடும் இடங்கள் அல்லாதது.

1. பூ நிறை தருக்கள் 2. சோலைகள்
3. தேனிறை மலர்கள் 4. சிறு குடில்கள்

உ) காலையும் மாலையும் கடவுளைத் தொழுதிடுவன எவை?

1. பூக்கள் 2. விலங்குகள்
3. குருவிகள் 4. குளங்கள்

ஊ) குருவிப் பாட்டுப் பாடிய கவிஞர்,

1. கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை
2. சுப்பிரமணிய பாரதியார்.
3. வித்துவான் க. வேந்தனார்
4. சோமசுந்தரப்புலவர்.

**3. பின்வருவனவற்றுள் ஒருசொல் ஏதோ ஒரு வகையில் பொருத்தமற்றது. அந்தச் சொல்லின் கீழ்க் கோடிடுங்கள்.**

| | | | | |
|---|---|---|---|---|
| அ) | 1. கடுவன் | 2. நாம்பன் | 3. பசு | 4. கடா |
| ஆ) | 1. கோயில் | 2. பாடசாலை | 3. நல்லூர் | 4. வாகனம் |
| இ) | 1. படித்தான் | 2. படித்து | 3. படிக்கிறான் | 4. படிப்பான் |
| ஈ) | 1. கோடை | 2. பகல் | 3. மாதம் | 4. வாய் |
| உ) | 1. நீர் | 2. அவன் | 3. நீ | 4. நீங்கள் |

**4. பின்வரும் வாக்கியங்களின் பொருளைப் புலப்படுத்தும் தனிச் சொல்லின் கீழ்க் கோடிடுங்கள்.**

அ) சிவசாமி இறைவன் ஒருவன் இருக்கிறான் என நம்புபவன்.

1. நாத்திகன் 2. ஆத்திகன் 3. பக்தன் 4. பேதை

ஆ) பலவகை நூல்களையும் சேகரித்து மக்களுக்கு வழங்கி உதவி புரிவது

1. புத்தகசாலை 2. பாடசாலை
3. சனசமூக நிலையம் 4. நூல் நிலையம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ) மக்கள் தம்மிடம் உள்ள பணத்தைப் பாதுகாப்பாக வைத்துத் தேவையான போது பெறும் இடம்,

1. வங்கி 2. உண்டியல் 3. பெட்டகம் 4. பணப்பை

ஈ) பாடசாலைப் பாட நேரங்களைக் குறிப்பிடும் அட்டவணை.

1. தினவரவு 2. நேரசூசி
3. பாட அறிக்கை 4. பாடநூல்

உ) சந்திரன் எமக்குச் சிறிதேனும் தோன்றாமல் இருக்கும் நாள்,

1. பூரணை 2. பூர்வபக்கம்
3. அமாவாசை 4. தேய்பிறை

5. பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுங்கள்.

அ) கலைவிழாவுக்குப் பெருந்திரளானோர் வந்திருந்தனர். இதில் வந்துள்ள பயனிலை,

1. திரளானோர் 2. கலைவிழாவுக்கு
3. விழாவுக்கு 4. வந்திருந்தனர்

ஆ) வண்ண வண்ணப் பூக்களைக் கண்டு வாசுகி மகிழ்ந்தாள். இதில் வந்துள்ள எழுவாய்,

1. பூக்கள் 2. வாசுகி 3. மகிழ்ந்தாள் 4. கண்டு

இ) கிட்டாதாயின் வெட்டென மற. இதில் மறைந்து வந்த எழுவாய்,

1. கிட்டாதாயின் 2. வெட்டென 3. நீ 4. மற

ஈ) கழனியிலே விளைந்த அரிவி வெட்டிச் சூடு வைத்தனர். இதில் வந்த செயப்படுபொருள்,

1. உழவன் 2. வயல் சூடு
3. அரிவி சூடு 4. சூடு வயல்

உ) பின்வருவனவற்றுள் பயனிலை மறைந்து வந்த வாக்கியம்.

1. செய்வன திருந்தச் செய்
2. நாளைக்கு எங்களுக்கு விடுமுறை.
3. இன்று மழை விடாது.
4. தம்பிக்குப் பரிசு கிடைத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. பின்வரும் பழமொழிகளுக்குப் பொருத்தமான கருத்தைத் தெரிவு செய்யுங்கள்.

அ) அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு.

1. அமுதம் ஒருநாளும் நஞ்சாக மாட்டாது.
2. விலையுயர்ந்த பொருளை ஒருநாளும் வீணாக்கக் கூடாது.
3. அளவோடு உண்டால் சுகவாழ்வு வாழலாம்.
4. எந்தப் பொருளிலும் பேராசை கொள்ளக் கூடாது.

ஆ) ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு.

1. எந்தக் கருமத்தையும் ஒற்றுமையாகச் செய்தல் வேண்டும்.
2. அனைவரும் ஒற்றுமையாக உழைத்தால் நல்வாழ்வு வாழலாம்.
3. ஒன்று சேர்ந்து உழைத்தால் உருப்பட முடியாது.
4. ஆலமரத்தைத் தாங்கும் விழுது போல வாழ்வு அமைய வேண்டும்.

இ) ஆறிலும் சாவு நூறிலும் சாவு.

1. மரணத்துக்குக் காலம் இல்லை.
2. மரணம் ஆறிலும் வரும் நூறிலும் வரும்.
3. மரணம் நிரந்தரமானது.
4. மரணத்துக்கு எல்லை இல்லை.

ஈ) உப்பிட்டவரை உள்ளளவும் நினை.

1. உப்பில்லாமல் உணவு உண்பவரை நினை.
2. உப்பை யார் கொடுத்தாலும் அவரை மறவாதே.
3. ஒருவர் சிறிய நன்மை செய்தாலும் அவரை மறக்கக் கூடாது.
4. ஒருவர் செய்யும் நன்மையை உடனே மறந்துவிட வேண்டும்.

உ) வெள்ளம் வருமுன் அணை போட வேண்டும்.

1. வெள்ளம் வருவதற்கு முன் அணை கட்டிவிட வேண்டும்.
2. வெள்ளத்தைத் தடுக்க அணை உதவும்.
3. எதற்கும் முன்னேற்பாடு அவசியம்.
4. வெள்ளத்தைத் தடுக்க ஒன்றுசேர வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. இடைவெளியை நிரப்பத்தக்க பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்யுங்கள்.

அ) யுத்தம் காரணமாக உணவுப் பொருட்களின் விலை ............................ என்று ஏறி விட்டது.

1. கலகல 2. சளசள 3. மளமள 4. கரகர

ஆ) புயற் காற்றினால் மரங்கள் ........................ என முறிந்து வீழ்ந்தன.

1. கடகட 2. கரகர 3. படபட 4. சரசர

இ) கண்ணனின் மகள் .................... என வளர்ந்து விட்டாள்.

1. பளபள 2. மொழு மொழு 3. குடுகுடு 4. தகதக

ஈ) காமாட்சி வேதனை தாங்காது ............................... என்று கண்ணீர் வடித்தாள்.

1. சலசல 2. பொலபொல 3. கலகல 4 சரசர

உ) சூரியனின் செம்பொற் கிரணங்கள் பட்டு இளந்தளிர்கள் தங்கத் தகடுகளாகத் ............................... என மின்னின.

1. படபட 2. கலகல 3. தகதக 4. மொழுமொழு

ஊ) மாட்டு வண்டி வீதியில் ......................... என்று ஓடியது.

1. கடகட 2. மடமட 3. கலகல 4. பொலபொல

எ) கமலாவின் நகைச்சுவைப் பேச்சைக் கேட்ட கலா ........... என்று சிரித்தாள்.

1. கடகட 2. பளபள 3. கலகல 4. குளுகுளு

ஏ) தாயும் மகளும் ...................... என்று இரகசியம் பேசினர்.

1. குளுகுளு 2. கலகல 3. கிலுகிலு 4. குசுகுசு

ஐ) ஆற்றுநீர் ............................. என்று ஓடிக்கொண்டிருந்தது.

1. பொலபொல 2. கலகல 3. சலசல 4. சடசட

ஒ) அணை திறக்கப்பட்டதும் வெள்ளம் ............... எனப் பாய்ந்தது.

1. கமகம 2. குபுகுபு 3. குளுகுளு 4. பளபள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. விடை எழுதுங்கள்.

அ) குருவிகள் உணவு பற்றி ஏன் கவலைப்படுவதில்லை?

..........................................................................................

..........................................................................................

ஆ) குருவிகளிடம் எவ்வாறான வேறுபாடுகள் இல்லை?

..........................................................................................

..........................................................................................

இ) குருவிகளிடம் காணப்படும் சிறந்த குணங்கள் எவை?

..........................................................................................

..........................................................................................

ஈ) மனிதர்களிடம் காணப்படும் எத்தகைய குணங்கள் குருவிகளிடம் இல்லை?

..........................................................................................

..........................................................................................

உ) குருவிகளின் இன்ப வாழ்க்கைக்கு எவை காரணமாயுள்ளன எனக் கவிஞர் கூறுகிறார்?

..........................................................................................

..........................................................................................

ஊ) குருவிகளின் நாளாந்த நிகழ்வுகள் எவை?

..........................................................................................

..........................................................................................

9. சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழை எனவும் எழுதுங்கள்.

அ) குருவிக் குலத்தில் மேலோர் கீழோர் என்ற பேதம் இல்லை. (..........)

ஆ) காற்றும் ஒளியும் ஆகாயமும் குருவிகளின் வீடாகும். (..........)

இ) கள்ளம், கபடம், கர்வம் அவற்றின் குணமாகும். (.........)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈ) மானிடர் சின்னஞ்சிறு குடில்களில்
சீரழிந்து வாழ்வதில்லை. (..........)

உ) குருவிகளுக்கு எவ்வித கவலையுமில்லை. (..........)

ஊ) குருவிகள் காலையும் மாலையும்
கடவுளைத் தொழுவதில்லை. (..........)

10. பின்வரும் வாக்கியங்களிலுள்ள எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்களை அட்டவணையில் எழுதுங்கள்.

அ) கண்ணன் மல்லிகை மலர் பறித்தான்.
ஆ) பாரதியின் பாடல்கள் தேசிய உணர்வைத் தூண்டவல்லன.
இ) அகதிகள் தங்கள் தாயகத்தை விட்டுப் புறப்பட்டுச் சென்றனர்.
ஈ) கருமேகம் சூழ்ந்த வானம் மழையை அள்ளிப் பொழிந்தது.
உ) விண்வெளி மனிதன் செவ்வாய்க் கிரகம் சென்றுள்ளான்.

| எழுவாய் | பயனிலை | செயப்படுபொருள் |
|---|---|---|
| ............................ | ............................ | ............................ |
| ............................ | ............................ | ............................ |
| ............................ | ............................ | ............................ |
| ............................ | ............................ | ............................ |
| ............................ | ............................ | ............................ |

11. பின்வருவனவற்றுள் ஒன்றைப் பற்றி 100 சொற்களுக்குக் குறையாமல் (கொப்பியில்) எழுதுக.

1. நான் ஒரு பறவையானால். 2. இளமையிற் கல்வி.
3. எனது பிறந்தநாள்

(குறிப்பு : கட்டுரை மலர் - தரம் 6 நூலைத் துணைக் கொள்க)

- ஒப்படை:

1. குருவிப் பாட்டு என்னும் கவிதையில் கூறப்பட்டுள்ளனவற்றை உமது மொழி நடையில் வகுப்பில் எடுத்துக் கூறுக.
2. குருவிகளிடம் காணப்படும் சிறப்பியல்புகளைப் பட்டியலிடுக.
3. நீர் விரும்பம் குருவி பற்றிக் கவிதை எழுதுக.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13
# மனநிறைவு தரும் பொழுதுபோக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பாடம் : 13 | மனநிறைவு தரும் பொழுது போக்கு | செயல் : 13 |
|---|---|---|

1. அடிக்கோடிட்ட சொற்களுக்குப் பொருத்தமான ஒத்த சொல் வைத்து வாக்கியங்களைத் திருப்பி எழுதுங்கள்.

அ) பழைய காலத்து முத்திரைகளைச் சேகரித்துப் பத்திரப்படுத்துவோர் இன்றும் பலர் உள்ளனர்.

.......................................................................................................

ஆ) வீணாகப் பொழுதைப் போக்காது நல்ல காரியங்களில் ஈடுபடுவது நன்று.

.......................................................................................................

இ) பல்வேறு வண்ணங்களைக் கொண்ட மீன்களைப் பார்க்கலாம்.

.......................................................................................................

ஈ) குறைவான மீன்களே நிறைவான மகிழ்ச்சியைத் தரும்.

.......................................................................................................

உ) இயற்கையின் விந்தையைப் பல்வேறு வழிகளில் அறிந்துகொள்ள முடிகிறது.

.......................................................................................................

2. அடிக்கோடிட்ட சொற்களுக்குப் பொருத்தமான எதிர்க்கருத்துச் சொற்களை வைத்து வாக்கியங்களை மாற்றி எழுதுங்கள்.

அ) கவலையுற்ற நேரங்களில் அலங்கார மீன்களைப் பார்த்துக் கொண்டிருந்தால் உள்ளத்தில் துன்பம் நீங்கும்.

.......................................................................................................

.......................................................................................................

ஆ) நன்னீர் அலங்கார மீன்களை வீட்டில் வளர்ப்பது சுலபம்.

.......................................................................................................

.......................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ) அதிக அளவு மீன்கள் தொட்டிக்குள் இருந்தால் சுவாசிப்பதற்குப் போதுமான காற்றுக் கிடைக்காது.

..............................................................................................

..............................................................................................

ஈ) மீன் தொட்டியை மூடி வைப்பது நல்லது.

..............................................................................................

..............................................................................................

உ) மனப் பதற்றம் இன்றி அமைதியான வாழ்வு தொடர இப் பொழுதுபோக்குத் துணை புரியும்.

..............................................................................................

..............................................................................................

3. பொருத்தமான சொல்லைத் தெரிந்து இடைவெளியை நிரப்புங்கள்.

அ) ஏழைகளுக்கு .................................. மனப்பான்மை நமக்கு வேண்டும்.

ஆ) .............................. துறையில் கப்பல் ஒன்று நங்கூரமிட்டு நின்றது.

இ) கடற் ........................................ சிறுவர்கள் ஓடி விளையாடி மகிழ்ந்தனர்.

ஈ) ஆடையில் பட்ட .............................. சவர்க்கார நீரினால் அகன்றது.

உ) நூலகத்தில் ....................... நூல்கள் பல காணப்பட்டன.

ஊ) நல்ல விடயங்களை நன்கு கற்று .................................... என்று ஆசிரியர் கூறினார்.

எ) வேலணைக்கும் புங்குடுதீவுக்கும் இடையே உள்ள ....................................... கடக்கப் பாலம் அமைக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏ) பறந்து பறந்து திரியும் ................................ வாழ்வுக்கு இணை ஏதுமில்லை.

ஐ) மணமகள் ...................................... உடுத்துத் திருமண மண்டபத்திற்கு வருகை தந்தாள்.

ஒ) மரம் போன்ற மனது படைத்தோரே ................................ செயல்களில் ஈடுபடுவர்.

| | | | | |
|---|---|---|---|---|
| கூறை | அறி | பரவையை | இரங்கும் | கரையில் |
| இறங்கு | அரிய | கறை | பறவை | மறச் |

**4. பின்வரும் சொற்களை வைத்துப் பொருள் விளங்க வாக்கியம் அமையுங்கள்.**

அ) பொழுதுபோக்கு : ....................................................................

ஆ) மன விழை : ........................................................................

இ) கணப்பொழுதில் : ..................................................................

ஈ) எளிதில் : ...........................................................................

உ) இடையூறு : .........................................................................

**5. விடை எழுதுங்கள்.**

அ) பயனுள்ள பொழுது போக்குகள் இரண்டு எழுதுங்கள்.

..........................................................................................

..........................................................................................

ஆ) உலகப் பொழுது போக்குகளில் முதன்மையானது எது?

..........................................................................................

இ) வண்ண மீன்களின் செயற்பாடுகள் சில தருக.

..........................................................................................

..........................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈ) அலங்கார மீன்களைப் பார்ப்பதால் உள்ளத்தில் ஏற்படும் மாற்றங்கள் எவை?

..............................................................................................

..............................................................................................

உ) வண்ண மீன்களை வளர்ப்பதால் ஏற்படும் பயன்கள் எவை?

..............................................................................................

..............................................................................................

ஊ) மீன் வளர்ப்பில் மிக முக்கியமாகக் கடைப்பிடிக்க வேண்டியது எது?

..............................................................................................

..............................................................................................

எ) மீன் தொட்டியில் வளர்ப்பதற்கு ஏற்ற நன்னீர் மீன்கள் எவை?

..............................................................................................

ஏ) மீன் தொட்டியைச் சுத்தம் செய்யும் முறையை விளக்குக.

..............................................................................................

..............................................................................................

ஐ) எவ்வகை மீன்களை வீட்டில் வளர்க்கக் கூடாது?

..............................................................................................

ஒ) பூனை மீன்களின் செயற்பாடு எத்தகையது?

..............................................................................................

..............................................................................................

6. பொருத்தமான ஒலிக்குறிப்புச் சொல்லைத் தெரிந்து இடைவெளி நிரப்புங்கள்.

அ) கமலாவின் நெஞ்சம் கடுங் குளிரினால் ........................... என நடுங்கியது.

ஆ) குற்றம் உள்ள நெஞ்சம் எப்பொழுதும் ...........................




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ) சிக்குன்குனியா நோய் வந்தபின் என் உடல் எப்போதும் ........................................

ஈ) இடம் பெயர்ந்த மக்களின் கண்களிலிருந்து நீர் ............. என உதிர்ந்தது.

உ) பரீட்சை முடிவைக் கேட்டதும் என் உள்ளம் மகிழ்ச்சியால் ..................................

| | | | | |
|---|---|---|---|---|
| கிளுகிளுத்தது | கிடுகிடு | கணகணக்கிறது | குறுகுறுக்கும் | பொலுபொலு |



7. மேலே உள்ள படத்தை நன்கு அவதானியுங்கள். அதன் பின்னர் கீழுள்ள கவிதையைத் தொடர்ந்து எழுதுங்கள்.

வண்ண வண்ண மீன்கள்
வடி வான மீன்கள்
அண்ணா வாங்கித் தந்த
அருமை யான மீன்கள்

தங்க நிற மீன்கள்

.................................................................

.................................................................

.................................................................

.................................................................


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுங்கள்.

அ) சிறந்த பொழுதுபோக்கு அல்லாதது,

1. சுற்றித் திரிதல் 2. முத்திரை சேகரித்தல்
3. வீட்டுத் தோட்டம் செய்தல் 4. மீன் வளர்த்தல்

ஆ) உலகப் பொழுது போக்கில் முதன்மையானது,

1. முத்திரை சேகரித்தல் 2. வண்ண மீன் வளர்ப்பு
3. தொலைக்காட்சி பார்த்தல் 4. திரைப்படம் பார்த்தல்

இ) வண்ண மீன்களை வளர்ப்பதாலும் பராமரிப்பதாலும்,

1. மன அழுத்தம் விலகும் 2. பணச் செலவு ஏற்படும்
3. கவலைகள் பெருகும் 4. பொழுது போகாது

ஈ) மீன் வளர்ப்பதில் முக்கியமாகக் கடைப்பிடிக்க வேண்டியது,

1. அழகு 2. சுத்தம் 3. வெதுவெதுப்பு 4. மின்சக்தி

உ) வீட்டில் வளர்க்கத்தக்க மீன் வகை அல்லாதது,

1. தங்க மீன்கள் 2. குப்பி மீன்கள்
3. பூனை மீன்கள்
4. சண்டைக் குணமுடைய மீன்கள்

9. சரியான விடையைத் தெரிவு செய்யுங்கள்.

அ) எண்பதாவது ஆண்டில் எடுக்கப்படும் விழா,

1. வைரவிழா 2. பொன்விழா
3. அமுதவிழா 4. மணிவிழா

ஆ) நிகழ்ச்சி ஒன்றை மேடையேற்றுவதற்கு முன் நிகழ்த்திப் பார்ப்பது,

1. அரங்கேற்றம் 2. ஒத்திகை
3. நிகழ்ச்சி 4. மேடையேற்றம்

இ) இருபொருள் அமையத் தொடுப்பது,

1. உவமை 2. சிலேடை
3. இணைமொழி 4. அடுக்குத் தொடர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈ) நினைக்க நினைக்க நெஞ்சம் இனிக்கிறது. இதில் நினைக்க நினைக்க என்பது,

1. இரட்டை மொழி  2. அடுக்கு மொழி
3. இணை மொழி  4. மரபுத் தொடர்

உ) அவளுக்கு வாய் மூத்து விட்டது. வாய் மூத்தல் என்பது,

1. இரட்டை மொழி  2. அடுக்கு மொழி
3. இணை மொழி  4. மரபுத் தொடர்

10. பொருத்தமான சொல்லைத் தெரிந்து இடைவெளி நிரப்புக.

அ) ஒரே சொல் இரண்டு முதல் நான்கு வரை அடுக்கி வருவது ..................................... எனப்படும்.

ஆ) தனியாகப் பிரித்துப் பொருள் கூற முடியாதபடி இரண்டு இரண்டு சொல்லாய் வருவது ..................................... எனப்படும்.

இ) ஒரே பொருளைத் தரும் ஒன்றுக்கு மேற்பட்ட சொற்கள் வருவது ..................................... எனப்படும்.

ஈ) மொழி, வார்த்தை, கிளவி என்பன சொல்லைக் குறிக்கும் வேறு .........................................

உ) ஒன்றின் பெயரைக் குறிக்கும் சொல் ..................................... எனப்படும்.

| இரட்டைக்கிளவி | பெயர்களாகும் | அடுக்குத் தொடர் |
|---|---|---|
| பெயர்ச்சொல் | ஒருபொருட்பன்மொழி | |

11. பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

அல்லும் பகலும் வேலை செய்தும் அரை வயிற்றுக் கஞ்சிதானும் கிடையாமல் எத்தனையோ ஏழைகள் நோயாளிகளாய் பிறரிடம் கையேந்தி வாழ்கின்றனர். அவர்கள் கையாலாகாதவர் அல்லர். உழைப்பிலே ஊக்கம் உடையவர். அவர்களின் அல்லல் நீங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டுமானால் முதலில் உழைப்பிற் கேற்ற கூலி பெற வேண்டும். அரசாங்கம் அவர்களுக்குத் தகுந்த வேலைவாய்ப்பளித்து உணவு, உடை, உறையுள் என்பன வழங்கல் வேண்டும். அதனால் அவர்களது துன்பம் சூரியனைக் கண்ட பனி போல நீங்கிவிடும். நாடும் விறுவிறு என செழிப்பு அடைந்து விடும்.

அ) இவ்வுரைப்பகுதியில் கூறப்பட்ட பிரதான கருத்தைத் தெரிக.

1. ஏழைகளின் கண்ணீர் 2. உழைப்பின் உயர்வு
3. ஏழைகளுக்கு உதவுதல் 4. நாடு செழிப்புற

ஆ) அரைவயிற்றுக் கஞ்சி என்றால்,

1. போதிய உணவு 2. போதாத உணவு
3. நிறையுணவு 4. பால் உணவு

இ) கையேந்துதல் என்றால்,

1. தண்ணீர் குடித்தல் 2. பிச்சை எடுத்தல்
3. சண்டை பிடித்தல் 4. கையை உயர்த்துதல்

ஈ) நோயாளி என்பது,

1. ஆண்பால்
2. பெண்பால்
3. ஆண்பாலுக்கும் பெண் பாலுக்கும் பொது
4. பால் பகுப்பில் அடங்காது

உ) கையாலாகாதவர் என்றால்,

1. ஒரு தொழிலும் தெரியாதவர் 2. கை இல்லாதவர்
3. நோயாளிகள் 4. உதவாக்கரைகள்

ஊ) இங்கு கூறப்பட்ட ஏழைகள்,

1. சோம்பேறிகள் 2. உழைப்பாளிகள்
3. பிச்சைக்காரர்கள் 4. பயனற்றவர்கள்

எ) மனிதனின் அத்தியாவசியத் தேவைகள் எவை?

.......................................................................................................

.......................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எ) இதில் வந்துள்ள இணை மொழிகளில் ஒன்று எழுதுங்கள்.

.......................................................................................................

ஐ) இதில் வந்துள்ள இரட்டை மொழி ஒன்று எழுதுங்கள்.

.......................................................................................................

ஒ) இதில் வந்துள்ள உவமைத் தொடர் ஒன்று எழுதுங்கள்.

.......................................................................................................

ஓ) பின்வரும் சொற்களுக்கு ஒத்த கருத்துச் சொல் எழுதுங்கள்.

1. அல்லல் : ............ 2. செழிப்பு : ...........................

3. ஏழைகள் : ............ 4. உழைப்பு : ...........................

5. கூலி : .................. 6. உறையுள் : ...........................

ஔ) பின்வரும் சொற்களுக்குப் பொருத்தமான எதிர்க்கருத்துச் சொற்களை எழுதுங்கள்.

1. செல்வன் : ............ 2. சுறுசுறுப்பு : ...........................

2. வேலைவாய்ப்பு :...................................

4. நாடு : .................................................

12. பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து 100 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை (கொப்பியில்) எழுதுங்கள்.

அ) நான் விரும்பும் பொழுதுபோக்கு.

ஆ) எனது செல்லப் பிராணி.

இ) நூறு ரூபாத் தாள் ஒன்றின் சுயசரிதை

- **ஒப்படை:**

1. பழைய முத்திரைகளைச் சேகரித்து அவற்றைச் சிறு (அல்பம்) புத்தகம் ஆக்குங்கள்.
2. பத்திரிகைகளில் வெளியான அதிசயத் தகவல்களைச் சேகரித்து உங்கள் வகுப்பில் காட்சிப்படுத்துங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14

# ஔவையாரும் அதியமானும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. பின்வருவனவற்றுள் ஒரு சொல் ஒத்த கருத்து அல்லாதது. அதன் கீழ்க் கோடிடுங்கள்.

அ) 1. வள்ளல் 2. கொடையாளி
3. இரப்போன் 4. ஈவோன்

ஆ) 1. நல்லாட்சி 2. கொடுங்கோலாட்சி
3. செங்கோலாட்சி 4. நீதிதவறாத ஆட்சி

இ) 1. உரம் 2. வலிமை
3. பலம் 4. வஞ்சனை

ஈ) 1. துஞ்சுதல் 2. துயிலுதல்
3. விழித்தல் 4. இறத்தல்

உ) 1. செப்புங்கள் 2. கூறுங்கள்
3. சொல்லுங்கள் 4. கேளுங்கள்

2. தடித்த எழுத்தில் அமைந்த சொற்களின் எதிர்க்கருத்துச் சொல்லைத் தெரிவு செய்யுங்கள்.

அ. அரசின் **இரகசியம்** இன்று பத்திரிகைகளில் வெளியாகிவிட்டது.
1. உளவு 2. இயல்பு 3. பரகசியம் 4. கலாரசியம்

ஆ. முறையிடுதற்கு என்னுடைய அரண்மனைக்கு நிச்சயம் **வருவீர்கள்.**
1. வரக்கூடும் 2. வரத்தவறாதீர்
3. வரமாட்டீர்கள் 4. வந்தீர்கள்

இ. சண்டையை நிறுத்துவது **சாத்தியம்** இல்லை.
1. அசாத்தியம் 2. அசாதாரணம்
3. அசத்தியம் 4. ஆறுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈ. என் முடிவில் உறுதியாக உள்ளேன்.

1. திடமாக
2. வல்லமை
3. அறுதி
4. நெகிழ்வாக

உ. பரீட்சையில் சித்தியடைவேன் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

1. உறுதி
2. எண்ணம்
3. நிச்சயம்
4. அவநம்பிக்கை

**3. இடைவெளிகளை நிரப்புதற்குப் பொருத்தமான இரட்டைக் கிளவிகளைத் தெரிவு செய்யுங்கள்.**

அ. ஆசிரியரைக் கண்டதும் மாணவர் ......................... எழுந்தனர்.

1. படீரென 2. கணீரென 3. சரேலென 4. சுள்ளென

ஆ. கோபங் கொண்ட குமார் ......................... பல்லைக் கடித்தான்.

1. விறுவிறென
2. நெறநெறென
3. மளமளவென
4. புலபுலவென

இ. நேற்றுப் பெருமழை .................... பொழிந்தது.

1. சோவென 2. சீயென 3. பொள்ளென 4. பொருக்கென

ஈ. நீல வானில் நட்சத்திரங்கள் ............. என மின்னின.

1. வழுவழு 2. பளபள 3. மளமள 4. பொலபொல

உ. தாயின் மரணச் செய்தியைக் கேட்டதும் மாலாவின் கண்களிலிருந்து ...................... எனக் கண்ணீர் வழிந்தது.

1. மளமள
2. பொலபொல
3. கரகர
4. தொணதொண

**4. விடை எழுதுங்கள்.**

அ. ஔவையாரும் அதியமானும் என்னும் நாடகத்தில் இடம்பெறும் முக்கிய பாத்திரங்கள் யாவர்?

..........................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ. மன்னர் அதியமானிடம் நெல்லிக் கனியைக் கொண்டு வந்து கொடுத்தவர் யார்? அதனை எங்கிருந்து பெற்றதாகக் கூறினார்?

.................................................................................................

.................................................................................................

இ. மன்னருக்குக் கொடுக்கப்பட்ட நெல்லிக்கனியின் சிறப்புக்கள் எவை?

.................................................................................................

.................................................................................................

ஈ. அதியமான் நெல்லிக்கனியை யாரிடம் வழங்கினார்? அதற்கு அவர் கூறிய விளக்கம் யாது?

.................................................................................................

.................................................................................................

உ. அதியமான் ஔவையிடம் விடுத்த வேண்டுகோள் யாது?

.................................................................................................

.................................................................................................

ஊ. ஔவையார் மன்னருக்குக் கூறிய பதில் யாது?

.................................................................................................

.................................................................................................

எ. ஔவைப் பிராட்டியாரிடம் பரிசுப் பொதிகளைத் திருடிய கள்வன் யார்? எதற்காகத் திருடினான்?

.................................................................................................

.................................................................................................

ஏ. அதியமானின் இச்செயலுக்குக் காரணம் யாது?

.................................................................................................

.................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐ. அதியமான் குறித்த உமது கருத்து யாது?

..................................................................................................

..................................................................................................

ஒ. ஔவைப்பிராட்டியார் குறித்து பத்து வாக்கியங்கள் (கொப்பியில்) எழுதுங்கள்.

**5. பின்வரும் கவிதைகளைப் படித்தபின்னர் கீழுள்ள வினாக்களுக்கு (உங்கள் கொப்பியில்) விடை எழுதுங்கள்.**

1. முல்லை மலர் விரிந்திடுமே
முளரி மலர் குவிந்திடுமே
மல்லிகையும் மலர்ந்திடுமே
வான மெங்கும் இருண்டிடுமே

2. விண்ணகத்துத் தாரகைகள்
விழி திறந்து சிமிட்டுவன
மண் ணகத்து வீடுகளில்
மணி விளக்கு ஏற்றிடுவார்

அ. இக்கவிதைகளிற் கூறப்படும் நேரம் எது?

1. பகல் 2. இரவு 3. காலை 4. மாலை

ஆ. அந்தக் காலத்தைக் காட்டும் நிகழ்ச்சிகளில் மூன்று தருக?

..................................................................................................

..................................................................................................

இ. குவிவது எது? மலர்வன எவை?

..................................................................................................

..................................................................................................

ஈ. 'விழி திறந்து சிமிட்டுவன' என்பதால் நீங்கள் அறிவது யாது?

..................................................................................................

..................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ. ஏற்றிடுவார் என்பது என்ன காலம்?

.......................................................................................................

ஊ. பின்வருவனவற்றுக்குப் பொருத்தமான ஒத்த கருத்துச் சொல் ஒவ்வொன்று எழுதுக.

1. முளரி ..................... 2. விண்ணகம் ...........................

3. மண்ணகம் ............ 4. தாரகைகள் ...........................

எ. பின்வரும் சொற்களுக்குரிய எதிர்க்கருத்துச் சொற்களை இக்கவிதைகளில் இருந்து தெரிந்து எழுதுங்கள்.

1. அணைத்திடுவார் ........... 2. மலர்ந்திடும் ..........................

3. விரிந்திடும் .....................

6. சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழை எனவும் அடைப்புக்குறிக்குள் எழுதுங்கள்.

அ. அற்புத நெல்லிக்கனியை உண்பவர்கள் நீண்ட நாள் உயிர் வாழ்வர். (............)

ஆ. அரண்மனை வாழ்வை ஔவையார் பெரிதும் விரும்புபவர். (............)

இ. சிறகடித்துப் பறக்கும் பறவை போன்றவர் ஔவையார். (............)

ஈ. அதியமான் ஔவையாருக்குப் பரிசில்கள் எதனையும் வழங்கவில்லை. (............)

உ. அந்தக் கள்வன் எங்கிருந்தாலும் பிடித்து வந்து உங்கள் முன் நிறுத்தப்படுவான் என்றார் மன்னர்.(............)

ஊ. தமிழ் மீது கொண்ட பற்றால் அதியமான் தவறு செய்தான். (............)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ. ஆர்வலர் என்றால்,

1. அன்புடையவர் 2. பரிசிலன்
3. கணவன் 4. பெரியோர்

இ. அங்கதம் என்றால்,

1. கொடை 2. தீ
3. நோய் 4. பழிச்சொல்

ஈ. தவிசு என்றால்,

1. ஆசனம் 2. கடல்
3. மோட்சம் 4. பொடிப்பொடியாதல்

உ. சஞ்சலம் என்றால்,

1. நான்முகன் 2. மனக்கவலை
3. திரிதல் 4. வண்டு

ஊ. உண்ணீர் என்றால்,

1. மண்ணீர் 2. குடிப்பதற்கு ஏற்ற நீர்
3. கடல்நீர் 4. உப்புநீர்

எ. உள்ளத்தில் கள்ளம் உடையோர்,

1. பெரியர் 2. சிறியர்
3. வஞ்சகர் 4. அறிஞர்

ஏ. யாரோடும் கூடாமல் மறைந்து வாழ்பவர்கள்

1. வஞ்சகர்கள் 2. வஞ்சகமில்லாதோர்
3. பெரியோர்கள் 4. மூடர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. "அற்ற குளத்தில் அறுநீர்ப் பறவைபோல்" ... எனும் வெண்பாவின் பொழிப்புரை கீழே தரப்பட்டுள்ளது. அதனை நன்கு வாசித்து அதன் கீழ்க் காணும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.

தண்ணீர் உள்ள குளத்தில் கொட்டி, ஆம்பல், நெய்தல் ஆகியன முளைக்கின்றன; வளர்கின்றன. அக்குளத்திலே நீர்ப்பறவைகளும் வாழ்கின்றன. நீர் வற்றியதும் பறவைகள் எல்லாம் அக்குளத்தை விட்டு நீங்கி விடுகின்றன. ஆனால் கொட்டி, ஆம்பல், நெய்தல் மட்டும் குளத்தை விட்டு நீங்காது வாடிக் கருகி மடிகின்றன. அதுபோல வாழ்விலும் தாழ்விலும் இன்பத்திலும் துன்பத்திலும் நீங்காமல் சேர்ந்து இருப்போரே உண்மையான உறவினராவர்.

அ. உண்மையான உறவினர்களின் பண்புகள் யாது?

.......................................................................................................

.......................................................................................................

ஆ. நீர்ப்பறவைகள் மூன்றின் பெயர் தருக?

.......................................................................................................

.......................................................................................................

இ. எத்தகையோர் உண்மையான உறவினர் அல்லாதோர் ஆவர்?

.......................................................................................................

.......................................................................................................

ஈ. உண்மையான உறவினருக்கு எடுத்துக்காட்டாகக் கூறப்பட்டவை எவை?

.......................................................................................................

உ. நீர்ப்பறவைகள் யாருக்கு உவமையாகக் கூறப்பட்டன?

.......................................................................................................

ஊ. இவ்வெண்பாவின் மூலம் புலப்படுத்தப்படும் படிப்பினை யாது?

.......................................................................................................

.......................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. பின்வரும் விடுகதைகளுக்குப் பொருத்தமான விடைகளைத் தெரிவு செய்யுங்கள்.

அ. ஆனை இல்லா ஆனை. என்ன ஆனை?

1. பட்டம் 2. ஊஞ்சல் 3. யானை 4. முந்தானை

ஆ. காட்டில் ஒரு கலைமான் கால் ஒடிந்து நிற்குது: பிடிப்பாரும் இல்லை, அதை அடிப்பாருமில்லை - அது என்ன?

1. மான் 2. செருப்பு 3. கயிறு 4. ஆணி

இ. காட்டில் வாழும் காளைக்கு முதுகில் மூன்று சூடு - அது என்ன?

1. அணில் 2. எருது 3. புலி 4. பூனை

ஈ. குழலூதி இசை பொழிவான், குதூகலம் நமக்களிப்பான்: அழகாக ஊதி விளங்கும் அவன் பணியை ஊர் புகழும் - அது என்ன?

1. புல்லாங்குழல் 2. நாதஸ்வரம்
3. மேளம் 4. வயலின்

உ. சத்தமுண்டு கலகமில்லை, அடியுண்டு காயமில்லை, பூவுண்டு மணமில்லை, முள்ளுண்டு வேலியில்லை - அது என்ன?

1. கோழி 2. மயில் 3. சேவல் 4. காகம்

7. 'அ' தொகுதியில் உள்ள வாக்கியங்களுக்குப் பொருத்தமான தொடர்களை 'ஆ' தொகுதியில் தெரிவுசெய்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுங்கள்.

'அ' தொகுதி

1. நல்லவர்களுக்கு செய்த உதவி நிச்சயமாக நமக்குப் பலன் தரும். ( )
2. ஒரு காரியத்தைச் செய்யத் தொடங்குவோர் அதைத் தகுந்த காலமறிந்து தொடங்க வேண்டும். ( )
3. உருவத்தைக் கொண்டு ஒருவருடைய பண்பை எடை போடக் கூடாது. ( )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. வஞ்சகம் இல்லாதோர் எல்லோருடனும் கூடி வாழ்வார்கள்: தம்மை மறைக்க மாட்டார்கள். ( )

5. வஞ்சகர் கபடமாகவே பேசுவர். ( )

'ஆ' தொகுதி

1. உயர்ந்த மரங்கள் பழுக்கும் பருவகாலம் வந்தால் அன்றி பழுப்பதில்லை.

2. தென்னை மரங்கள் தாள் உண்ட நீரைத் தலையாலே (இளநீராக) தருவதைப் போன்று

3. விஷமில்லாத நீர்ப்பாம்பானது மறைந்து வாழ்வதில்லை.

4. விஷம் உள்ள நாக பாம்பானது புற்றில் மறைந்து வாழ்வது போல

5. தாழம்பூவின் இதழ் பெரிதாகவிருப்பினும் வாசனையில் குறைந்தும் சிறிய மகிழம்பூ வாசனையில் கூடியதாயும் உள்ளது.

8. பின்வரும் வாக்கியங்களில் உள்ள பிழைகளைத் திருத்தி எழுதுங்கள்.

அ. பனை மரங்கள் விழுந்து விட்டது.

..........................................................................................

ஆ. அவள் ஒரு புதிய பேனா ஒன்று வாங்கினாள்.

..........................................................................................

இ. தாத்தா ஒரு நாளும் பொய் சொல்லாது.

..........................................................................................

ஈ. நேசன் நாளை ஊர் வருகிறான்.

..........................................................................................

உ. ஔவையார் நானித் தலை குளிர்ந்தார்.

..........................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. பின்வரும் இணைச்சொற்களுள் பொருத்தமான ஒன்றை வைத்து கோடிட்ட இடத்தை நிரப்பி எழுதுங்கள்.

அ. [வாழை / வாளை] ................................ க்குத் தான் ஈன்ற காய் கூற்றம்.

ஆ. [தோழன் / தோளன்] போர் என்ன வீங்கும் பொருப்பன்ன ....................................

இ. [அழிப்பான் / அளிப்பான்] அடியார்க்கு அருள் ........................... இறைவன்.

ஈ. [தாழ் / தாள்] தெங்கு .................................. உண்ட நீரைத் தலையாலே தரும்.

உ. [வழை / வளை] கைக்கு .......................... அணிந்தாள் வனிதா.

10. முற்பகுதிக்குப் பொருத்தமான பிற்பகுதியைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

அ. நானும் அவனும் நேற்றுக் காலை,

1. இவ்விடம் வருவோம் 2. இவ்விடம் வந்தோம்
3. இவ்விடம் வந்தேன் 4. இவ்விடம் வந்தது

ஆ. 'பணம் இல்லாதவன் பிணம்' என்பது நம் நாட்டில் வழங்கும்,

1. புத்தம் புதுமொழி
2. பழுத்துக் கனிந்த பழமொழி
3. பழந்தமிழ்ச் செய்யுள் மொழி
4. கவிஞர் கனிமொழி

இ. ஏழைகளுக்கு உண்ணும் போது ஒரு கைப்பிடி கொடுத்தல்

1. மிகச்சிறந்த மறமாகும் 2. மிகப்பெரும் குற்றமாகும்
3. மிகச்சிறந்த அறமாகும் 4. மிகப்பெரும் அரமாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈ. பிச்சைக்காரன் பெருமழையில் நனைந்து

1. கொண்டான் 2. கொள்வான்

3. கொள்ளும் 4. கொண்டிருக்கின்றான்

உ. அவன் தந்தையின் அறிவுரையைக் கேட்டு

1. நடந்தானன்று 2. நடந்தானல்ல

3. நடந்தானல்லன் 4. நடந்தேன் அல்லன்

**11. பின்வரும் செய்யுளைப் படித்தபின் அதன் கீழ்க் காணும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.**

'கற்றது கைம்மண்ணளவு கல்லாதது உலகளவென்று
உற்ற கலைமடந்தை ஓதுகிறாள் - மெத்த
வெறும் பந்தயங் கூறவேண்டாம் புலவீர்
எறும்புந் தன்கையால் எண்சாண்'

(அரும்பதம்: ஓதுகிறாள் - கூறுகிறாள், வெறும்பந்தயம் - வீண்வல்லமை, எண்சாண் - எட்டுச்சாண், புலவீர் - புலவர்களே)

அ. கலைமடந்தை என்பவள் யார்? அவள் கூறுவது யாது?

.....................................................................................................

.....................................................................................................

ஆ. உலகில் ஒருவர் கற்றுக்கொண்டதன் அளவு யாது?

.....................................................................................................

.....................................................................................................

இ. உலகில் ஒருவர் கல்லாதது எவ்வளவு? அதனால் நீர் உணர்வது யாது?

.....................................................................................................

.....................................................................................................

ஈ. இச்செய்யுளைப் பாடிய புலவரின் பெயர் என்ன?

.....................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ. புலவர்களுக்கு அவர் கூறும் அறிவுரை யாது?

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

ஊ. எறும்பும் தன் கையால் எட்டுச்சாண் அளவுடையதாகும் என்னும் கூற்றிலிருந்து புலப்படும் உண்மை என்ன?

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

எ. இந்த உண்மையை அறிவதால் ஆகும் நன்மை என்ன?

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

12. பின்வரும் அடுக்குத்தொடர்களை வைத்து வாக்கியம் அமையுங்கள்.

அ. ஓடிஓடி :

.......................................................................................................

ஆ. பெரிய பெரிய :

.......................................................................................................

இ. ஆடிஆடி :

.......................................................................................................

ஈ. கொத்துக்கொத்தாய் :

.......................................................................................................

உ. குலைகுலையாய் :

.......................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. பின்வரும் இடைவெளிகளுக்குப் பொருத்தமான அடுக்கு மொழிகளை இட்டு வாக்கியங்களைப் பூரணப்படுத்துங்கள்.

அ. காலிமுகக் கடற்கரையை நோக்கி மக்கள் ................................ சென்றனர்.

1. கூட்டம் கூட்டம் 2. அணிஅணி
3. மெல்ல மெல்ல 4. ஊர்ஊர்

ஆ. அருணன் ................................ பாடல்கள் எழுதுகின்றான்.

1. பக்கம் பக்கம் 2. புதிதுபுதிதாய்
3. வண்ணவண்ண 4. கற்றைகற்றை

இ. வீட்டை இழந்த அன்னம்மா ....................... அலைகிறாள்.

1. கடைகடை 2. வழிவழி
3. தெருத்தெருவாய் 4. உயரஉயர

ஈ. கமலாவின் நகைச்சுவையைக் கேட்ட விமலா ......................... சிரித்தாள்.

1. அழுதுஅழுது 2. வளைந்து வளைந்து
3. குழுக்குழுவாய் 4. விழுந்து விழுந்து

உ. நீல வானில் விண்மீன்கள் ............................ மறைந்தன.

1. நேர்நேர் 2. பக்கம்பக்கம்
3. மின்னிமின்னி 4. கூட்டம் கூட்டம்

14. பின்வரும் வாக்கியங்களில் காணப்படும் உவமைகளின் உறுப்புக்களை கீழ்க்காணும் அட்டவணையில் எழுதுங்கள்.

அ. விமலா அன்னம் போல நடை நடந்து திருமண மண்டபத்தை அடைந்தாள்.

ஆ. குழந்தையின் கண்களிலிருந்து முத்துப் போலக் கண்ணீர்த்துளிகள் சிந்தின.

இ. மாலாவின் காந்தள் மலர் போன்ற கைகளில் வண்டுகள் மொய்த்தன.

ஈ. கைகேயியின் மொழி கேட்ட இராமனின் முகம் அன்றலர்ந்த செந்தாமரை போல விளங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ. ஔவையின் அமுதம் போன்ற வார்த்தைகள் அதியமானை ஆனந்தத்தில் ஆழ்த்தின.

| உவமேயம் | உவமானம் | உவமைஉருபு | பொதுத்தன்மை |
|---|---|---|---|
| ...................... | ...................... | ...................... | ...................... |
| ...................... | ...................... | ...................... | ...................... |
| ...................... | ...................... | ...................... | ...................... |
| ...................... | ...................... | ...................... | ...................... |
| ...................... | ...................... | ...................... | ...................... |

15. பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து 15 வாக்கியங்களுக்குக் குறையாமல் (உங்கள் கொப்பியில்) எழுதுங்கள்.

அ. நாங்கள் செய்த சிரமதானம்

ஆ. உமது பாடசாலையில் நிகழ்ந்த விளையாட்டுப்போட்டி

இ. நான் மருத்துவரானால்

ஈ. நான் ஒரு பழைய சட்டை (சுயசரிதை)

- **ஒப்படை**

1. ஔவையார் இயற்றிய நூல்களைப் பட்டியலிடுக.
2. நீர் விரும்பும் கவிதைகளைச் சேகரித்து சிறு நூலாக்குக.
3. நீர் பங்கு கொண்ட சிரமதானம் குறித்த மேடைப்பேச்சு ஒன்றினை எழுதுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாதிரி வினாத்தாள் - ஆண்டிறுதிப் பரீட்சை

தரம் : 6

பகுதி I : 40 புள்ளிகள் நேரம் : 30 நிமிடம்

- எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுங்கள்.
- பொருத்தமான விடையைத் தெரிந்து அதன் கீழ்க் கோடிடுங்கள்.

1. நாம் கவனமாகக் கற்றல் வேண்டும். கற்றல் என்பதன் ஒத்த கருத்துச் சொல்,

   1. கற்பித்தல் 2. படித்தல்
   3. பாடமாக்குதல் 4. பாடுதல்

2. மண்ணகமும் விண்ணகமும் மகிழ்ந்தது. மண்ணகம் என்பதன் ஒத்த கருத்துச் சொல்,

   1. பூமி 2. வானம் 3. ஆண்டு 4. இல்லம்

3. இறைவன் ஆதியும் அந்தமும் இல்லாதவன். அந்தம் என்பதன் ஒத்த கருத்துச் சொல்,

   1. தொடக்கம் 2. முடிவு 3. எல்லை 4. வீரம்

4. மத ஊர்வலத்தில் சென்ற யானை மதம் பிடித்து ஓடியது. மதம் என்பதன் ஒத்த கருத்துச் சொல்,

   1. சமயம் 2. கொள்ளை 3. வெறி 4. அறிவு

5. வீதி ஒழுங்கைக் கடைப்பிடித்தல் வேண்டும். ஒழுங்கு என்பதன் எதிர்க் கருத்துச் சொல்,

   1. கட்டளை 2. திரள் 3. விதி 4. ஒழுங்கீனம்

6. கூட்டம் பிற்பகல் இரண்டு மணிக்குத் தொடங்கியது. பிற்பகல் என்பதன் எதிர்க் கருத்துச் சொல்,

   1. காலை 2. நண்பகல் 3. மாலை 4. முற்பகல்

7. கண்ணன் மிளகாய்க் கன்றுகளைச் செறிவாக நட்டான். செறிவாக என்பதன் எதிர்க் கருத்துச் சொல்,

   1. அடர்த்தியாக 2. நெருக்கமாக
   3. ஐதாக 4. கூட்டமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. மொலு மொலு என்று இடைவிடாது கதைத்தான். மொலு மொலு என்பது,

1. அடுக்குமொழி 2. அடைமொழி
3. இரட்டைச்சொற்றொடர் 4. வினையெச்சம்

9. 'கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை' எனும் பழமொழி கூறும் உண்மைப்பொருள்

1. பேராசை 2. தெளிவு
3. தகாத ஆசை 4. முயற்சி

10. கலையும் பிணையும் இணையாகச் செல்கின்றன. பிணை என்ற சொல் குறிக்கும் விலங்கு,

1. ஆண்யானை 2. ஆண்மான்
3. பெண்மான் 4. பிடி

11. 'ஈ-மெயில்' என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படும் சொல்லின் தமிழ் வடிவம்,

1. தொலைக்காட்சி 2. வானொலி
3. மின்னஞ்சல் 4. கணினி

12. 'வாரீங்களா' என்பதன் எழுத்து வழக்கு

1. வாரீங்களா 2. வருகிறீர்களா
3. வாறீங்களா 4. வாறீர்களா

13. 'வீதியின் குறுக்கே செல்லாதீர்' - இது ஒரு

1. கூற்று வாக்கியம் 2. ஏவல் வாக்கியம்
3. வினா வாக்கியம் 4. உணர்ச்சி வாக்கியம்

14. இளமையிலே நற்பழக்கங்களைப் பழகுதல் வேண்டும். இக்கருத்தைப் புலப்படுத்தும் பழமொழி

1. விளையும் பயிரை முளையிலே தெரியும்
2. இளமையிற் கல்வி சிலையில் எழுத்து
3. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா
4. ஆகும்காய் பிஞ்சிலே தெரியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. 'தத்தம் தகைமை அறியாது வீண் ஆசைப்படக் கூடாது' என்னும் பொருளை விளக்கும் பழமொழி

1. கங்கையில் முழுகினாலும் காக்கை அன்னமாகுமா?
2. முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்படலாமா?
3. கைக்கெட்டியது வாய்க்கு எட்டவில்லை
4. பள்ளிக்கணக்கு புள்ளிக்கு உதவாது

16. 'தூய்மை மாசற்றது' என்னும் கருத்துடைய பழமொழி

1. வெளுத்ததெல்லாம் பாலல்ல
2. வெள்ளைக்கில்லை கள்ளச் சிந்தை
3. மின்னுவதெல்லாம் பொன்னல்ல
4. மனம் கொண்டது மாளிகை

17. கமுகின் இளையது பிள்ளை என்பது போலப் பனையின் இளையது,

1. கன்று 2. குட்டி 3. வடலி 4. நாற்று

18. கணவனை இழந்தவள் விதவை போல மனைவியை இழந்தவன்

1. மணமகன் 2. நாயகன் 3. தலைமகன் 4. தபுதாரன்

19. புலவர் நினைத்த காரியம் கைகூடியது. கைகூடல் என்றால்,

1. கையும் கையும் சேர்தல் 2. ஒற்றுமை உண்டாதல்
3. நிறைவேறுதல் 4. ஒன்று சேர்தல்

20. குறுகுறு என்று குழந்தை நடந்தது. இங்கே குறுகுறு என்ற சொற்றொடர்

1. உவமை 2. பழமொழி
3. இரட்டைக்கிளவி 4. அடுக்குத்தொடர்

21. பத்து + நான்கு இவற்றைச் சேர்த்து எழுதினால்

1. பதுநான்கு 2. பதின்நான்கு
3. பத்துநான்கு 4. பதினான்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22. குளியலறை என்ற சொற்றொடரைப் பிரித்து எழுதினால்,

1. குளியல் + அறை
2. குளி + யறை
3. குளிக்கும் + அறை
4. குளிய + லறை

23. கோபாவேசம் கொண்டு பேசிய இருவரும் இறுதியில் கைகலந்தனர். கைகலத்தல் என்றால்,

1. கைகுலுக்குதல்
2. சந்தோஷம் கொண்டாடல்
3. சண்டை பிடித்தல்
4. மல்யுத்தம் புரிதல்

24. நீயும் நானும் அவனும் உயரத்தில்

1. ஒத்திருக்கின்றனர்
2. ஒத்திருக்கின்றீர்கள்
3. ஒத்திருக்கின்றோம்
4. ஒத்திருக்கின்றார்

25. நீ கேட்டாலன்றி நான்

1. சொல்லேன்
2. சொல்வேன்
3. சொன்னேன்
4. சொன்னான்

26. தகுந்த பருவம் வந்தாலன்றிப் பழங்கள்

1. பழா
2. பழுக்கும்
3. பழுக்காது
4. பழாது

27. "ஔவையாரின் மூதுரையைப் படி" என்பது

1. கூற்று வாக்கியம்
2. ஏவல் வாக்கியம்
3. மெய்ப்பாட்டு வாக்கியம்
4. வினா வாக்கியம்

28. பின்வருவனவற்றில் எழுவாய் அடைமொழி கொண்ட வாக்கியம்

1. தங்களுக்கோர் துன்பமுறாமல் நான் காப்பேன்.
2. கண்ணன் மல்லிகை மலர் பறித்தான்.
3. வெள்ளைப்பூனை பாற்குடத்தை உருட்டியது.
4. ஓதுவது ஒழியேல்.

29. ஐயையோ! நான் அங்கு வரமாட்டேன். இது,

1. வினா வாக்கியம்
2. ஏவல் வாக்கியம்
3. மெய்ப்பாட்டு வாக்கியம்
4. கூற்று வாக்கியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30. கருமேகம் சூழ்ந்த வானம் மழையை அள்ளிப் பொழிந்தது. இவ்வாக்கியத்தின் அடைமொழி

1. அள்ளி
2. வானம்
3. கருமேகம் சூழ்ந்த
4. பொழிந்தது

31. வாழையின் பிஞ்சு கச்சல் என்பது போல மாவின் பிஞ்சு,

1. சுளை
2. வடு
3. குலை
4. கொத்து

32. மாணவர் மண்டபத்தை அலங்கரித்தனர். மண்டபம் என்பது,

1. சினைப்பெயர்
2. இடப்பெயர்
3. குணப்பெயர்
4. தொழிற்பெயர்

33. நாட்டார் பாடல்களில் பெரிதும் இடம்பெறுவது,

1. எழுத்து வழக்கு
2. பேச்சுவழக்கு
3. செந்தமிழ் வழக்கு
4. தராதரத் தமிழ்

34. கொழுப்புச்சத்து உள்ளவை

1. வெண்ணெய்
2. கோதுமை
3. மீனெண்ணெய்
4. பால்

35. மலையின் கூட்டம் மலைத்தொடர் என்பது போலப் பூவின் கூட்டம்

1. கொத்து
2. வரிசை
3. குவியல்
4. கற்றை

36. கீழ்வருவனவற்றில் எதிர்காலம் சுட்டும் சொல்

1. பாடினேன்
2. சென்றன
3. வருகின்றேன்
4. உண்ணும்

37. ஆலையில் அகப்பட்ட கரும்பு போல - இவ்வுவமையின் உட்பொருள்

1. மீளாச்சஞ்சலம்
2. மீளா அழிவு
3. பயனின் அழிவு
4. உருகுதல்

38. சூரியனைக் கண்ட தாமரை போல - இதன் உட்பொருள்

1. கவர்ச்சி
2. மலர்ச்சி
3. உயர்ச்சி
4. சிறப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

39. பஞ்சுக் குவியல் போல வெண்மேகம் காணப்பட்டது. இதில் வந்த உவமேயம்

1. பஞ்சு
2. பஞ்சுக்குவியல்
3. போல
4. வெண்மேகம்

40. தங்கத்தாம்பாளம் போல மாலைச் சூரியன் பொன்னிறமாகத் தோன்றியது - இதில் வந்த உவமானம்

1. தங்கம்
2. தாம்பாளம்
3. தங்கத்தாம்பாளம்
4. மாலைச்சூரியன்

## பகுதி : II

60 புள்ளிகள் நேரம் : 1 மணி 30 நிமிடம்

- **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுங்கள்.**
- **தெளிவாக உறுப்பமைய எழுதுங்கள்.**

**1. பின்வருவனவற்றுள் ஒன்றைப் பற்றி 100 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

அ. நான் விரும்பும் புலவர்
ஆ. எனது பொழுதுபோக்கு
இ. நான் ஆசிரியரானால்
ஈ. நான் ஒரு பழைய சட்டை (சுயசரிதை)
உ. உழைப்பே உயர்வு தரும் எனும் தலைப்பில் ஒரு சிறுகதை.

(20 புள்ளிகள்)

**2. பின்வரும் பேச்சு வழக்குச் சொற்களின் கருத்தை எழுத்து வழக்கில் எழுதுங்கள்.**

அ. ராவெல்லாம் :..........................................................

ஆ. இன்னிக்கு :..........................................................

இ. இருந்துச்சு :..........................................................

ஈ. புத்தகத்திலை :..........................................................

உ. கேட்டிச்சு :..........................................................

(5 புள்ளிகள்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. கீழே தரப்பட்டுள்ள உவமைத் தொடர்களை இடைவெளிகளில் பொருத்தமுற வைத்து எழுதுங்கள்.

அ. கவிஞர் கலைச்செல்வன் ................................................ கவிஞர்கள் மத்தியில் வீற்றிருந்தார்.

ஆ. அருணனின் அயல்நாடு செல்லும் எண்ணம் ............................ ஆயிற்று.

இ. மகன் வீடு திரும்பியதும் தாயின் கவலை எல்லாம் ............................................ மறைந்தது.

ஈ. பரீட்சையில் சித்தி பெற்ற கண்ணனுக்குப் புலமைப்பரிசில் கிடைத்தமை ...................................................... ஆனது.

உ. குழந்தையின் கையில் அகப்பட்ட பாடப்புத்தகம் ...................... சிதைந்துள்ளது.

1. சூரியனைக்கண்ட பனிபோல
2. பழம் நழுவிப் பாலில் விழுந்தாற்போல
3. தாரகை நடுவில் தண்ணிலவு போல
4. குரங்கின் கையில் அகப்பட்ட பூமாலை போல
5. ஊமை கண்ட கனவு போல

(5 புள்ளிகள்)

4. பின்வரும் சோடிச் சொற்களின் பொருள் விளங்க அவற்றை வாக்கியத்தில் அமைத்து எழுதுங்கள்.

அ. மரி, மறி : ....................................................................

ஆ. களி, கலி : ....................................................................

இ. உழை, உலை : ..............................................................

ஈ. மனம், மணம் : ...........................................................

உ. உரை, உறை : .............................................................

(5 புள்ளிகள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. அ. பின்வரும் பாடல்களைப் படித்து அவற்றின் பொருளைச் சுருக்கமாக (கொப்பியில்) எழுதுங்கள்.

ஆ. அவற்றின் கீழ்உள்ள வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.

அரச நீழலில் புத்த மாமுனி
ஆறு வற்சரம் பெற்ற யோகினைப்
பரவு பாரினுக்(கு) அருளுமாறு போற்
பாத பங்கயத் தருவி பாயுமே.

உண்ட செந்தமிழ்ச் சைவநூல் அமுது
ஓங்க நல்லை வந்தருளு நாவலன்
கண்டனப் பிரசங்க மாமெனக்
கதிரை மாமலை அருவி பாயுமே.

(சோமசுந்தரப்புலவர்)

அ. புத்தர் பெருமான் எதன் கீழ் இருந்து தவம் புரிந்தார்?

..........................................................................................

ஆ. பாதபங்கயம் என அழைக்கப்படும் மலை எது?

..........................................................................................

இ. நாவலர் அவதரித்த இடம் யாது?

..........................................................................................

ஈ. நாவலர் செய்த பணிகள் சில எழுதுக.

..........................................................................................

..........................................................................................

உ. கதிரை மாமலையில் இருந்து பாயும் அருவியின் பெயர் என்ன?

..........................................................................................

(10 புள்ளிகள்)

9. உமது பிறந்த நாள் கொண்டாட்டத்திற்கு வருமாறு நண்பன் / நண்பிக்கு ஒரு கடிதம் எழுதுக. (10 புள்ளிகள்)

10. உணவு தொடர்பான பழமொழிகள் ஐந்து எழுதுக.

(5 புள்ளிகள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடைக்குறிப்புக்கள்

(ஒவ்வொரு செயலிலும் சில வினாக்களுக்குரிய விடைகளும் விடைக் குறிப்புகளும் தரப்பட்டுள்ளன. வேறு சில மாணவரால் விரித்து எழுதப்பட வேண்டியன. சிக்கலற்ற வினாக்களுக்கு விடைகள் தரப்படவில்லை. அவற்றை மாணவர் சுயமாகவே சிந்தித்து எழுதுதல் இயலும். இம்முறையால் மாணவரின் சிந்தனைத் திறனும் கிரகிக்கும் ஆற்றலும் கற்பனை வளமும் வளர்ச்சியடையலாம்)

### செயல் : 1

1. அ. 5 ஆ. 4 இ. 5 ஈ. 4 உ. 5
   ஊ.. 4 எ. 3
2. அ. 2 ஆ. 1 இ. 2 ஈ. 3 உ. 1
3. அ. 2 ஆ. 3 இ. 2 ஈ. 3 உ. 2
4. அ. வாடகை ஆ. கொண்டிருந்தது
   இ. பரவசமும் ஈ. வரிசையாக
   உ. முதல்
5. அ. கங்காருவைப் போலத் தாவிச் செல்கிறது.
   ஆ. வியர்வையுடன் கடிதம் சுமக்கும் தபால்காரர்கள், தொழிலாளர்கள், தெருத்தெருவாய்க கூவி விற்கும் மீன் வியாபாரிகள் என்போர் கனவுகளிலும் ஈருருளியுடனே வருவார்கள்.
   இ. காற்றில்லாவிட்டால் ஈருருளியில் பயணம் செய்ய முடியாது. நாம் சுவாசிப்பதற்குக் காற்று இன்றியமையாதது. அதுபோல ஈருருளியும் பயணத்தை மேற்கொள்வதற்குக் காற்று அவசியம். சில்லுகளின் காற்றுப்பைகளில் காற்றில்லாவிட்டால் அதிற் பயணம் செய்ய முடியாது. இதன் காரணமாகவே ஈருருளியும் நம்மைப் போலவே சுவாசிக்கின்றது எனக் கூறப்படுகிறது.
   ஈ. சங்கரது ஈருருளிக் கடையில் ஏழெட்டுப் பெரிய ஈருருளிகள், ஒன்றிரண்டு சின்ன ஈருருளிகள் காணப்பட்டன. ஏகப்பட்ட ஈருருளிப் பாகங்கள் இருந்தன. ஓட்டை ஒட்ட ஒரு தண்ணீர்த்தொட்டி இருந்தது. எங்கள் கிராமத்தில் உள்ள ஒரே ஒரு ஈருருளி நிலையம் இதுதான். இங்குள்ள ஈருருளி ஒவ்வொன்றின் பின்னாலும் சங்கர் என்ற பெயர் எழுதப்பட்டிருந்தது.
   உ. குருமுதலியோருக்குக் கொடுக்கும் பொருள்.
   ஊ. கிராமம் இயற்கை அழகுமிக்கது. அங்குள்ள மக்கள் கள்ளங் கபடமற்றவர்கள். பறவைகளின் ஒலி, இதமான காற்று, பசுமை தவழும் மரங்கள், வளைந்து நெளியும் ஒற்றையடிப்பாதைகள், இனிமையான நாட்டார் பாடல்கள் இவை அனைத்தும் கிராம வாழ்க்கையின் சிறப்புக்களாக மிளிர்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. அ. சரி ஆ. சரி இ. பிழை ஈ. சரி உ. சரி
8. அ. 2 ஆ. 1 இ. 3 ஈ. 2 உ. 3
10. அ. 3 ஆ. 3 இ. 2 ஈ. 3 உ. 1

## செயல் : 2

1. அ. 4 ஆ. 2 இ. 1 ஈ. 2 உ. 3
2. அ. வடம், கயிறு ஆ. மாடு, எருது இ. எறும்பி. எறும்பு
   ஈ நண்பன், தோழன் உ. மெய்ம்மை, உண்மை
3. அ. சரி ஆ. பிழை இ. சரி ஈ. பிழை
   உ. சரி
4. அ. நண்பன் ஆ. திரியும் இ. பொருளாகும்
   ஈ. உள்ளது உ. கேட்பேன்
5. 1. வறுமை 2. புறம் 3. நண்பன் 4. விண்
   5. திற 6. பொய் 7. சூடு 8. சுருக்குவேன்
6. 1. தோழன் 2. நண்பி 3. கவிதாயினி 4. கடுவன்
   5. பசு 6. உழவன் 7. ஈசுவரன் 8. பிராட்டி
7. 1. கீச்சிடும் 2. குரைக்கும் 3. ஊளையிடும் 4. கனைக்கும்
   5. இரையும் 6. பாடும் 7. சொல்லும் 8. குறுகுறுக்கும்

## செயல் : 3

1. அ. 3 ஆ. 4 இ. 3 ஈ. 2 உ. 2
2. அ. 5 ஆ. 3 இ. 5 ஈ. 4 உ. 2
3. அ. மகிழ்ச்சி, விருப்பம் ஆ. கேட்டல்
   இ. செய்யுள் நயஉணர்வு
   ஈ. வித்துவக்காய்ச்சல் (புலமைச்செருக்கு)
   உ. ஆனை ஊ. புலவர்கள் தலைவர்
4. அ. மாவட்டம் ஆ. ஓர் ஊர் இ. தனது கவித்திறத்தைக் காட்டி, பாண்டிய மன்னனை மகிழ்வித்து, தம்முடைய வறுமைப் பிணியைப் போக்கிக் கொள்ளும் நோக்குடன் சென்றார்.
   ஈ. பஞ்சக் கோலமாக இருந்தது. ஒட்டி உலர்ந்த வயிறும் குழி விழுந்த கண்களும் உடையவராக இருந்தார். உடலை மூடிக் கொள்ளக் கந்தல் உடையே இருந்தது. குளிரிலிருந்து உடலைப் பாதுகாக்க துணியோ, போர்வையோ இல்லாதிருந்தார்.
   உ. பாண்டிய மன்னன் வாவிக்கரையில் சில செங்கால் நாரைகளைக் கண்டார். அவற்றின் கூர்மையான அலகு, பவளம் போன்ற சிவந்த நிறம் என்பன அரசனைக் கவர்ந்தன. பவளம் போன்ற சிவந்த அலகைத் திறந்து ஒரு நாரை மீனைக் கொத்தியபோது அந்நாரையின் அலகைக் கண்கொட்டாது பார்த்து மகிழ்ந்தார். அந்த அலகு அவர் உள்ளத்தில் ஒரு கேள்வியைத் தோற்றுவித்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊ. "புலவர்களே! இன்று வாவிக் கரையில் சில நாரைகளைக் கண்டேன். அவற்றின் அலகின் நீண்ட வடிவமும் கூர்மையும் என் நெஞ்சைக் கவர்ந்தன. அந்த நாரைகளின் அலகுக்குப் பொருத்தமான ஓர் உவமை சொல்லுங்கள்" என்று பாண்டிய மன்னன் அவைப் புலவர்களிடம் கேட்டார்.

எ. நாரை மூலம் தூது விடுத்தார்.

ஏ. "உன்னுடைய கணவனைக் கண்டேன். அவன் பேரரசனாகிய பாண்டிய மன்னனுடைய மன்றம் ஒன்றில் கந்தலை உடுத்திக் கொண்டு வேறு ஆடையின்றி வாடைக்காற்றால் மெலிந்து, உடலைக் கையாலும் காலாலும் தழுவி மூடிக் கொண்டு குளிரால் குறுகி பல்லைக் கடித்துக் கொண்டு பெட்டிக்குள் இருக்கும் பாம்பு போல மூச்சொன்றுமே உடையவனாய் உள்ளான். அந்த வறியவனைக் கண்டோம் என்ற செய்தியைச் சொல்லுவாயாக" என்பதே புலவர் நாரை மூலம் மனைவிக்கு அனுப்பிய செய்தியாகும்.

ஐ. "பனையின் கிழங்கைப் பிளந்து வைத்தாற் போன்ற அமைப்புடையது" என்பதாகும்.

5. அ. களைப்புற்றார் ஆ. கலை இ. உளவு
ஈ. உலவுதல் உ. பாழ் ஊ. தளை

6. அ. வினாக்குறி ஆ. ஆச்சரியக்குறி
இ. முற்றுப்புள்ளி ஈ. முற்றுப்புள்ளி
உ. மேற்கோட் குறி

7. காற்புள்ளி (,) முற்றுப்புள்ளி (.) வினாக்குறி (?) வியப்புக்குறி (!) மேற்கோட் குறி ("     ")

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 8. | அ. 2 | ஆ. 3 | இ. 4 | ஈ. 1 | உ. 4 |
| 9. | அ. 2 | ஆ. 3 | இ. 1 | ஈ. 2 | உ. 3 |
| 11. | அ. 4 | ஆ. 3 | இ. 2 | ஈ. 1 | உ. 2 |
| 12. | அ. 2 | ஆ. 2 | இ. 4 | ஈ. 1 | உ. 4 |

## செயல் : 4

1. அ. 2 ஆ. 3 இ. 2 ஈ. 3 உ. 4

2. அ. கண்ணம்மை ஆ. பண்டிதர்
இ. செந்தமிழ் ஈ. குருதீட்சை உ. மீன்பாடும்

3. அ. சரி ஆ. பிழை இ. சரி ஈ. சரி உ. சரி

4. அ. பட்டதாரி ஆ. யாழ்நூல் இ. மொழிபெயர்த்துள்ளார்
ஈ. அண்ணாமலை உ. முத்தமிழ்

6. அ. 4 ஆ. 5 இ. 3 ஈ. 4 உ. 5

## செயல் : 5

1. அ. 5 ஆ. 3 இ. 4 ஈ. 5 உ. 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. அ. முறுவல் ஆ. அழகு இ. அறிவியல் ஈ. புனிதம்
உ. உரைத்தார்

3. அ. சுருக்கியது (மடித்தது) ஆ. மண்ணில்
இ. சிறுமை ஈ. வெறுப்பு உ. தூற்றுவர் ஊ. விற்றார்கள்

7. அ. பெயர்ச்சொல் ஆ. வினைச்சொல்
இ. பெயர்ச்சொல், வினைச்சொல் ஈ. பெயர்ச்சொல்
உ. பெயர்ச்சொல்

## செயல் : 6

1. அ. 3 ஆ. 2 இ. 4 ஈ. 4 உ. 4

2. அ. மனைவி ஆ. உழத்தி இ. மீகாமன் ஈ. பன்மை
உ. சகோதரி

3. அ. 2 ஆ. 2 இ. 1 ஈ. 2 உ. 2

4. அ. புரண்டு புரண்டு ஆ. அல்லும் பகலும்
இ. ஓட்டமும் நடையுமாக ஈ. பச்சைப் பசேலென
உ. குளுகுளு

6. 1. பிராட்டி 2. நிபுணை 3. பண்டிதன் 4. உழத்தி
5. மருத்துவி 6. வித்தகன் 7. அடியான் 8. சீமான்

7. அ. ? ஆ. ‘‘ ’’ இ. ‘‘ ’’ ஈ. கூளம் உ. ஆழி

## செயல் 7

1. அ. தாய் ஆ. மாணவன் இ. நாயகி ஈ. அழகன்
உ. கூனன் ஊ. மருகன் எ. செவிடி ஏ. குணவான்
ஐ. பாட்டன் ஒ. செல்வன்

2. 1. பூக்கள் 2. செடிகள் 3. பறவைகள் 4. மான்
5. கடிகாரம் 6. கனிகள் 7. கதிரை 8. இலை
9. கண் 10. நூல்கள்

3. அ. சரி ஆ. பிழை இ. சரி ஈ. சரி
உ. சரி ஊ. பிழை

4. அ. தன்மை ஆ. படர்க்கை இ. முன்னிலை ஈ. படர்க்கை
உ. படர்க்கை

7. அ. 3 ஆ. 2 இ. 1 ஈ. 3
உ. 2 ஊ. 1

8. அ. 1 ஆ. 4 இ. 3 ஈ. 1 உ. 3

10. அ. பலர்பால் ஆ. ஒன்றன்பால்
இ. பெண்பால் ஈ. பலர்பால்
உ. பலவின் பால் ஊ. பெண்பால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயல் : 8

1. அ. 4 ஆ. 3 இ. 2 ஈ. 4 உ. 4
2. அ. சகோதரர் ஆ. மிருகங்கள் இ. சிறுமி ஈ. ஏழைகள்
உ. மாணவிகள் ஊ. மலர் எ. வாகனம் ஏ. மனிதர்கள்
ஐ. ஆசிரியர் ஒ. தினங்கள்
3. அ. சாதாரண ஆ. தெளிவாக இ. வாகீசன் ஈ. கெடுக்கும்
உ. புகழ்வர்
4. அ. கைகொடுத்தான் ஆ. கண்மூடினார்
இ. செவிமடுத்தான் ஈ. உச்சி குளிர்ந்தாள்
உ. அள்ளியிறைத்தார் ஊ. காலில் விழுந்தனர்
எ. கயிறு திரித்தான் ஏ. கடன் கழிக்கிறார்கள்
ஐ. காற்றாய்ப் பறந்தான் ஒ. கம்பி நீட்டினான்
5. அ. உழத்தி ஆ. சீமாட்டி இ. செல்வம் ஈ. மண் உ. பிடி
6. அ. 1 ஆ. 3 இ. 1 ஈ. 1 உ. 2
7. அ. 2 ஆ. 2 இ. 3 ஈ. 2 உ. 4

## செயல் : 9

1. அ. 3 ஆ. 5 இ. 4 ஈ. 3 உ. 5
2. அ. மலர்ச்சி ஆ. மெதுவாக
இ. சோம்பல், புகழ்ச்சி ஈ. சுத்தவாளிக்கு, விடுதலை
உ. குழப்பம், துன்பம்
3. அ. 2 ஆ. 3 இ. 2 ஈ. 4 உ. 2
5. அ. 2 ஆ. 3 இ. 3 ஈ. 1 உ. 2
7. அ. ஆனைப்பந்தி ஆ. சனக்கும்பல்
இ. காலாட்படை ஈ. திறப்புக்கோவை
உ. தென்னந்தோப்பு ஊ. மலர்ச்செண்டு
எ. மாஞ்சோலை ஏ. நூற்பந்து
ஐ. சேனைத்திரள் ஒ. ஆநிரை
8. 1. முகவரி 2. விளிப்பு 3. உள்ளுறை அல்லது செய்தி
4. முடிப்பு
9. அ. சரி ஆ. பிழை இ. சரி ஈ. பிழை உ. சரி
10. அ. 2 ஆ. 1 இ. 2 ஈ. 3 உ. 2

## செயல் : 10

1. அ. 5 ஆ. 4 இ. 3 ஈ. 5 உ. 2
2. அ. 3 ஆ. 2 இ. 1 ஈ. 2 உ. 3
ஊ. 1
3. அ. 3 ஆ. 2 இ. 4 ஈ. 3 உ. 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. அ. 1 ஆ. 4 இ. 3 ஈ. 2 உ. 3
7. அ. 3 ஆ. 3 இ. 2 ஈ. 2 உ. 4
8. அ. 3 ஆ. 3 இ. 4 ஈ. 3 உ. 2
11. அ. பாடுவான் ஆ. தொடுத்தாள்
இ. ஓடுகிறது ஈ. ஆடுவாள்
உ. பெறுவோம்

## செயல் : 11

1. அ. 6 ஆ. 5 இ. 6 ஈ. 3 உ. 2
2. அ. 1 ஆ. 3 இ. 1 ஈ. 2 உ. 3
3. அ. 3 ஆ. 2 இ. 3 ஈ. 2 உ. 2
4. அ. ஓடுவார்கள் ஆ. வருகிறார்கள்
இ. விரைகின்றன ஈ. வளம் பெறும்
உ. அங்கமாகும்
6. அ. இன்றைக்கு ஆ. பிள்ளையினுடைய
இ. சொல்லுகிறது ஒன்றும் ஈ. போகிறீரா
உ. போகவில்லையா ஊ. அன்றைக்கு
எ. வைத்திருக்கிறது ஏ. நினைக்கவில்லை
ஐ. இருக்கிறது ஒ. கொண்டாடுகிறேன்
7. அ. 2 ஆ. 3 இ. 2. ஈ. 3 உ. 3
8. அ. 2 ஆ. 3 இ. 2 ஈ. 2
உ. 4. ஊ. 3

## செயல் : 12

1. அ. 5 ஆ. 4 இ. 5 ஈ. 4 உ. 2
2. அ. 2 ஆ. 3 இ. 4 ஈ. 4 உ. 3
ஊ. 2
3. அ. 3 ஆ. 4 இ. 2 ஈ. 4 உ. 2
4. அ. 2 ஆ. 4 இ. 1 ஈ. 2 உ. 3
5. அ. 4 ஆ. 2 இ. 3 ஈ. 3 உ. 3
6. அ. 3 ஆ. 2 இ. 1 ஈ. 3 உ. 3
7. அ. 3 ஆ. 3 இ. 2 ஈ. 2 உ. 3
ஊ. 1 எ. 3 ஏ. 4 ஐ. 3 ஒ. 2
9. அ. சரி ஆ. சரி இ. பிழை ஈ. பிழை
உ. சரி ஊ. பிழை

## செயல் : 13

1. அ. புதிய (நவீன), அநேகர் ஆ. நேரத்தை (காலத்தை), கருமங்களில்
இ. நிறங்கள், காணலாம் ஈ. பூரணமான, இன்பத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ. ஆச்சரியத்தை, முறைகளில்

2. அ. மகிழ்ச்சியான, இன்பம் நிறையும் ஆ. உவர் நீர், கடினம்
இ. சிறிதளவு, கிடைக்கும் ஈ. திறந்து, நல்லதல்ல
உ. ஆறுதல், குழப்பமான, துணைபுரியாது

3. அ. இரங்கும் ஆ. இறங்கு இ. கரையில் ஈ. கறை
உ. அரிய ஊ. அறி எ. பரவையை ஏ. பறவை
ஐ. கூறை ஒ. மறச்

6. அ. கிடுகிடு ஆ. குறுகுறுக்கும்
இ. கணகணக்கிறது ஈ. பொலுபொலு
உ. கிளுகிளுத்தது

8. அ. 1 ஆ. 2 இ. 1 ஈ. 2 உ. 4

9. அ. 3 ஆ. 2 இ. 2 ஈ. 3 உ. 4

10. அ. அடுக்குத்தொடர் ஆ. இரட்டைக்கிளவி
இ. ஒருபொருட் பன்மொழி ஈ. பெயர்களாகும்
உ. பெயர்ச்சொல்

11. அ. 3 ஆ. 2 இ. 2 ஈ. 3 உ. 1
ஊ. 2 எ. உணவு, உடை, உறையுள்
ஏ. அல்லும் பகலும் ஐ. விறுவிறு
ஒ. சூரியனைக் கண்ட பனி போல
ஓ. 1 - துன்பம் , 2 - வளம் , 3 - தரித்திரர்கள் , 4 - முயற்சி
5 - வேலைக்குப் பெறும் ஊதியம் , 6 - வீடு (துயிலுமிடம்)
ஔ. 1. ஏழை 2. சோம்பல் 3. வேலைவாய்ப்பின்மை 4. காடு

## செயல் : 14

1. அ. 3 ஆ. 2 இ. 4 ஈ. 3 உ. 4

2. அ. 3 ஆ. 3 இ. 1 ஈ. 4 உ. 4

3. அ. 1 ஆ. 2 இ. 1 ஈ. 2 உ. 2

5. அ. 4
ஆ. முல்லை மலர் விரிதல், முளரி (தாமரை) மலர் குவிதல், வானம் இருளுதல், வீடுகளில் விளக்கேற்றல்
இ. முளரி, முல்லை, மல்லிகை
ஈ. விண்மீன்கள் மின்னி மின்னி ஒளி வீசுகின்றன என்பதை.
உ. எதிர்காலம்
ஊ. 1. தாமரை , 2. வானம் , 3. பூமி , 4. நட்சத்திரங்கள்
எ. 1. ஏற்றிடுவார் , 2. வாடிடும் , 3. குவிந்திடும்

6. அ. சரி ஆ. பிழை இ. சரி ஈ. பிழை
உ. சரி ஊ. சரி

7. இரண்டு சொற்களையோ அல்லது இரண்டு தொடர்களையோ இணைப்பதற்குப் பயன்படும் சொல்லை இணைப்பிடைச் சொல் என்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. ''ஆனால்'' , 2. ''இருப்பினும்'' , 3. ''ஆகையால்'' , 4. ''அதனால்'', 5. ''இதனால்'' , 6. ''ஏனென்றால்'' , 7. ''எனினும்''

8. அ. மோகன் எல்லாப் பாடங்களிலும் திறமை காட்டினான்; அதனால் பல பரிசுகள் பெற்றான்.

ஆ. சாந்தி இரவு பகலாகப் படித்தாள் எனினும் பரீட்சையில் சித்தி பெறவில்லை.

இ. வீதி குன்றும் குழியுமாய்ச் சீரின்றிக் கிடந்தது; அதனால் வாகன விபத்துக்கள் அடிக்கடி நிகழ்ந்தன.

ஈ. நல்லதொரு இசை நிகழ்ச்சியைக் கேட்டனர். அதனால் சபையோர் கரகோஷம் செய்து தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்தனர்.

உ. அவரால் நீண்ட தூரம் நடக்க முடியாது எனினும் விழாவுக்கு வருகைதரத் தவறவில்லை.

ஊ. செங்கோலாட்சி நடைபெறுவதாகச் சொல்கிறீரே ஆனால் கொடுங்கோலாட்சி நடைபெறும் நாடாக உள்ளதே.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 9. | அ. மிளகாய்ப்பழம் | ஆ. புகையிலை | இ. அணில் | | |
| | ஈ. கோயில் கோபுரம் | உ. எதிரொலி | ஊ. விரல்நகம் | | |
| 11. | அ. 1 | ஆ. 4 | இ. 4 | ஈ. 2 | உ. 2 |

## செயல் : 15

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | அ. 6 | ஆ. 5 | இ. 3 | ஈ. 5 | உ. 4 |
| 2. | அ. 1 | ஆ. 3 | இ. 2 | ஈ. 3 | உ. 2 |
| 3. | அ. 3 | ஆ. 1 | இ. 3 | ஈ. 2 | உ. 4 |
| 5. | அ. 4 | ஆ. 1 | இ. 3 | ஈ. 1 | உ. 3 |
| 7. | அ. 3 | ஆ. 5 | இ. 2 | ஈ. 4 | உ. 1 |
| 8. | அ. 2 | ஆ. 3 | இ. 4 | ஈ. 3 | உ. 2 |
| | ஊ. 3 | | | | |
| 9. | அ. 2 | ஆ. 3 | இ. 4 | ஈ. 3 | உ. 4 |
| 10. | அ. நாய் | ஆ. தேள் | இ. உலகப்படம் | ஈ. கண்ணாடி | |
| | உ. மரம் | | | | |

## செயல் : 16

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | அ. 4 | ஆ. 3 | இ. 4 | ஈ. 2 | உ. 4 |
| | ஊ. 2 | | | | |
| 2. | அ. 2 | ஆ. 3 | இ. 1 | ஈ. 4 | உ. 3 |
| 3. | அ. 5 | ஆ. 8 | இ. 6 | ஈ. 9 | உ. 2 |
| | ஊ. 10 | எ. 4 | ஏ. 3 | ஐ. 1 | ஒ. 7 |
| 4. | அ. 1 | ஆ. 2 | இ. 3 | ஈ. 4 | உ. 2 |
| 5. | அ. 1 | ஆ. 4 | இ. 3 | ஈ. 1 | உ. 1 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. அ. உயிரும் உடம்பும் போல
ஆ. கண்ணை இமை காப்பது போல
இ. அனலிடைப்பட்ட மெழுகு போல
ஈ. கடல் மடை திறந்தாற் போல உ. நீறு பூத்த நெருப்புப் போல

10. 1) 1 2) 2 3) 4 4) 3

11. அ. 3 ஆ. 2 இ. 1 ஈ. 3

12. அ. 3 ஆ. 2 இ. 4 ஈ. 2 உ. 3

## செயல் : 17

2. அ. வெல்லம் ஆ. மறம் இ. மணம் ஈ. கிலி
உ. புளி

3. அ. 4 ஆ. 3 இ. 1 ஈ. 2 உ. 1

4. அ. தொலைநகல் ஆ. தொலைநோக்கி
இ. தொலைநோக்கு ஈ. தொலைத்தொடர்பு
உ. தொலைக்காட்சி

5. அ. தனி ஆ. தொடர் இ. தொடர் ஈ. தனி
உ. தொடர்

6. அ. 1,4 ஆ. 2,3 இ. 1,4 ஈ. 1,3 உ. 2,4

8. அ. புத்தகங்களை கவனமாக நாம் பாதுகாக்க வேண்டும்.
ஆ. ஆசிரியர் சொற்கேட்டு நடப்பது மாணவர் கடமையாகும்.
இ. வண்ண மலர்கள் நிறைந்த உறையாகிய உடையை அணிந்த நாங்கள் அழகாகக் காட்சியளித்தோம்.
ஈ. எஜமானியின் தொல்லை தாங்க முடியாது வேலைக்காரி ஓடிவிட்டாள்.
உ. எனது சேவையைத் தொடரும் வாய்ப்புக் கிட்டும்.

9. அ. விண்மீன் ஆ. பலூன் இ. தையற்காரன்
ஈ. வானம் உ. வாழை

11. அ. நாற்குணம் ஆ. பஞ்சாங்கம்
இ. தேயிலை ஈ. மூவிடம் உ நாற்பொருள்

## செயல் : 18

1. அ. அலங்கோலமாக ஆ. மாலை இ. செலவு
ஈ. முடிவு உ. அழிவு

2. அ. 2 ஆ. 4 இ. 4 ஈ. 3 உ. 2

4. அ. தன்மை ஆ. தன்மை இ. முன்னிலை ஈ. படர்க்கை
உ. படர்க்கை

6. அ. இன்பதுன்பம் ஆ. ஆடிப்பாடி
இ. அங்கும் இங்கும் ஈ. மூலைமுடுக்கு
உ. அருமை பெருமை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. அ. 3 ஆ. 1 இ. 2 ஈ. 2 உ. 3

11. அ. அனலிலிட்ட மெழுகு போல ஆ. கீரியும் பாம்பும் போல
இ. உயிரும் உடம்பும் போல
ஈ. கடல் மடை திறந்த வெள்ளம் போல உ. காட்டுத் தீபோல

12. அ. கொம்பு ஆ. மணம் இ. துதிக்கை ஈ. தந்தம்
உ. இலை

13. அ. வானத்தில் ஆ. முறிந்து இ. களைகளை ஈ. கமகம
உ. திருதிரு

## செயல் : 19

1. அ. 5 ஆ. 4 இ. 5 ஈ. 3 உ. 3

2. அ. அழுவார் ஆ. தோல்வியையும்
இ. வேற்றுமையை ஈ. தாழ்வோம்
உ. இகழ்ந்தனர்

4. அ. 3 ஆ. 3 இ. 2 ஈ. 3 உ. 2

5. தூர நிகழும் நிகழ்வெல்லாம்
துளியும் சிரமம் இல்லாமல்
நாளும் பொழுதும் வீட்டினிலே
நாங்கள் பார்க்க உதவிடும்

8. அ. மலரினைப் போல உண்மை மலர வேண்டும்.
ஆ. நிலத்தினைப் போலப் பொறுமை நிலைத்திட வேண்டும்.
இ. விண்ணினைப் போல எண்ணம் விரிந்திட வேண்டும்.
ஈ. தமிழினைப் போல வாழ்வு தழைக்க வேண்டும்.
உ. நமது விழியினைப் போல மொழி விளங்கிட வேண்டும்.

9. அ. உப்பு ஆ. நிலா இ. மின்னல் ஈ. குள்ளநரி
உ. சமிக்ஞை விளக்கு (சிக்னல்)

## செயல் : 20

1. அ. 1 ஆ. 2 இ. 3 ஈ. 2 உ. 5

2. அ. சுருங்கி விட்டது ஆ. முகம் பார்த்து
இ. அறிமுகப்படுத்தியுள்ளது ஈ. வீட்டு
உ. மாட்டின் கூப்பர்

3. அ. 2 ஆ. 1 இ. 2 ஈ. 2 உ. 4

5. 1. பதிப்புரை 2. அரங்கேற்றம் 3. விகடகவி 4. கைம்மருந்து
5. ஐம்பொறிகள் 6. ஒற்றி 7. முத்தமிழ் 8. கோமாளி
9. வதந்தி 10. உறுதி

7. அ. தரவுத்தளம் ஆ. வலைப்பக்கம்
இ. மென்பொருள் ஈ. இணையமொழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ. மின்னஞ்சல் ஊ. செல்லிடத் தொலைபேசி
எ. ஊடகம் ஏ. இறுவட்டு
ஐ. பல்லூடகம் ஒ. குறுஞ்செய்தி

8. அ. 3 ஆ. 1 இ. 3 ஈ. 4 உ. 2
9. அ. 4 ஆ. 3 இ. 4 ஈ. 4 உ. 3
10. அ. 4 ஆ. 2 இ. 3 ஈ. 3 உ. 4

## செயல் : 21

1. அ. 1 ஆ. 2 இ. 1 ஈ. 2 உ. 2
2. அ. சரி ஆ. பிழை இ. சரி ஈ. சரி
   உ. பிழை ஊ. சரி
10. அ. 3 ஆ. 2 இ. 2 ஈ. 2 உ. 3

## செயல் : 22

1. அ. மூதுரை ஆ. முப்பது இ. ஔவையார் ஈ. வேண்டும்
   உ. ஆராய்ந்து ஊ. மதித்தல் எ. வஞ்சகம்
2. அ. சரி ஆ. பிழை இ. பிழை ஈ. சரி
   உ. பிழை ஊ. சரி எ. பிழை
4. அ. 2 ஆ. 1 இ. 4 ஈ. 1 உ. 2
   ஊ. 2 எ. 3 ஏ. 1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெரிந்து கொள்வோம்

## சொற் கூட்டத்துக்கு ஏற்ற தனிச்சொல்

1. இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவு விழா - வெள்ளிவிழா
2. நம்பமுடியாத பொய்க்கதை. - கட்டுக்கதை
3. உற்றார் பெற்றார் எவரும் அற்றவர் - அநாதை
4. தேடிய பொருளைப் பிறர்க்கு ஈயாதவன் - உலோபி
5. வரையாது வழங்குபவன் - வள்ளல்
6. தன் வரலாறு - சுயசரிதை
7. கதி அற்றவர் - அகதி
8. கணவனை இழந்தவள் - விதவை
9. வைத்தியரின்றித் தாமே மருந்து கொடுப்பது - கைம்மருந்து
10. கப்பல் செலுத்துபவன் - மீகாமன்
11. ஒரே வயிற்றிற் பிறந்தோர் - சகோதரர்
12. தெருக்கள் சந்திக்கும் இடம் - சந்தி
13. விகடமாகவும் பரிகாசமாகவும் பேசுபவன் - விகடகவி
14. தேர், யானை செலுத்துபவன் - பாகன்
15. ஆநிரை மேய்ப்பவன் - ஆயன்
16. மந்தை மேய்ப்பவன் - இடையன்
17. உளவு (வேவு) பார்ப்பவன் - ஒற்றன்
18. முனிவர் வசிக்கும் வீடு - ஆச்சிரமம்
19. போர் வீரர்கள் தங்கியிருக்கும் இடம் - பாசறை
20. அன்னதானம் வழங்கும் இடம் - அன்னசாலை
21. அரண்மனைகளில் அரச மகளிர் தங்குவதற்கு அமைக்கப்பட்ட தனியிடம் - அந்தப்புரம்
22. உப்பின்றிச் சமைத்த அரிசிச் சாதம் - அவிசு
23. கோட்டையைச் சூழ்ந்து அரணாய் அமைந்துள்ள பெருங்காடு - காவற்காடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24. ஒரே சமயத்தில் எட்டு விடயங்களை
அவதானிக்கும் ஆற்றல் படைத்தவன் - அட்டாவதானி
25. கடவுள் இல்லையென வாதிடுபவன் - நாஸ்திகன்
26. மெய், வாய், கண், மூக்கு செவி என்பன - ஐம்பொறிகள்
27. நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்பன - ஐம்பூதங்கள்
28. தனக்கே உரிமையாக முழுப் பொருட்களையும்
தானே அனுபவித்தல் - ஏகபோகம்
29. ஒரு நூலுக்கு நூலாசிரியர் தவிர்ந்த பிறர்
வழங்கும் புகழுரை - அணிந்துரை
30. அறிஞர் வாதிடும் களம் - பட்டிமன்றம்
31. ஒரு நூலைப் பதிப்பிப்போர் அந்நூலைப்
பற்றிக் கூறும் உரை - பதிப்புரை
32. வேறு துணை இல்லை எனத் தன்னை
ஒருவரிடம் ஒப்படைத்தல் - சரணாகதி
33. இறந்த போர் வீரனின் புகழ் கருதி
நடப்படும் கல் - நடுகல்
34. இறந்தவர்களுக்காகச் செய்யப்படும் சிரார்த்தம் - பிதிர்க்கடன்
35. ஒரு தண்டில் பல மலர்கள் மலர்ந்துள்ள பூங்கொத்து - மஞ்சரி
36. ஐம்பதாவது ஆண்டின் முடிவில் எடுக்கும் விழா- பொன்விழா
37. மாலையில் அல்லது இரவில் கூடும் சந்தை - அல்லங்காடி
38. உலகநடை அறிந்து ஒழுகுதல் - ஒப்புரவு
39. பேணிக் காத்துத் தருமாறு ஒருவரை
இன்னொருவரிடம் ஒப்படைத்தல் - ஓம்படை
40. நிலத்தின் கீழ் அமைக்கப்படும் இரகசிய வழி - சுருங்கை
41. பகை அரசனுக்குக் கொடுக்கப்படும் திறைப்பொருள் - கப்பம்

## உவமைத் தொடர்கள்

1. பசுத்தோல் போர்த்த புலி போல.
2. நீர் மேல் குமிழி போல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. கல் மேல் எழுத்துப் போல.

4. நீர் மேல் எழுத்துப் போல.

5. காகம் இருக்கப் பனம்பழம் விழுந்தது போல.

6. அனலிடை மெழுகு போல.

7. காட்டில் எறித்த நிலவு போல.

8. கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டது போல.

9. மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதிப்பது போல.

10. இணை பிரிந்த அன்றில் போல.

11. உடுக்கை இழந்தவன் கை போல.

12. அடியற்ற மரம் போல.

13. அத்தி பூத்தாற் போல.

14. அணை கடந்த வெள்ளம் போல

15. ஆடி ஓய்ந்த பம்பரம் போல.

16. ஈருடலும் ஓர் உயிரும் போல.

17. எட்டாப் பழத்துக்குக் கொட்டாவி விட்டது போல.

18. எலியும் பூனையும் போல.

19. கண்ணை இமை காப்பது போல.

20. ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள் போல.

21. கிணற்றுத் தவளை போல.

22. சாடிக்கு மூடி போல.

23. தவித்த முயல் அடிப்பது போல.

24. நாயும் பூனையும் போல.

25. பெட்டிப் பாம்பு போல.

26. சகடக் கால் போல.

27. உள்ளங்கை நெல்லிக்கனி போல.

28. அனலிற் பட்ட புழுப் போல.

29. கல்லிலே நாருரிப்பது போல.

30. அத்தி பூத்தாற் போல.

31. அடியற்ற மரம் போல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

32. எடுப்பார் கைப்பிள்ளை போல.
33. கடன்பட்டார் நெஞ்சம் போல.
34. பொன் காத்த பூதம் போல.
35. காட்டுத் தீ போல.
36. வேலியே பயிரை மேய்ந்தாற் போல.
37. குளிக்கப் போய்ச் சேறு பூசியது போல.
38. குரங்கின் கைப் பூ மாலை போல.
39. ஏட்டுச் சுரைக்காய் போல.
40. ஓடும் புளியம் பழமும் போல.
41. புல் நுனி மேல் நீர் போல.
42. பகலவனைக் கண்ட பனி போல.
43. இலை மறை காய் போல.
44. எருமை மாட்டின் மேல் மழை பெய்தது போல.
45. தாரகை நடுவண் தண்மதி போல.
46. நத்தை வயிற்றில் முத்துப் போல.
47. குன்றின் மேலிட்ட தீபம் போல.
48. குடத்துள் இட்ட விளக்குப் போல.

## பழமொழிகள்

1. அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.
2. அகதிக்கு ஆகாயமே துணை.
3. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?
4. அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு.
5. ஆழமறியாமல் காலை விடாதே.
6. அடியாத மாடு படியாது.
7. அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்.
8. ஆறிலும் சாவு நூறிலும் சாவு.
9. ஆனைக்கும் அடி சறுக்கும்.
10. ஆடத் தெரியாதவள் அரங்கு பிழை என்றாளாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. கண்டது கற்கப் பண்டிதன் ஆவான்.

12. ஆசை வெட்கம் அறியாது.

13. ஆற்றிலே போட்டாலும் அளவறிந்து போடு.

14. அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு.

15. அடாது செய்பவன் படாது படுவான்.

16. பேராசை பெருநட்டம்.

17. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.

18. அழுத பிள்ளை பால் குடிக்கும்.

19. காற்றுள்ள போதே தூற்றிக்கொள்.

20. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்.

21. கோயில் இல்லா ஊரிற் குடியிருக்க வேண்டாம்.

22. அரசன் எவ்வழியோ குடிகள் அவ்வழி.

23. ஆடையில்லா மனிதன் அரை மனிதன்.

24. ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்.

25. ஆயிரம் காக்கைக்கோர் கல்.

26. உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா?

27. ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது.

28. யானை வரும் பின்னே மணியோசை வரும் முன்னே.

29. பட்ட காலிலே படும். கெட்ட குடியே கெடும்.

30. கந்தையானாலும் கசக்கிக் கட்டு.

31. கண்கெட்ட பின் சூரிய நமஸ்காரம் ஏன்?

32. தாயைப் போல பிள்ளை நூலைப் போல சேலை.

33. அழுதழுதும் பிள்ளை அவளே பெற வேண்டும்.

34. பாம்பின் கால் பாம்பறியும்.

35. விளையும் பயிரை முளையிலே தெரியும்.

36. வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்.

37. கிட்டப் போனால் முட்டப் பகை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரபுத் தொடர்கள்

1. அள்ளிக் குவித்தல் - மிகச் சம்பாதித்தல்.
2. பேய்க்கதை - பயனற்ற பேச்சு.
3. அறைகூவுதல் - போருக்கு அழைத்தல்.
4. ஆழம் பார்த்தல் - ஒருவனது அறிவு முதலியவற்றை ஆராய்தல்.
5. உடும்புப் பிடி - தான் கொண்டதை விடாது பற்றுதல்.
6. இடங்கொடுத்தல் - கண்டிப்பின்றி நடக்க விடுதல்.
7. இட்டுக் கட்டுதல் - இல்லாததை ஏற்றிச் சொல்லல்.
8. இரண்டுங் கெட்டான் - நன்மை தீமை அறியாதவன்.
9. இனிப்புக் காட்டுதல் - ஆசை உண்டாக்குதல்.
10. உப்பில்லாப் பேச்சு - பயனற்ற உரையாடல்.
11. எடுத்தெறிதல் - மதிப்பின்றி நடத்தல்.
12. எடுப்பார் கைப்பிள்ளை - யாவருக்கும் எளிதில் வசப்படக்கூடியவன்.
13. ஒற்றைக் காலில் நிற்றல் - விடாப்பிடியாய் நிற்றல்.
14. இளிச்ச வாயன் - எளிதில் ஏமாறுபவன்.
15. கதை கட்டுதல் - பொய்ச் செய்தி கிளப்புதல்.
16. கரை சேர்தல் - உய்வடைதல்.
17. கருவறுத்தல் - முற்றாய் அழித்தல்.
18. கரைத்துக் குடித்தல் - முற்றாகக் கற்றறிதல்.
19. குரங்குப் பிடி - பிடிவாதம்.
20. கையைக் கடித்தல் - பொருள் நட்டமடைதல்.
21. கைகூடுதல் - சித்தியடைதல்.
22. திக்குமுக்காடுதல் - தடுமாறுதல்.
23. சீட்டுக் கிழித்தல் - வேலையினின்றும் நீக்குதல்.
24. துண்டு விழுதல் - நட்டமடைதல்.
25. தோள் கொடுத்தல் - உதவி செய்தல்.
26. செவிமடுத்தல் - அவதானமாகக் கேட்டல்.
27. ஓடெடுத்தல் - பிச்சையெடுத்தல்.
28. அள்ளியிறைத்தல் - வாரி வழங்குதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29. ஆறப்போடுதல் - காலந்தாழ்த்தல்.

30. கைதளர்தல் - வறுமையுறுதல்

31. கழுத்தறுத்தல் - தீமை செய்தல்.

32. காது குத்தல் - ஏமாற்றுதல்.

33. கை கலத்தல் - சண்டையிடுதல்.

34. கை தூக்கி விடுதல் - துன்பத்தில் உதவுதல்.

35. கைவிரித்தல் - கொடுத்தற்கு எதுவுமில்லை எனத் தெரிவித்தல்.

36. தலைகீழாய் நிற்றல் - பிடிவாதம் கொள்ளல், செருக்குடன் நடத்தல்.

37. தலையால் நடத்தல் - முறை தவறி நடத்தல்.

38. வயிற்றிலடித்தல் - நட்டத்தை உண்டாக்குதல்.

39. வாய் காட்டுதல் - எதிர்த்துப் பேசுதல்.

40. வாய் புலம்பல் - பிதற்றுதல்.

41. இடித்து உரைத்தல் - வற்புறுத்திக் கூறுதல்.

42. ஈடேறுதல் - உய்வடைதல்.

43. எழுத்தெண்ணிப் படித்தல் - ஒன்றையும் விடாமல் கவனமாக முழுவதையும் வாசித்தல்.

44. ஒத்துப் பாடுதல் - சரியோ பிழையோ எல்லாவற்றுக்கும் ஆமா போடுதல்.

45. கசக்கிப் பிழிதல் - வருத்தி வேலை வாங்குதல்.

46. கடன் கழித்தல் - மனமின்றிச் செய்தல்.

47. சந்தியில் இழுத்தல் - அவமானம் உண்டாக்குதல்.

48. தோப்புக்கரணம் போடுதல் - சொன்னபடியெல்லாம் நடத்தல்.

49. புளிப்புத் தட்டுதல் - சுவை கெடுதல்.

50. பூசி மெழுகுதல் - குற்றத்தை மறைத்தல்.

51. மட்டம் தட்டுதல் - செருக்கு அடக்குதல்.

52. மண்ணாக்குதல் - வீணாக்குதல்.

53. மூடிமறைத்தல் - மறைத்து வைத்தல்.

54. விழலுக்கு இறைத்தல் - வீண் செலவு செய்தல்.

55. இமாலயத் தவறு - மிகப் பெரிய தவறு.

56. குட்டிச் சுவர் - கெட்டழிதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### போர்த்துக்கீச மொழி

யன்னல்
பீப்பாய்
அன்னாசி
கடுதாசி
அலுமாரி
அலவாங்கு
கதிரை
பீங்கான்.

### ஒல்லாந்த (டச்) மொழி

உலாந்தா
தோம்பு
துட்டு
சாக்கு
இலாச்சி
கக்கூசு

### உருது மொழி

உறுமால்
சந்தா
கச்சேரி
மசோதா
அமுல்
கெடுபிடி
ஆசாமி
அசல்
இனாம்
ராஜினாமா.

### தெலுங்கு மொழி

லஞ்சம்
ராணுவம்
ரவிக்கை
டாப்பு
விருது
கவலை
ஒயில்
கொலு

### அரபு மொழி

கலிமா
மதரஸா
தலாக்
ஈமான்
சைத்தான்
வசூல்
இலாகா
தகவல்
சக்காத்
இமாம்
றம்ழான்
ஹஜ்

### பாரசீக மொழி

சர்க்கார்
சிப்பந்தி
சால்வை
துப்பாக்கி.

### கிரேக்க மொழி

ஓரை
சுருங்கை
யவனர்

### கன்னட மொழி

அட்டிகை
சமாளித்தல்
சொத்து

### மராத்தி மொழி

அட்டவணை
சாம்பார்
வில்லங்கம்
அபாண்டம்

### பிரெஞ்சு மொழி

பட்டாளம்
துருப்பு
குசினி

### ஆங்கில மொழி

கார்
கம்பனி
கோடு
கிரிக்கெற்
ஒட்சிசன்
பேப்பர்

### மலையாள மொழி

சந்தடி
கொச்சி
தளபாடம்
அச்சன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




லங்கா புத்தகசாலை
F.L. 1-14, டயஸ் பிளேஸ்,
குணசிங்கபுர, கொழும்பு-12.
தொ.பே. : (011) 2341942
தொ. நகல் : (011) 2459431

LANKA BOOK DEPOT
ISBN 955-1013-91-3
9 789551 013912



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


PRICE : Rs. 150.00